பஞ்சாங்கம்

மணி 1 காதை 9

பு[illegible] 1924

[illegible]

24 JAN 1925
MADRAS

# பஞ்சாமிர்தம்

ஒரு மாதாந்தரப் பத்திரிகை

நான் ஒரு மானுடன் : நான் மதியாதன
மானுட வாழ்வில் இலை.

மாலை—I  மார்கழி—1924  காசு—9

## இந்தியர் வெளிநாடேறுதல்

(623-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பத்திராதிபர்

### II. கெனியா குடியேற்ற நாடு

இது காறும் இந்தியர் வெளி நாடேறும் பொதுவிஷயத்தைப்பற்றிக் கூறினோம். தாய்நாட்டிலுள்ள இந்தியர்கள் அவ்விஷயத்தில் செய்யத்தக்கது யாதென்று ஆலோசிக்கு முன், வெளியேறிய இந்திய சகோதரர் சகோதரிகள் யாதானும் ஒரு குடியேற்ற நாட்டிலே, எவ்வண்ணம் நடத்தப் படுகின்றனர் என்பதை விவரமாய்க் கவனித்தல் நலமாகும். தமசுதந்திர முள்ள பிறநாடுகளை விட்டு, நம்மையாளும் பிரிட்டிஷ் பாராளுமன்றமே ஆண்டு வரும் கெனியாவைப் பற்றிச் சிறிது கூறுவோம்.

ஆபிரிக்கா கண்டத்தின் கீழ்க்கரையிலே, ஸான்ஸிபார் என்னும் தீவுக்கு வடபாலாக உள்ள பிரதேசம் கெனியா என்று வழங்குகின்றது. வடக்கே அபிஸீனியாவும் ஸோமாலிலாந்தும், தெற்கே தங்கானியிகாவும், மேற்கே யுகாந்தாவும் விக்டோரியா நியான்ஸா ஏரியும், கிழக்கே கடலும், அதன் எல்லைகளாகும். கெனியாவின் நிலப்பரப்பு, ஏறத்தாழ இரண்டு லக்ஷம் சதுர மைல்; அதாவது, அங்கிலேயர் தாய் நாட்டினும் இருமடங்குக்கு மேலாகும். இந்நாட்டின் ஆதிக்குடிகள், படிப்பு நாகரிகங்கள் இல்லாத ஆபிரிக்கரே யாவர்.

207652



கி. பி. 9-வது நூற்றாண்டிலே, முதல் முதல் அராபியர் சென்று கெநியாவில் குடியேறினர். இப்பொழுது கெநியாவின் தலைநகராயும், ஆபிரிக்காவின் கீழ்க்கரையிலே ஒப்புயர்வற்ற சிறப்புவாய்ந்த துறைமுகத்தை உள்ளதாயும் திகழும் மொம்பஸா என்னும் பட்டணம், அராபியர் ஸ்தாபித்ததே. கி. பி. 1498-ல் வாஸ்கோடிகாமா என்னும் போர்த்துகேயர் இந்தியாவை நாடிவந்த வழியிலே, அவர் மொம்பஸாவுக்குச் சென்றபொழுது, அவ்வூர், வாணிகம் செழித்து விளங்கியது; அப்பொழுதே, இந்தியாவின் மேல்கரையைச் சேர்ந்த மலையாள வர்த்தகர் சிலர் அங்கே இருந்தனர். கி. பி. 16—17-ம் நூற்றாண்டுகளில், கெநியா, போர்த்துகேயர் ஆட்சிக் குட்பட்டிருந்தது. அதன் பிறகு, இரண்டு நூற்றாண்டுகளுக்கு, ஸான்ஸிபார் தீவின் சுல்த்தானுடைய ஆட்சியிலிருந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைக்காலில், முதல் முதல் ஜெர்மானியர் ஆபிரிகாவின் கீழ்க்கரை சென்று குடியேறவே, பிரிட்டிஷாருக்கும் மண்ணாசை உண்டாயிற்று. அப்பொழுது ஸான்ஸிபார் சுல்த்தானிடம் பிரிட்டிஷாருக்குச்செல்வாக் கதிகம். எனவே, ஜெர்மானியரும் அவர்களும் மத்தியஸ்தம் செய்து, ஆபிரிக்காவின் கீழ்க்கரைப் பிரதேசங்களிலே தத்தமக்குரிய எல்லைகளை வரை கோலிப் பிரித்துக் கொண்டனர். திருமுக விலாசம் என்னும் தமிழ் நூலிலே, ஒருதட்டான், தான் சாகும் தறுவாயில், தன் மகனுக்குச் சில புத்திமதிகள் கூறும்போது, இன்னார் இன்னார் கொடுத்த பொன்னில் இவ்வளவு இவ்வளவு திருடி யபகரித்துக் கொள்வது தொழில்மரபென்று, உபதேசம் செய்கிறான். அநுபவமில்லாத அவன் மகன்,

"'ஏழைகளுக் கெவ்விதம்?' என்றே வினவ, சீறி, அடா
பாழ்படுவாய்! அன்னவர்க்குப் பங்கேது? ஏழைகள் சொத்(து)
அவ்வளவும் நம்மதுவே; யார்க்கும் தெரிந்தன்றோ?
வவ்வுதொழில் கல்லா மடப்பயலே!—இவ்வுலகில்
இப்படியா நீ பிழைக்கப் போறாய்!"

என்று, அப்பன் மகனை உதைத்ததாகக் கூறி யிருக்கிறது. நாட்டின் சொந்தக்காரரும் பூர்விக குடிகளுமான ஆபிரிக்கரை முற்றும் இகழ்ந்து, மேல் நாட்டார் ஆபிரிகாவைப் பங்கிட்டுக் கொண்டதும், இதுபோலவே இருந்தது.

தமக்குக் கிடைத்த நாட்டைப் பண்படுத்த ஒரு கம்பெனியை 1888-ல் துரைத்தன அநுமதியுடன் பிரிட்டி



ஷார் சிலர் ஏற்படுத்திக்கொண்டு, 1891-ல் சுல்த்தானிடம் குத்தகை யுரிமையும் பெற்றனர். அக்காலம் தொட்டு இன்றுவரை, கெநியாவானது பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் ஆட்சிக்குள் இருந்துவருகின்றது.

1896-ல் மொம்பஸாவி லிருந்து மேற்கு நோக்கி, நாட்டின் உட்பாகங்களினூடே, ரயில்வேபோட ஆரம்பித்தனர். அதுவரை இந்திய வியாபாரிகள் சிலர், ஆதியில் அராபியர் கீழும், பிறகு போர்த்துகேயர் கீழும், பல தலைமுறைகளாக, நானூறு வருஷங்களுக்குமேல், கெநியாவில் செழித்து வாழ்ந்து வந்தனர். நாட்டில் வர்த்தகத்தைப் பரப்பியவர் அவரே. அவரைத் தவிர வேறிந்திய ரில்லை. உள்நாட்டு ரெயில் வேலை, காட்டுச் சிங்கங்களின் உபத்திரவங்களால் தடைப்பட்ட தென்றால், அந்தப் பிரதேசத்தின் தன்மையைப்பற்றி அதிகம் கூறவேண்டுமோ? பிரிட்டிஷ் கம்பெனியாரோ, சிலரான துரைமக்களே; அவர்களும், கூலிவேலை செய்யமாட்டாத தனிகர். எனவே, மேல் நடக்கவேண்டிய வேலையின் சிரமசாத்தியத்தையும் கஷ்டங்களையும் உத்தேசித்து, இந்தியர்களே அவ்வேலையைச் செய்து முடிக்க வல்லவர்களென்று தெளிந்து, இந்தியாவிலிருந்து 20,000 கூலிகள் வரை ரயில்வேக்காகக் கொண்டுபோய்க் குடியேற்றினர். இவர்களுக்கு வேண்டிய சுக சௌகரியங்களை ஏற்படுத்திப் பராமரிக்கும் பொருட்டு, கூலிகளன்றி, குமாஸ்தாக்கள், தச்சர் கொல்லர் முதலிய தொழிலாளிகள், சில்லறை வியாபாரிகள், கடைக்காரர், முதலிய இந்தியர் பலரும் உடன்சென்று குடியேறினர். இவ்வண்ணம் தம் தாய்நாடுவிட்டுக் கப்பலேறி நெடுந்தொலை சென்று ஒரு புதுக் காட்டிலே குடியேறி, அக்காட்டை நாடாகத் திருத்திய இந்தியர், ரயில் வேலை முடிந்தவுடன் இந்தியா திரும்பாது, தம் மனைவி மக்களுடன் கெநியாவிலே நிலைத்து வாழலாயினர். இப்பொழுது கெநியாவின் ஜனசங்கை மொத்தம் 27½ லக்ஷத்துக்குள்ளாகும்: இதில், சுதேசிகளான ஆபிரிக்கர் 27 லக்ஷம்; இந்தியர், 22,822; அராபியர், 8000; ஐரோப்பியர் 9651 பேர்.

கெநியாவின் உட்பிரதேசம் ஐரோப்பியர் வசிக்கச் சௌகரியமான மேட்டு நிலமாயிருந்ததால், ரயில்வே ஏற்பட்டவுடன், கும்பல் கும்பலாய் ஐரோப்பியர் வந்து குடியேறி, துரைத்தனத்தார் உதவியினால் மேட்டு நிலங்களை

207652

யெல்லாம் தமக்கே மானியமாகப் பொத்திக்கொண்டனர். இவ்வண்ணம் முதலில் 500 சதுரமைல் நிலத்தைக் கொண்டவர், தம்தொகை நாளடைவில் அதிகரிக்கவே, இன்னும் அதிக நிலத்தைக் கவர்ந்து, இப்பொழுது, மேட்டு நிலப் பிரதேசம் முழுமையும் ஐரோப்பியர் வசமே யிருக்கின்றது. இம்மட்டோ: இரண்டாந்தரமான நில மென்றும், ஐரோப்பியருக் கேற்ற தன்றென்றும் எண்ணப்படும் தாழ் நிலங்களிலும், பிரிட்டிஷ் துரைத்தனத்தார் உதவியைக் கொண்டு, ஐரோப்பியர் 11,859 சதுரமைல் நிலத்தைக் கைக்கொண்டு விட்டனர். இந்தத் தாழ் நிலத்திலுமே, இந்தியர்க்கு மொத்த முள்ளது, 32 சதுரமைலே; இதிலும் கூட, துரைத்தனத்தார் இந்தியர்க்கென விட்டுக் கொடுத்தது 11 சதுரமைலே யாகும்; மிகுந்த 21 சதுரமைலும், இந்தியர் ஐரோப்பியரிட மிருந்து விலைக்கு வாங்கியது. என்ன ஆச்சரியம் இது! பூமிக்கு உரியவர் அநாகரிக மூடர்களான 27 லக்ஷம் ஆபிரிக்கர்; சிங்கங்கள் சஞ்சரிக்கும் காட்டை நாடாக்கி ரயில் போட்டுப் பாடுபட்டவர், நானூறு வருஷங்களுக்கு மேலாக நாட்டிற் குடியேறி வியாபாரஞ் செய்துவந்த இந்தியரும் அவரினத்தாருமான 23 ஆயிரம் இந்தியர்; 2 லக்ஷம் சதுரமைல் பரப்பில் 32 சதுரமைல் விஸ்தீரணமொழிய எஞ்சியுள்ள பிரதேசங்களில் பயிர்த்தொழிலுக் கேற்ற நிலம் அனைத்தையும் கைக்கொண்டு அநுபவிப்பவரோ, 9651 ஐரோப்பியர்!

ஐரோப்பியர் கூலிவேலை செய்யாதவர் என்று முன்பே கூறினோம். ஆயின் நிலத்தைப் பயிர் செய்பவர் யார்? இந்தியரும் ஆபிரிக்கருமே. ஐரோப்பியர் வந்து தம் நாட்டைக் கவருமுன்பு, சுயேச்சையாய் வாழ்ந்து எப்படியோ பிழைத்து வந்த ஆபிரிக்கருக்கு, இப்பொழுது இவருக்காகக் கூலிவேலை செய்துதான் ஜீவனம் செய்ய வேண்டு மென்ற அவசிய மில்லை. அதனால், துரைத்தன அதிகார உதவியைக் கொண்டு, குடியேறிய ஐரோப்பியர், ஆபிரிக்கரைக் கட்டாயப்படுத்திக் கூலிவேலை வாங்கலாயினர். குதிரை தூக்கிப் போட்டது மன்றிக் குழியும் பறித்த தென்னும் பழமொழிக்கு, இதனினும் ஏற்ற திருஷ்டாந்தம் அகப்படுமோ?

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தாரின் பிரதிநிதியாகும் கவர்னர் கெநியாவை ஆண்டு வந்தார். அப்படி யாள்பவர், குடியேறிய ஐரோப்பியருக்கு அநுசரணையாக விருந்து,



ஆபிரிக்கரை இமிசித்து, ஐரோப்பியர்களுக்கு வேலைசெய்யும்படி நிர்ப்பந்தம்-செய்தால், அவரை யோக்கிய ரென்று மெச்சுவதும், அந்த அநியாயத்துக்கு உடன்படாத கவர்னரைக் கெட்டவரென்று பழித்து விரட்டுவதுமே, சில காலம் ஐரோப்பியரின் சூழ்ச்சியா யிருந்தது. பிறகு வரவரத் துரைத்தனத்தாரின் இணக்கமும் உதவியும் இவ் விஷயத்தில் குறையவே, நேட்டால், டிரான்ஸ்வால் முதலிய ஆபிரிக்கக் குடியேற்ற நாடுகளில் நடைபெறும் குடியரசு போலவே, கெநியாவைத் தாங்களே ஆளும் உரிமையைத் தங்களுக்கும் கொடுக்க வேண்டு மென்று, ஐரோப்பியர் அலட்டத் தொடங்கினர். அவ் வதிகாரம் கிடைத்து விட்டால், கவர்னர் தயவின்றித் தாமே இந்தியரை நசுக்கியும், ஆபிரிக்கரை அடிமைகளாக்கிக் கசக்கி வேலைவாங்கியும், தங்கள் செல்வத்தைச் சிரமமின்றிப் பெருக்கிக் கொள்ளலா மன்றோ? ‘துரைத்தனத்தால் விதிக்கப்பட்ட குறைந்த கூலிக்கு வேலை செய்யும்படி ஐந்து வருஷம் மட்டும் ஆபிரிக்கரைக் கட்டாயப் படுத்தினால், அவ்வைந்தாண்டுகளிலே, ஐம்பது வருஷங்களாகக் கோடிக் கணக்கான பணத்தை வாரியிறைத்துக் கிரிஸ்தவப் பாதிரிகள் பாடுபடுவதா லுண்டாகும் நற்பயனைவிடச் சிறந்த நன்மை விளைந்து, ஆபிரிக்கர் நாகரிக மடைந்து விடுவர்’ என்று, கெனியா ஐரோப்பியரில் ஒருவர், இறகுகூசாது எழுதி யிருப்பதே, இதை நன்கு விளக்கும்.

ஐரோப்பியரின் அலட்டலுக் கிணங்கி, பாராளு மன்றத்தார், கெநியாவிலே, ஜனப் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு சட்டசபையை ஏற்படுத்தினர். இது குடியரசுக்கு அங்குரார்ப்பணம்போ லாயிற்று. ஆயின், ஆட்சிக்குரிய குடிகள் யாவர்? ஆறாயிரத்துக்குக் குறைந்த ஐரோப்பியர், தாங்களே முக்கிய குடிகள்; தமக்கே ஆளுமுரிமையும் வோட்டுக்களும் இருக்கவேண்டும் என்றனர். உண்மையில் நாட்டுக்குரிய 27 லக்ஷம் ஆபிரிக்கரோ, படிப்பின்றி, நாகரிகமின்றி, ஊமைகள் போல அகதியா யிருந்தனர்; ஐரோப்பியரினும் ஐந்து மடங்கு ஜனம்பெருத்த இந்தியரோ, அப்படிக் கின்றித் தாமே நாட்டை முன்னுக்குக் கொண்டுவந்ததனாலும், தாமே வரிப்பணத்தில் பெரும் பாகம் கொடுப்பதனாலும், தாமுள்ள பெருந்தொகைக் கேற்ற உரிமையும் அதிகாரமும் தமக்கு முண்டு என்றனர். சுத்த நியாயத்தையே கவனித்தால், ஐரோப்பியர் இந்தியர் இரு

வருக்குமே யின்றி, நாடு ஆபிரிக்கருக் குரியது; அடுத்த படி நியாயத்தைக் கவனித்தால், இந்தியருக்குப் பெரும் பகுதியும், ஐரோப்பியருக்குச் சிறிதுமே உரியது.

உண்மையும் நியாயமும் இப்படி யிருக்க, கெநியாவி லுள்ள ஐரோப்பியரின் வாதம் என்னவெனில் :—

(1) ஆபிரிக்கர் கள்ளம் கபடறியாத ஏழைகள்; அவர்களை இந்தியர் ஏமாற்றிக் கெடுத்து விடுகின்றனர்; நாங்களே அவர்களைப் பாதுகாத்துச் சீர்ப்படுத்தக் கூடியவர்; அதனால், ஆபிரிக்கருக் காக நாடு எங்கள் ஆட்சியிலேயே இருக்கவேண்டும்.

(2) இந்தியர் அசங்கியமான சுகாதார விரோதமான கெட்ட வழக்கங்க ளுடையவர்; அதனால், வெள்ளையர் வாசஸ்தலங்களை விட்டு வெகு தூரம் விலக்கி, அவர்களைத் தனிச்சேரிகளில் வசிக்கும்படி செய்யவேண்டும்.

(3) மேட்டுப் பிரதேச நிலங்கள், என்றும் ஐரோப்பியர்க்கே சொந்தமா யிருக்கும்படி, இந்தியர் அந்நிலங்களை வாங்கக் கூடாதென்று சட்டம் பிறப்பிக்க வேண்டும்.

(4) சுதேசிகளான ஆபிரிக்கரின் ரக்ஷகர் ஐரோப்பியரும், ஹானிகள் இந்தியருமா யிருத்தலால், இந்தியர் இன்னும் மேன்மேலும் கெநியாவில் வந்து குடியேறாத படி, சட்டத்தால் தடுக்கவேண்டும்; ஐரோப்பியர் மட்டும் எல்லை வரம்பின்றி ஏராளமாய் வந்து குடியேற இடந்தர வேண்டும், என்பனவே.

இவற்றுக்கு இந்தியரின் எதிர்வாதம் என்னவெனில்:-

(1) கள்ளம் கபடறியாத ஆபிரிக்கரை ஏமாற்றி, அவர்களை அடிமைகளாக்கிக் கசக்கிப் பிழிந்து, அவர்களை நாசம் செய்வது நாங்க ளன்று; ஐரோப்பியரே. ஆபிரிக்கா அமெரிக்கா கண்டங்களின் சென்ற மூன்று நான்கு நூறு வருஷச் சரித்திரமும், தற்கால நிலைமையுமே, இதற்குச் சாக்ஷி. அதனால், ஆபிரிக்கரின் உற்றதுணைவராக, அவரே ஆளும் திறனையடையும் வரை அவருக்குப் பதிலாக ஆளுதற்குரியோர், நாங்களே; ஏனெனில், நாங்களே கெநியாவை இப்பொழுதுள்ள நன்னிலைமைக்குக் கொண்டு வந்தோம். அப்படிக் கில்லா விட்டாலும், எங்கள் சிரமத்துக்கும், ஜனத்தொகைக்கும், தனைத்தனத்துக்கு நாங்கள் உதவும் வரிக்கும் தக்கபடியேனும், எங்களுக்கு ராஜாங்க உரிமைகள் கொடுக்க வேண்டும். [ஆபிரிக்கரை ஐரோப்பியர் கெநியாவிலே பாதுகாக்கும் பரிவுக்கு, ஓர் உதாரணம் கூறுதல் பொருந்தும்: Watts-Betschart என்னும் வழக்கில், ஆபிரிக்கன் ஒருவன் ஏதோ தவறுசெய்ததற்காக, ஐரோப்பியர் இருவர்கூடி, அவனை மாறி மாறிக் கசையடி யடித்தும் தண்ணீரில் முக்கியும் சித்திரவதை செய்தனர். அவனுக்கு மூர்ச்சைபோய் விட்டது. அப்பாலும் சில நேரம் அவனை வதைத்த பிறகு, அவன் இறந்தான் என்று கொண்டு—இறந்தது சந்தேகமே—அவனை-'Spread-eagle'-என்னும் வதைக்குள்ளாக்கி, எரித்துச் சாம்பராக்கி விட்டனர். இந்தக் கொலைக்கேஸை விசாரணை செய்த நியாயாதிபதி, அதை அற்பக் குற்றமாகவே பாவித்து, ஒரு குற்றவாளி யிடம் நன்னடக்கை ஜாமீன் மட்டும் வாங்கி, மற்றக் குற்றவாளியை ரூ 1000 அபராதத்தோடு விட்டு விட்டார்.]



(2) இந்தியக் கூலிகளில் பலர் அசங்கிய வழக்கங்க ளுடையவர்களா யிருப்பது ஒருவாறு மெய்யெனினும், அதன் பொருட்டு அவர்களை விலக்கிவைத்தல் தகுதியன்று. இந்தியர் ஸ்தலஸ்தாபன வரிகள் ஏராளமாய்க் கொடுக்கின்றனர். பள்ளிக்கூடங்கள், பிரசங்கங்கள் முதலியவைகளால் அவர்களைச் சீர்திருத்தி, அவர்கள் பழக்க வழக்கங்களைச் சுகாதார முறைகளுக் கேற்கச் செய்வதே கிரமமும், கடமையும், ஐரோப்பியருக்கே உறுதியுமாகும்; அதனால் அப்படியே செய்ய வேண்டும்.*

(3) இவ்வாறு நல்ல நிலம் ஒருவர்க்கும் கெட்ட நிலம் ஒருவர்க்கும் என்று பிரிப்பது அநியாய மெனினும், மேட்டு நிலம் தாழ்நிலம் எல்லாம் உங்கள் கைவசமே யிருக்கின்றது. நீங்கள் விற்காவிடின் நாங்கள் வாங்குவதெப்படி? இதற்குச் சட்டமேன்?

(4) சுதேச ஆபிரிக்கரின் அத்தியந்த க்ஷேமத்தை உத்தேசித்தால், நாமிருவருமே தடைகள் தாம்; நம்மிருவருள், எங்களைவிட நீங்களே பெருந்தடை, நீங்களே

---

*[குறிப்பு—தாய் நாட்டிலே மேற்சாதி ஹிந்துக்கள் கீழ்ச்சாதியினரை நடத்திவரும் கொடுமையே, கெநியா ஐரோப்பியருக்கு இந்த யுக்தியை நினைப்பூட்டி யிருக்கலாம். நாம் இங்கே அநியாயமாய் நடக்கும் வரை, பிறர் அநியாயத்தைக் குறைகூறுவது பொருந்தாது. "இறைவன் நீ, என்னைச் செய்த தீதெனின், இலங்கை வேந்தன் முறையல செய்தா னென்று முனிதியோ" என்று, வாலி இராமனைப் பார்த்துக் கேட்டதை மறக்கலாகாது.]

‘க்ட்டாயவேலை’யை நிலைநாட்டி, ஆபிரிக்கரை வதைக்க ஆத்திரப்படுகிறீர்கள். அதனால், குடியேறுவதைத் தடுப்பதாயின், நம் இருவரையும் தான் தடுக்கவேண்டும்; அன்றியும், எங்கள் தாய்நாட்டிலே தாராளமாய் வந்து புகுந்து பலதுறைகளிலும் லாபத்தை யடையும் நீங்கள், ஆபிரிக்கர் நாட்டிலுமே நாங்கள் புகக்கூடா தென்பது, தருமமாகுமோ, நியாயமாகுமோ?

கெநியாவைப் பற்றித் தனியாய் நாம் எடுத்துப் பேசுவதன் காரணம் இரண்டாகும்: மற்றெல்லாக் குடியேற்ற நாடுகளையும் விட அதிகமாக, கெநியாவானது, இந்தியரின் முயற்சிக்கும் உழைப்புக்கும், இன்றல்ல நேற்றல்ல, பதினைந்து தலைமுறைகளாகக் கடமைப்பட்டுள்ளது; மற்றக் குடியேற்ற நாடுகளைக் குடியேறின ஐரோப்பியரே ஆண்டுவர, கெநியாவை மட்டும், இன்றும் இந்தியாவை யாளும் பிரிட்டிஷ் பாராளுமன்றமே ஆண்டு வருகின்றது. எனவே, கெநியாவிலே இந்தியர்க்குச் செய்யும் அநியாயம், செய்ந்நன்றி கொன்ற பாவமாவது மன்றி, பிரிட்டிஷார் தாமே நேரில் வேண்டுமென்றே செய்வதாகும். பிரிட்டிஷ் சக்கராதிபத்தியத்துக்குள், சுயாதீனம் பெற்ற இந்தியா இருக்கவேண்டுமா, அல்லது விலகித் தனிக்க வேண்டுமா என்னும் வாதம், சில நாளாய் நடந்து வருகின்றது: இதுகாறும் பிரிட்டிஷ் பாராளுமன்றம் இந்தியரைக் கெநியாவில் நடத்தியிருக்கும் விதத்தைப் பார்த்தால், விலகிவிடுவதே தன்மரியாதை, எவ்விதத்திலும் உத்தமம் என்று தோன்றும். அவ்வெண்ணம் இந்தியர்க் குண்டாகாதபடி தடுத்து, நியாயத்தைக் கவனித்து முறைசெய்தல், பிரிட்டிஷ் அமைச்சுத்திறனைப் பொறுத்ததாகும்.*

(தொடரும்)

* For much of the information in this article I am indebted to the Rt. Rev. Bishop Whitehead's *Indian Problems*, Chapter 17. [*Ed. P. M.*


## குறள் நானூறு

பல பண்டிதர்களும் அறிவாளர்களும் கூடிச் சாமானிய ஜனங்களுக்காகத் திரட்டி யுதவிய நூல்; எளிய இனிய தமிழில், கருத்துரை, அரும்பதவுரை, இங்கிலீஷிலும் கருத்துரை, இவைகளோடு விரைவில் வெளிவரும்—விலை நாலணாதான். இப்பொழுதே ஆர்டர் செய்யுங்கள்.

பஞ்சாமிர்தம் ஆபீசு - மயிலாப்பூர் - சென்னை.




கோபா;— அவளை நீ கடைசியாக எப்பொழுது பார்த்தாய்?

மூடி:—போனவாரம் பார்த்தேன்—அவளுடைய அத்தை மகளுக்கு உடம்பு சுகமில்லை யென்று கூப்பிட்டார்கள், போயிருந்தேன்; அப்பொழுது நெடு நேரம் பேசிக் கொண்டிருந்தேன்.

கோபா:—என்னைப்பற்றி ஏதாவது பேச்சுண்டோ?

மூடி:—உன்னைப்பற்றியா? பேச்சுண்டு; ஆனால் நான் உன்னிடம் நான் சொல்வே னென்று அவள் எதிர்பாக்கமாட்டாள். சொன்னால் நீ எனக்கு என்ன தருவாய்?

கோபா:—என்ன வேண்டு மானாலும் தருகிறேன்; படத்தை மட்டும் தரமாட்டேன்.

மூடி:—ஐயையோ! அதுமுடியாது; நீ இப்படித் திடீரென வருவா யென்று தெரிந்திருந்தால், அதைப் பெட்டிக்குள் வைத்திருப்பேன். என் தங்கை என்னை இலேசில் விடமாட்டாள். அவளும் ஒருவேளை சம்மதித்தால் நீ வைத்துக் கொள்ளலாம்.

கோபா:—உன் தங்கை யெங்கே?

மூடி:—அவள் பெங்களூர் போயிருக்கிறாள். நாளைக் காலையில் திரும்பி வரலாம்.

கோபா:—அதிருக்கட்டும், மூடி; உன்னிடம் இப்பொழுது ஓர் அவசர காரியமாய் வந்தேன்.

மூடி:—இல்லாவிட்டால் மூடி வீடு இந்த நாளிலே வழி தெரியுமா? என்ன அவசரகாரியம்?

கோபா:—எப்படியாவது, நாளை மாலைக்குள், செய்வதாக வாக்குக் கொடுத்தால், சொல்லுகிறேன்.

மூடி:—சரி, சொல்ல வேண்டாம், போ. காரியம் இன்ன தென்று தெரியாமல், நான் எப்படி வாக்குக் கொடுப்பது? காரியம் இன்ன தென்று சொன்னால்,—

கோபா :—உன்னால் முடியாத காரியமில்லை; நீ மனசு வைத்தால், இன்றே, இப்பொழுதே முடித்து விடுவாய்.

முடி :—கைகாரனடா நீ, கோபால்! வேளைக்குத் தக்கபடி, வேண்டியபடி பேசுவாய், குல்லாப் போடுவாய்; காரியம் ஆகிவிட்டால், அப்புறம் முடி என்றொருத்தி யிருப்பதே மறந்து போய்விடும்.

கோபா :—இது தகுமா? இது நியாயமா? அப்படி நான் உன்னை என்று மறந்து போனேன்?

முடி :—இந்த மாதம் ஏழாம் தேதி மாலையிலே, நீயும் அவளும் இங்கே வந்திருந்தீர்களே, ஞாபக மிருக்கிறதா? அன்று நீ என்ன சொல்லிப் போனாய்?

கோபா :—மன்னித்துக்கொள், மன்னித்துக் கொள், முடி! என்மேல் தப்பிதம் தான்; முதலில், பில் வருமென் றிருந்தேன்; பிறகு மறந்து விட்டேன். முப்பத்தேழு ரூபா யென்றோ, ஏதோ சொன்னாயில்லையா? இதோ, இந்த ஐம்பது ரூபா நோட்டை வைத்துக்கொள்.

கோபாலையர் தன் பணப்பையி லிருந்து ஒரு நோட்டை யெடுத்துக் கொடுக்க, அவள் அதை வாங்கித் தன் பணப்பைக்குள் வைத்துக் கொண்டாள். அப்பொழுது அவள் பையைக் கண்டு, கோபாலையர், “கனத்துக் காண்கிறதே; உன் பாடு குசால்தான் போலிருக்கே” என்று பரிகாசமாய்ச் சொன்னார்.

முடி :—இதோ பார், இப்பொழுது போய் வந்தேனே, அந்தக் கேஸிலே, ஒரு ரூபாய்க்குக் காசு கொடுத்து விட்டார்கள்.

கோபா :—என்ன கேஸ் அது?

முடி :—ஒரு பிராமணப் பெண்; பதின்மூன்று வயது நிறையவில்லை இன்னும்; அதற்குள்ளே பிரசவம்! இந்த அநியாயம் வேறெங்கு மில்லை. இதை நிறுத்த ஒரு சட்ட மில்லையே!





கோபா :—நான் வந்த சங்கதியும் அப்படிப் பட்டது தான்: என் மாமனாரும் மைத்துனனும் வந்திருக்கிறார்கள்; இன்னும் ஒரு மாதத்திற்குள், என் மகளுக்குக் கலியாணம் முடித்துவிட வேண்டுமென்று கட்டாயப் படுத்துகிறார்கள். இடம் பெரிய இடம், லக்ஷரூபா சொத்திருக்கு.

முடி :—பையன் பி. ஏ. க்கு வாசிக்கிறானா?

கோபா :—பையனுக்கு வயது பன்னிரண்டு; முதல் பாரம் தான். பெண்ணுக்கு வயது பத்து, இரண்டாம் பாரம்.

முடி :—பேஷ்! பேஷ்! பொம்மைக் கலியாணம்!

கோபா :—அதற்காகத்தான் இன்று வந்தேன். ஜானகி முடிவாய் என்ன சொல்கிறாளென்று, நாளை மாலைக்குள்ளாவது, நீ தெரிந்து சொல்ல வேணும். காரியம் என்றைக்காவது பழமாவதாயிருந்தால், இப்பொழுது என் மகளைக் கட்டிக்கொடுக்க நான் இசையவே மாட்டேன்; ஏனென்றால், என்மகளைப் பின்பு என் வீட்டுக்கு ஒரு நாளும் அவள் புக்ககத்தார் விடவே மாட்டார்கள். அவர்கள் குக் கிராமவாசிகள்; வைதிகப் பற்றுள்ளவர்கள். செக்கடியும் தம்பூரு மாகிவிடும். இல்லை, இது முடியாத காரியம், காய் தான், என்பதா யிருந்தால், பணக்காரவரனையும் இழந்து, என் மாமனார் மனத்தையும் வீணிற் புண்ணாக்குவதைப் பற்றி, யோசிக்க வேண்டும்.

முடி :—சரிதான்; ஆனால், அவள்தான் எப்படி சொல்லமுடியும்? ஜோஸிய மில்லையே இது?

கோபா :—இருந்தாலும், தன் மனதாவது தனக்குத் தெரியாதா? எப்படியாவது ஒருவழியில் உறுதி செய்து கொள்ள வேணும். இந்தக் கடிதத்தில் நான் சொல்ல வேண்டியதை யெல்லாம் எழுதி யிருக்கிறேன். அவள் தகப்பனார் அறியாமல் அவளிடத்தில் இதைக் கொடுத்து, எனக்காக நீயும் எடுத்துப் பேசி, எப்படியாவது நீ தான்

நல்ல பதிலை வாங்கித்தர வேணும். நீ மனசு வைத்தால் முடியாததில்லை. நாளை உன் தங்கையும் வந்து, அவளும் நீயுமாகச் சேர்ந்துபோய்ப் பார்த்து, என் கடிதத்தையும் கொடுத்து, சங்கதியின் அவசரத்தையும் எடுத்துச் சொன்னால், காரியம் நிச்சயம் பழமே. உங்களால்தான் இது முடிய வேணும். என் ஆயுள் உள்ளமட்டும் இந்த உதவியை மறவேன்.

முடி:—உதவி மறக்கிறதிருக்கட்டும்,—

கோபா:—என்ன கேட்டாலும் தருகிறேன். எனக்குள்ள காதல்தான் உனக்குத் தெரியுமே: ஊரெல்லாம் என்னைப் பொய்யும் புளுகுமாகத் தூற்றுவதையும் ஒரு பொருட்டாக்காமல், அவளுக்குக் கொடுத்த வாக்குக்காகப் பொறுத்துக்கொண்டிருக்கிறேன். மூன்று வருஷம் பொறுத்தாய்விட்டது; இன்னும் மூன்று வருஷமானாலும், நான் பொறுத்திருக்கத் தடையில்லை. ஆனால், இந்த அவசரத்தினால், ஒரு வழியாக உடனே தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

முடி:—கோபால்! நீ சொல்லவேண்டியதெல்லாம் சொல்லி விட்டாய். நானும் முடிவாகச் சொல்லுகிறேன் கேள்: அவளுக்கு நீ எழுதின கடிதம் ஒன்று, அவள் தகப்பனார் கையில் அகப்பட்டதனால், உங்களுக்குள் கடிதப் போக்கு வரவு ஒழிந்தது முதல், எங்கள் மூலமாயே ஏதாவது நடந்து வருகிறது. எனக்கும் என் தங்கைக்கும் நீயும் சிநேகிதன் அவளும் சிநேகிதி. உங்கள் சிநேகம் எங்களால் உண்டானதில்லையென்றாலும், அவள் சிநேகம் ஆசுபத்திரியில் முதல் முதல் உனக்கு ஏற்பட்ட நாள் தொட்டு, நீ முற்றிலும் வேறு மனுஷனாகி விட்டாய். அப்படியிருந்தும்கூட, பழைய சிநேகத்தையும், அவளுடைய பரிதாப கதியையும் உத்தேசித்து, நான் உங்களுக்கு அநுசரணையாய் நடந்துவந்திருக்கிறேன். இதை உன் மனம்போல முடித்துத் தந்தால், என்ன தருவாய்?



# மூன்று வினாக்கள்

(ருஷியமகான் லியோ டால்ஸ்டாய் எழுதிய சிறுகதை)

ஸ்ரீ K. விசுவநாதையர், B. A; L. T; சித்தூர்.

“ஒவ்வொரு தொழிலையும் ஆரம்பிப்பதற்கேற்ற சரியான காலத்தை அறிந்து கொள்ளுதல் நல்லதல்லவா? மேலும், அத்தொழிலை எவரோடு செய்தல் தகுதியென்றும், எவரோடு செய்தல் தகாததென்றுந் தெரிந்து கொள்ளுதல் முக்கியமல்லவா? இதுவுமன்றி, பிரயத்தனஞ் செய்யுங் கருமங்களில் அத்தியாவசியமானது இன்னதென்று, எப்பொழுதுந் தெரிந்து கொண்டே செய்தல் உத்தமமல்லவா? இம் மூன்றையுந் தெரிந்துகொண்டு தொழில் துவக்குவோனுக்கு அபஜயம் என்பது எவ்வாறு சம்பவிக்கும்?” என்று ஓர் அரசன் ஒரு சமயத்தில் ஆலோசிக்கலானான்.

இவ்வாறு எண்ணங்கொண்ட மன்னவன், “ஒவ்வொரு காரியத்தையும் தொடங்கும் காலம் இன்னதென்றும், அதற்கு முக்கியரான மனிதர்கள் இன்னாரென்றும், அத்தியாவசியமான காரியம் எதுவாமென்றும்,” தவறின்றித் தெரிந்து கொள்ளும் மார்க்கத்தைக் கற்றுக் கொடுப்பவர்களுக்கு, மகத்தான வெகுமானம் அளிப்பதாகப் பறைசாற்றுவித்து, தன் இராஜ்ஜியமெங்கும் பகிரங்கப்படுத்தினான்.

முதல் வினாவிற்குச் சிலர், “ஒவ்வொரு நாளிலும், மாதத்திலும், வருஷத்திலும், செய்ய வேண்டிய காரியங்களுக்கு, முன்னரே ஒரு “ப்ரோகிராம்,” அதாவது, காரியக்கிரமக் குறிப்பு ஒன்று தீர்மானஞ்செய்து எழுதிவைத்து, அக் குறிப்பின் வழியே சிறிதும் பிறழாது நடந்து வருதலே மார்க்கம்” என்று விடை பகர்ந்தனர். அவ்வாறு செய்தால்தான் ஒவ்வொரு காரியமும் அதற்கு என்று குறிப்பிட்ட காலத்தில் நிறைவேறுமென்று உறுதியாகச் சொன்னார்கள்.

மற்றுஞ் சிலர், ஒவ்வொரு கருமத்தையும் முன்னரே தீர்மானஞ் செய்தல் இயலாததென்றும், ஒருவன் களியாட்டிலும், அற்ப விநோதங்களிலும் செல்லும் மனதை அடக்கி, நிகழும் எல்லாவித நடவடிக்கைகளையும் நன்றாகக் கவனித்து, அவைகளில் எது அவசியமோ அதையே செய்தல் வேண்டும்'' என்றும், சாதித்தனர்.

பின்னுஞ் சிலரோ, "சம்பவிக்கும் நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும், எவ்வளவு கவனமாக அரசன் கவனித்தபோதிலும், எது எக்காலத்தில் செய்ய வேண்டுமெனத் தவறின்றித் தீர்மானித்தல் ஒரு மனிதனால் இயலாதது; ஆகையால், அறிவு முதிர்ந்த பலரையும் கலந்துகொண்டு, அவர்கள் கடைசியாக ஒருமித்துச் சொல்லும் புத்திமதியையே அனுசரிக்க வேண்டும்,'' என்றார்கள்.

இவர்களினின்றும் வேறுபட்ட இன்னுஞ் சிலர், "புத்திமதி சொல்ல வல்லோரைக் கலந்துகொள்ள அவகாச மில்லாத சந்தர்ப்பங்கள் பலவுள; அச் சந்தர்ப்பங்களில் தொழிலைத் தொடங்கக் காலம் இதுவா அல்லவா என்று தக்ஷணமே தீர்மானிப்பதும் அவசிய மாகின்றது. இவைகளை ஆலோசிக்கு மளவில், இனி எவையெவைகள் நிகழப்போகின்றனவென்று முன்னரே அறிந்திருந்தாலன்றி, கருமங்களை நிகழும்போது நடத்தி நிர்வகித்தல் இயலாது. இது, சோதிடரா லாகுமே யல்லது, வேறெவராலும் ஆகாது. ஆதலின், ஒரு தொழிலைத் தொடங்குவதற்குக் கிரமமான காலந் தெரிந்துகொள்ள, சோதிடரைத்தான் கலந்து கொள்ளல் வேண்டும்,'' என்றார்கள்.

இரண்டாவது கேள்விக்கும், இவ்விதமாகவே, பலவாறான பதில்கள் அளிக்கப்பட்டன. சிலர், "அரசனுக்கு முக்கியமானவர்கள், அவனுக்கு உதவி புரியும் அதிகாரிகளே'' என்றார்கள். மற்றுஞ் சிலர், "சோதிடர்களே முக்கியமானவர்கள்,'' என்றார்கள். பின்னுஞ் சிலர், "வைத்தியர்கள் முக்கியர்'' என்றார்கள். வேறு சிலரோ, "யுத்த வீரர்கள்தான் முக்கியர்,'' எனப் பகர்ந்தனர்.

"எது முதன்மைத்தான காரியம்?'' என்ற மூன்றாங் கேள்விக்கு, "சாஸ்திர ஆராய்ச்சி,'' என்றார் சிலர்; "யுத்த சாஸ்திரப் பயிற்சி'' என்றார் மற்றுஞ் சிலர்; "கடவுள் ஆராதனை,'' என்றார் வேறு சிலர்.



ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்ட விடைகள் ஒற்றுமை யின்றி வேறுபட் டிருக்கக் கண்டு, அரசன், மனத்தில் திருப்தி யுண்டாகாதவனாய், ஒருவருக்கும் வெகுமான மளிக்கா திருந்தான். தன் கேள்விகளுக்குச் சரியான பதில்களை எவ்வித மாகவாவது கண்டுகொள்ள வேண்டு மென்ற பிரயத்தனத்தை விடாது செய்து வருகையில், ஞானத்திற் கென்றே மிகக் கீர்த்தி வாய்ந்த ஒரு வனவாசியைப் பற்றிக் கேள்விப் பட்டு, அவரைக் காணத் தீர்மானித்தான்.

அவர், ஒருகாட்டில் வசித்தார்; அதை விட்டு ஒரு பொழுதும் எவ்விடமும் போவ தில்லை. சாதாரண ஜனங்களின் வரவைத்தான், அவர் அங்கீகரிப்பர். ஆகையால், அரசன் சாமானிய உடை உடுத்து, அவ் வனவாசியின் ஆச்சிரமத்தைச் சேருவதற்கு முன் தன் மெய்க்காவலர்களை அப்புறம் நிறுத்தி, தன் குதிரையினின்றும் இறங்கி, அவரைக் காணத் தனிமையாகச் சென்றான்.

அரசன் சமீபிக்கும் தருணத்தில், வனவாசி தன் தோட்டத்தில் பல குழிகளைத் தோண்டிக்கொண்டிருந்தார். அவர் அரசனைக் கண்டதும் வந்தன மளித்தார். உடனே, முன்போலவே, பள்ளங்களைத் தோண்டிக்கொண் டிருக்கலானார். அவர், மெலிந்தும், பலஹீன முள்ளவராகவு மிருந்தார். பூமியின் மீது மண்வெட்டியை அழுத்தும்போதும், சிறு மண் கட்டிகளைப் பூமியினின்று புரட்டும் போதும், அவர் பெருமூச்சு விட்டவண்ணமாகவே யிருந்தார்.

அரசன், அவர்பாற் சென்று, "ஞானம் பொருந்திய தபோதனரே! தங்களிடத்தி லிருந்து மூன்று வினாக்களுக்கு விடை தெரிந்து கொள்ளும் பொருட்டு, நான் இங்ஙனம் வந்திருக்கின்றேன்; அவையாவன :— 'காலத்தை நழுவ விட்டதற்காகப் பின்னர்ப் பச்சாத்தாபப் படா வண்ணம், காரியம் செய்தற்கு உரியதான கால மெது? அக்காரியங்களுக்கு முக்கியமான மனிதர்கள் யாவராவர்? எல்லாத் தொழில்களிலும் முதலில் முடித்தற் குரிய கருமங்கள் யாவை? இம்மூன்று கேள்விகளுக்கும் எனக்கு விடை அளிப்பீராக,'' என்று கேட்டுக்கொண்டான்.

அவ் வனவாசி, அரசன் சொல்லிய மொழிகளைச் செவியுற்றாரே யொழிய, பதி லொன்றும் பகர வில்லை. ஆனால், அவர், கைகளைத் தடவிக்கொண்டு மறுபடியும் பூமியைக் கொத்த ஆரம்பித்தார்.

அரசன், அவரை நோக்கி, "தாங்கள் களைத் திருக்கிறீர்கள்,

தங்கள் மண்வெட்டியை என் கையில் தாருங்கள். நான் சிறிது உழைக்கிறேன்," என்றான்.

அதற்கு அப் பெரியவர் வந்தனமளித்து, அரசன் கையில் மண்வெட்டியைக் கொடுத்துவிட்டுத் தரையில் உட்கார்ந்தார். இரண்டு குழிகளைத் தோண்டியதும், அரசன், வெட்டுவதை நிறுத்தி, தன் கேள்விகளை மறுபடியுங் கேட்டான். அவர், பதிலொன்றுஞ் சொல்லாது எழுந்து, அரசன் கையி லிருக்கும் மண்வெட்டியைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டுத் தன் கையை நீட்டிக் கொண்டே அரசனை நோக்கி, "நீர் சிறிது இளைப்பாறும்; நான் வெட்டுகிறேன்," என்றார்.

ஆனால் அரசன் மண் வெட்டியைத் திருப்பிக் கொடுக்காமல், தானே மறுபடியும் வெட்ட ஆரம்பித்தான். ஒரு மணிநேரம் சென்றது; இரண்டாவது மணியும் கழிந்துவிட்டது. மரங்களின் பின்னர் சூரியன் இறங்க ஆரம்பித்து விட்டான். அரசன், மண்வெட்டியைப் பூமியில் நிறுத்தி, "ஓ! ஞானியே! என் கேள்விகளுக்கு விடை தெரிந்துகொள்ள இங்ஙனம் வந்தேன். தங்களால் முடியாவிடில், அவ்விதமே சொல்லி விடுவீராக; நான் வீடுபோய்ச் சேருகிறேன்," என்றான்.

"இவ்வழியில் யாரோ ஒருவன், இப்பொழுது ஓடினானே? அவன் யார் என்று நாம் பார்ப்போம்," என்றார் வனவாசி.

அரசன் திரும்பிப் பார்க்கையில், காட்டி லிருந்து தாடிக்காரன் ஒருவன், உண்மையாகவே ஓடிக்கொண்டிருப்பதைக் கண்ணுற்றான். அம்மனிதன் தன் கைகளைத் தன் வயிற்றின்மேல் அமுக்கிக் கொண்டிருந்தான். கைகளின் கீழே உதிரம் பெருகிக் கொண்டிருந்தது. அவன் அரசனை நோக்கி வந்தான். சமீபத்திற் சேர்ந்ததும், அவன் கீழே விழுந்துவிட்டான். விழிகள் ஆட வில்லை; ஈன சுரத்தோடு உறுமிக்கொண்டு மாத்திரம் இருந்தான். வனவாசியோடுகூட, அரசன், அம்மனிதனின் உடைகளைக் களைந்து பார்க்கையில், ஒரு பெரிய காயம் இருப்பது தெரிந்தது. அரசன் தன்னா லியன்றவரையில், அக்காயத்தை நன்றாகக் கழுவி, தன் கைக்குட்டையினாலும், பெரியவரின் துவாலையினாலும், நன்றாகக் கட்டினான். ஆனால், இரத்தம் பெருகுவது நிற்க வில்லை. அரசன், பலதடவை, இரத்தந்தோய்ந்த அக்கட்டுகளை அவிழ்த்து, காயத்தை மறுபடியும் மறுபடியும் சுத்தமாக அலம்பிக் கட்டினான். இரத்தம் நின்றதும், அக் காயம்பட்ட மனிதனுக்குத் தன் ஞாபகம்



சிறிது வந்தது. குடிக்கத் தண்ணீருக்குச் சைகை செய்தான். அரசன், அவனுக்குக் கொஞ்சம் சுத்தஜலம் கொண்டு வந்து கொடுத்தான். இதற்குள் சூரியன் அஸ்தமனமாய்விட்டது. குளிர்ந்த காற்றும் அடிக்கத் தலைப்பட்டது. ஆகவே, அரசனும், வனவாசியும், அவனை மெதுவாகக் குடிசைக்குத் தூக்கிப்போய், பெரியவரின் படுக்கையில் அமர்த்தினார்கள். அவன் கண்களை மூடிக்கொண்டு நித்திரைபோகிறவனாகக் காணப்பட்டான்.

அரசன், நடையினாலும் வேலையினாலும் களைத்து, வாயிற்படியண்டை படுத்துச் சிறிது கண் மூடினதும், நன்றாக அயர்ந்து விட்டான். அக் குறுகிய கோடைகால இரவு முழுவதும், அவன் ஆழ்ந்த நித்திரையை அனுபவித்தானென்றே சொல்ல வேண்டும்; ஏனெனில், விழித்துக் கொண்டபொழுது, தான் எங்கேயிருக்கிறானென்றும், படுக்கையில் படுத்திருப்பவனும் பிரகாசம் பொருந்திய கண்களால் தன்னையே உற்றுப் பார்ப்பவனுமான தாடிக்காரனை அந்த அன்னியன் இன்னானென்றும், தெரிந்து கொள்ள முடியாதவனாய் வெகுநேர மிருந்தான்.

அந்தத் தாடிமனிதன், அரசன் விழித்துக்கொண்டு தன்னைப் பார்ப்பதை அறிந்தபொழுது, பலஹீனமான குரலுடன், "என்னை மன்னிக்க வேண்டும்" என்று, மன்னவனை வேண்டினான்.

"உம்மை எனக்குத் தெரியாதே. உம்மை மன்னிக்க வேண்டியது ஒன்று மில்லையே," என்றான் அரசன்.

தாடிக்காரன், "உங்களுக்கு என்னைத் தெரியாது; ஆனாலும், எனக்கு உங்களைத் தெரியும். என் சகோதரனைச் சிரச்சேதஞ் செய்து, எனக்குச் சேரவேண்டிய ஆஸ்திகளை நான் அடையாவண்ணம் நீங்கள் செய்ததற்காக, உங்களைப் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று சபதஞ் செய்துகொண்ட உங்கள் விரோதி, நான்தான். நீங்கள் வனவாசியைக் காணத் தனிமையாகப் போய்க் கொண்டிருப்பதைத் தெரிந்து, உங்களைக் கொல்ல யத்தனித்தேன். நீங்கள் அவரைப் பார்த்துவிட்டுத் திரும்புகையில், உங்களை எதிர்க்க வேண்டுமென்று உத்தேசித்திருந்தேன். ஒருநாள் முழுவதும் காத்திருந்தும் நீங்கள் திரும்ப வில்லை. பிறகு, நீங்கள் எங்கேயிருக்கிறீர்கள் என்று தெரிந்துகொள்ளும் பொருட்டு, பதுங்கிக் கொண்டிருந்த இடத்தி லிருந்து வெளியே வந்தேன். அப்பொழுது உங்கள் மெய்க்காவலர்கள் வழியில் தடைப்பட்டார்கள். அவர்கள் என்னை இன்னானென்று தெரிந்து கொண்டு, உடலிற் குத்தி

விட்டார்கள். அவர்களிடமிருந்து தப்பித்து ஓடினேன். இரத்தமெல்லாம் இழந்ததால், நீங்கள் என் காயத்தைக் கட்டாவிடில், நான் இறந்திருப்பேன். உங்களைக் கொல்ல யத்தனித்த என்னை, நீங்கள் காப்பாற்றினீர்கள். நான் இனி உயிரோடிருந்து, நான் ஜீவித்திருப்பதில் உங்களுக்கு இஷ்டமாகவிருக்கும் பக்ஷத்தில், நான், உங்களால் முழு நம்பிக்கை வைக்கத் தகுதியுள்ள அடிமையாக ஊழியஞ் செய்வேன். என் குழந்தைகளையும் அவ்வாறே செய்ய உத்தரவு இடுகிறேன். என்னை க்ஷமிப்பீர்களாக" என்று, பிரார்த்தித்தான்.

அரசன், தன் விரோதி இவ்வளவு எளிதில் சமாதானத்திற்கு வந்ததற்கும், அவனே தன் ஆப்த நண்பனாக மாறினதற்கும் மிகுந்த மனமகிழ்ச்சி யடைந்து, அவனை மன்னித்தது மன்றி, அவன் ஆஸ்திகளை மீளவும் திருப்பிக் கொடுப்பதாகவும் வாக்குத்தத்தஞ்செய்து, தன் வேலைக்காரர்களுக்கும், வைத்தியர்களுக்கும், அவனைத் தூக்கிப் போவதற்கு உத்தரவளிப்பதாகவும், உறுதிமொழி சொன்னான்.

அரசன், அவனிடத்தி லிருந்து விடை பெற்று வெளியே வந்து, வனவாசியைக் காண விரும்பினான். அவரிடத்தி லிருந்து உத்தரவு பெற்றுப் போகுமுன், தன் வினாக்களுக்கு விடையளிக்கும்படி, அவரைக் கடைசியாக ஒரு தடவை வேண்டிக் கொண்டு பார்ப்போம் என்று, தனக்குள்ளே தீர்மானித்தான்.

அவர் தோட்டத்தி லிருந்தார். நேற்றைய தினம் தோண்டிய பள்ளங்களின் பக்கத்தில் முழங்காலிட்டுத் தவழ்ந்துகொண் டிருக்கிறவராகக் காணப்பட்டார். அவர், அப் பள்ளங்களில் விதைகளை ஊன்றிக்கொண் டிருந்தார்.

அரசன் அவர் அருகிற் சென்று, "ஓ! ஞானியே! என் கேள்விகளுக்கு விடையளிக்கும்படி, தங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்," என்றான்.

அவ் வனவாசி இடுப்பைப் பிடித்துக் கொண்டு நிமிர்ந்து, எதிரில் நிற்கும் அரசனை நோக்கி, "உம்முடைய வினாக்களுக்கு முன்னமே விடை யளிக்கப்பட்டனவே," என்றார்.

"எவ்விதம் அளிக்கப் பட்டன?" என்றான் அரசன்.

"ஏன்! உள்ளங்கை நெல்லிக் கனிபோல், விளங்க வில்லையா? நேற்றைய தினம் என் பலஹீனத்தைக் கண்டு பரிதாபப் படாமலும் எனக்காகப் பள்ளந் தோண்டாமலும், நீர் தனியாகத் திரும்



பிப் போயிருந்தால், அம் மனிதன் உம்மை எதிர்த் திருப்பானல்லவா? அப்பொழுது, என்னிடம் தங்கியிராததற்காக, நீர் பச்சாத்தாபப் பட்டிருப்பீ ரல்லவா? ஆகையால், என்பா லிரங்கி என்க்காகப் பள்ளந் தோண்டத் தொடங்கியதே சரியான காலம். அப்பொழுது, நானே முக்கியமான மனிதனானேன். எனக்கு நன்மை செய்ததே முக்கியமான செய்கையு மானது.

"பிறகு அம்மனிதன் ஓடினபொழுது, அவனுக்குச் சிகிச்சை செய்யுந் தருணமே முக்கியமான காலமானது. ஏனெனில், அவ்விதம் செய்யாவிடின், அவன் உம்மோடு சமாதானஞ் செய்து கொள்ள அவகாசமின்றி இறந்திருப்பான். அது காரணம் பற்றியே, அப்பொழுது முக்கியமான மனிதனும் அவனே யானான். முக்கியமான செய்கையும் அவனுக்கு நீர் செய்த உதவியே யாகும்.

"ஆகையால், இவைகளி லிருந்து, நீர், முக்கியமான காலம் ஒன்றே என்று, உறுதியாகத் தெரிந்துகொள்ளும். அதாவது: இப்பொழுதே. ஏன் 'தற்காலமே' முக்கிய மென்று சொன்னேனெனில், நிகழ் காலத்தில்தான், நமக்கு ஸ்வாதீனம் இருக்கிறது. முக்கியமான மனிதனும், நிகழ்காலத்தில் எவனோடு நமக்குச் சம்பந்தம் ஏற்படுகிறதோ அவனே, யாவன். முக்கியமான செய்கையும், அவனுக்கு நன்மை செய்தலே யாகும்" என்று, பெரியவர் தன் மனக்கருத்தை வெளியிட்டார். அரசன், ஐயந் தீர்ந்து உள்ளக் களிப்புடன் அரமனை சேர்ந்தான்.

# இந்திய சுயராஜ்யம்

டாக்டர் ஆனி பெஸண்ட் அம்மையார் "நியூ இந்தியா" பத்திரிகையில் எழுதியதன் சாராம்சம்.

"நாம் சுயராஜ்யத்தை வெகு சீக்கிரத்திற் பெறாவிட்டால், நமக்கும் இங்கிலாந்துக்கும் உள்ள சம்பந்தத்தைத் தொலைக்க, இந்தத் தேசத்தில ஓர் இயக்கம் ஏற்படும்: ஏனெனில், சுயராஜ்யம் பெறாமல் இந்தியா ஒரு தேசமாக வாழ முடியாது. சுயராஜ்யம் நம் நாட்டிற்கு உயிர் போன்றது. ஜனங்களுடைய கல்லாமையினால் நம் நாடு மரணதசையி லிருக்கின்றது. இவ் வறிவின்மை ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரின் அரசியலில் முளைகிளம்பி, தற்போதைய

ராஜாங்கத்தால் நிவர்த்திக்கப் படாமல், வளர்கின்றது. கல்வி இலாகா இந்தியர்வச மிருக்கும் இக்காலத்திலும், அமித மான இராணுவச் செலவினால், கல்விவிஷயங்களில் செலவு குறைந்து வருகின்றது. வெகு காலத்திற்கு முன், லார்ட் ஸாலிஸ்பரி, பல அவயவங்களில் இந்தியமாதாவின் இரத் தம் உரிஞ்சுவிடப் படுகிற தென்றும், உரிஞ்சும் இடத்தை மாற்ற வேண்டும் என்றும் கூறினார். இக்கொடூரச்செய்கை நிறுத்தப்படாமல் நிகழ்ந்து, இப்பொழுது முடிந்து விட் டது. வரிகளுக்கு ஓர் வரையறவு ஏற்பட வில்லை. உப்பு வரி இரட்டிப்பான வுடன், உப்பின் உபயோகமும் குறை ந்து விட்டது. இந்தியாவின் தனத்தை அநியாயமாய்ச் செலவிடுவதினால் நம் நாட்டிற்கு மரணம் சமீபிக்குமெனத் தோன்றுகிறது. நம் நாட்டுக் கைத்தொழில்கள் ஒத்தாசை யில்லாமல் க்ஷீணிக்க, அவ் வுதவியில் செலவிட வேண்டிய பணம், வியாபாரப் போராட்டத்தில் நம் கைத்தொழில் களையே வெல்லும்படி, நம்மை ஆள்வோரின் கைத்தொழில் களை வளர்க்க உதவுகின்றது. இராணுவ விஷயங்களில், மட் டில்லாமல் நமது பணம் வாரி யிறைக்கப் படுவதினாலும், அதிகச் செலவு பிடிக்கும் அயல் நாட்டு வீரர்கள் நம் நாட் டில் நிறுத்தப் படுவதினாலும், ஆங்கில சைன்யம் எப் பொழுதும் யுத்தப் பிரசன்னமாய் (நமக்காக அன்று ; ஆங்கிலரின் நோக்கங்களுக்காக) வைக்கப் படுவதினாலும், நம் நாட்டிற்கு அபாயம் ஏற்படுகிறது. இவை போன்ற சுய ராஜ்ய அவசியத்தின் காரணங்களைப் பயமில்லாமல் வெளிப் படையாகச் சொல்ல வேண்டும். ஆனால், நம் ஜனன பூமியில் ஆள்வதற்கு உண்மையில் நமக்குள்ள உரிமையை நாம் ரூபிக்க வேண்டிய தில்லை. ஆங்கிலேயர்தான், தமது தேச மில்லாத இந்த நாட்டில் ஆள்வதற்கு, தம் உரிமையை நிரூபிக்க வேண்டும். இந்தியர் சுயராஜ்யம் பெற நிச்ச யித்து விட்டார்கள்.


குறள் நானூறு

பல பண்டிதர்களும் அறிவாளர்களும் கூடிச் சாமா னிய ஜனங்களுக்காகத் திரட்டி யுதவிய நூல்; எளிய இனிய தமிழில், கருத்துரை, அரும்பதவுரை, இங்கிலீஷி லும் கருத்துரை, இவைகளோடு விரைவில் வெளிவரும்— விலை நாலணாதான். இப்பொழுதே ஆர்டர் செய்யுங்கள்.

பஞ்சாமிர்தம் ஆபீசு - மயிலாப்பூர் - சென்னை.

# திருவருட்பா*

ஸ்ரீ. அ. மாதவையர், சென்னை.



னிதனது ஆத்ம சக்தியை யாரும் அளந்து வரையறுக்கவில்லை ; இதுதான் அவன் அறிவுக் கெட்டியது, இவ்வளவுதான் அவனாலாகும் என்று கூறிய சில தத்துவஞ்ஞர்களின் கூற்றுக்களும் பொய்யாயின. எனி னும், அந்தக் காரணத்தினால் மட்டும், காதாற்கேட்ட அற் புத அதிசயங்களை எல்லாம் மெய்யென நம்பிவிடுவது அறி வாகாது. இந்த அம்சத்தில் அவநம்பிக்கையே நல்லறி வென்றும்; நம்பிக்கை, அறியாமையால் வரும் மூடபக்தி யென்றும், கொள்வர் ஒரு சாரார். நம்மவரில் பெரும்பா லாரோ, இதற்கு நேர் எதிர்க்கொள்கையை உடையவராவர். பிற்கூறிய கொள்கைக்கு அறிவுமிகுதியன்று அடிப்படை; சரித்திரவுணர்ச்சியும் சாஸ்திர ஞானமும் மிகக் குறைவா யிருப்பதே காரணமென்றுரைத்தால், அது தவறாகாது.

இராமலிங்க ஸ்வாமிகள், 1823-ம் வருஷம் புரட் டாசி மாதத்திலே, சிதம்பரத்தின் வடமேற்கிலுள்ள மரு தூர் கிராமத்திற் பிறந்து, சிதம்பரத்துக்கருகே வடலூர் மேட்டுக் குப்பத்தில், 1872-ம் வருஷம் தைமாதத்திலே தேகவியோக மானவர். இவர் தந்தை, கிராமக் கணக்கு

* திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் சிதம்பரம் இராம லிங்க ஸ்வாமிகள் இயற்றியது. இதுகாறும் வெளிவராத பாடல் கள் குறிப்புக்களுடன், இராமச்சந்திரபுரம் ஸ்ரீமான். தீ. நா. முத் தையா செட்டியார், (F. R. S. A.) சென்னையில் பதிப்பித்தது. சுவாமிகளின் சரித்திரக் குறிப்புக்களும், இரண்டு படங்களும், "சீவகாருண்ய ஒழுக்கம்," "மனுமுறை கண்டவாசகம்," "தொண்டமண்டல சதக விலக்கணம்," "தமிழ்," "உண்மை நெறி" என்னும் ஆறு வசன நூல்களும், ஆறு திருமுறையாக வகுத்த 6214 பாக்களும் அடங்கியது. ராயல் 1580 பக்கங்கள்- நல்ல காகிதத்தில் செவ்வையாய் இந்த வருஷம் (1924) அச்சிட்டு, கில்டு பைண்டிங் செய்யப்பட்டது. விலை ரூ. 15.

வேலையும் பள்ளிக்கூட வாத்தியார் வேலையும் பார்த்து வந்த இராமையப்பிள்ளை என்பவர்; இராமையப்பிள்ளையின் ஆறாவது தாரமான இவர் தாய், பொன்னேரி கிராமம் சின்னம்மை என்பவர். இவ்விருவர்க்கும், சபாபதிபிள்ளை, பரசுராமப் பிள்ளை என்ற ஆண் மக்களும், சுந்தரம்மாள், உண்ணாமுலை யம்மாள் என்ற பெண்மக்களும் பிறந்த பின்பு, ஐந்தாவது குழந்தையாக இராமலிங்கர் பிறந்தார். குழந்தை பிறந்த ஆறாம்மாதத்திலே தந்தை இறந்தனராக, மூத்த சகோதரரான சபாபதி பிள்ளை, குடும்பத்துடன் மருதூரைவிட்டுப் பொன்னேரி சென்று தங்கி, முடிவில் சென்னைபுரியிலே வாழலாயினர். புராணப் பிரசங்கமே அவர் ஜீவனோபாயம். இராமலிங்கர், முதலில் தன் தமயனாரிடத்தும், பிறகு காஞ்சிபுரம் சபாபதிமுதலியாரிடத்தும் கல்வி பயின்றனர். சிறு பிராய முதலே முருகக் கடவுளை வழிபட்டுத் தோத்திரப்பாக்கள் பாடலாயினர்.

சென்னையி லிருக்கும்போது அடிக்கடி திருவொற்றியூர் சென்று சுவாமிதரிசனம் செய்து வருவதுண்டு. சென்னைபுரியில் கந்தசாமி கோயிலே இவர் மனமுகந்த ஆலயம். இவர் முதலில் எழுதிய நூல், "மனுமுறை கண்டவாசகம்" என்பது. பிறகு ஒன்றின்பின் ஒன்றாகப் பல நூல்களை யாக்கினர்; அடிக்கடி பிரசங்கங்களும் செய்வாராயினர். உரிய பருவத்திலே, இராமலிங்கம் பிள்ளைக்கு அவர் தமக்கை உண்ணாமுலை யம்மாளின் மகளான தனம் அம்மாளையே சபாபதி பிள்ளை விவாகம் செய்து வைத்தனர். ஆயின், பிறர் நிர்ப்பந்தத்தால் மணத்துக் கிசைந்த இராமலிங்கர், நிஷேக தினத்தின் இரவு முழுதையும் திருவாசகம் படித்தே கழித்தனராம். பின்பும் இவர் உலக முறைப்படி என்றுமே குடும்பியா யிருந்து வாழவில்லை. இவர், தமிழிற்போல வடமொழியிலும் விற்பன்னராய் விளங்கியவர். இவர் பாக்களிற் பல இதை நன்கு காட்டும். தொழுவூர் வேலாயுத முதலியார், இவரிடம் கல்விகற்று, இவர் சீடர்களில் முதல்வராய் விளங்கினவரே. பின்னர் இராமலிங்கர் வண்டிப்பாதையாகச் சென்று, புதுச்சேரியில் சில நாள் தங்கி, சிதம்பரத்தை யடைந்து, நடராஜரைத் தரிசித்து, அங்கே தங்கலாயினார். அக்காலத்தில் கோடக நல்லூர் சுந்தர சுவாமிகளைச் சந்தித்து அளவளாவ நேர்ந்தது. பிறகு மதுரை முதலிய பதிகளைச்சென்று தரிசித்து, ஆங்காங்கு பாடல்கள் பாடி, மீண்டும் வடக்கே திரும்பி, கருங்குழி என்னும் கிராமத்



தை அடைந்து, அவ்வூரில் ஒரு ரெட்டியார் வீட்டில் பதினாறு வருஷங்கள் தங்கலானார். அக்காலத்திலும் பல பாடல்கள் பாடினர். பிறகு கூடலூர் சென்று தங்கிப் பிரசங்கங்கள் செய்துகொண்டிருந்தார். அக்காலத்தில் இராமலிங்கருக்கும் பிரம்ம சமாஜத்தைச் சார்ந்த சிலர்க்கும் விக்கிரக ஆராதனையைப்பற்றிப் பெரிய வாதம் நிகழ்ந்தது. "பிரம்மாநுபவம் விக்கிரக ஆராதனை யின்றி வராது" என்பதும், "பக்குவத்துக்குத் தக்கபடி விக்கிரக ஆராதனை செய்து, அதனால் அருளைப் பெற்று, அதனால் அறிவு விளங்கி, அதனால் பிரம்ம சுகத்தை யனுபவிக்கலாம்" என்பதும், இராமலிங்கர் கோட்பாடுகள். இதற்குள் இராமலிங்கரின் சீடர்களும் பக்தர்களும் மிகப்பலராயினர். இவர்கள் உதவியைக்கொண்டு, வடலூர்ப் பெருவெளியில் ஒரு பெரிய தருமச்சாலையை நிருமிக்க உத்தேசித்து, அவ்வண்ணமே கட்டிமுடித்தார். அந்தச் சாலை இன்றும் நடை



இராமலிங்க ஸ்வாமிகள்.


பெற்றுவருகின்றது; அவர்கட்டளைப்படி எப்பொழுதும், அதில் அடுப்புப் புகைந்துகொண்டே யிருக்குமாம். இது வன்றி, ஒரு "ஞானசபை"யும் அஷ்டகோண வடிவில் கட்டிமுடித்து, பிரதிஷ்டை செய்தார். அப்பொழுது தருமச்சாலையில் தங்குவதை விட்டு, வடலூர்க்கு இரண்டு மைல் தூரத்திலுள்ள மேட்டுக்குப்பத்தில் சென்று தங்கலானார். அவர் தங்கிய இடம் சித்திவிளாகம் எனப்படும். இவ்விடத்தில்தான் ஸ்வாமிகள் சித்தியடைந்தது. இராமலிங்கர், சித்தரது நூல்களையும், மூலிகை விசேஷங்களையும், அறிந்திருந்தார். அவர், செம்பைப் பொன்னாக மாற்றிப் பல தடவைகளில் எறிந்துவிடுவதுண்டாம். இதுவரை சரித்திரத்தை எழுதியதில், ஓர் அம்சத்தை மட்டும் கூறவில்லை: அதாவது, சிறுவயது முதல் சித்தியடையும் வரை, சித்தியடைந்த பின்னரும் கூட, அவர் செய்தனவாகக் கூறப்படும் நூற்றுக்கணக்கான அற்புத அதிசயங்களே.

எல்லா நாடுகளிலும், எல்லா மதங்களிலுமே, மதஸ்தாபகர்கள் தொண்டர்களது ஜீவிய சரித்திரங்கள், அற்புத அதிசய சம்பவங்கள் மலிந்து விளங்கும். நாஸ்திக புத்தியும் சாஸ்திர ஆராய்ச்சியும் மிக்க ஐரோப்பாவிலே, லூர்ட்ஸ் என்னும் ஊரிலே, பல அற்புத நிகழ்ச்சிகள் இவைபோல்வன நடக்கின்றன வென்று சிலர் நம்புகின்றனர். ஆயின் அறிவாளர் சிலர் சென்று அவற்றை ஆராய்ந்து சோதித்தும் இருக்கின்றனர். மேலே கூறிய சரித்திரத்திலிருந்து இராமலிங்க ஸ்வாமிகளைப் பற்றிய அற்புதங்கள் யாவும், நமக்குள், தமிழ் நாட்டிலே, போன தலைமுறையிலே நிகழ்ந்தனவாகக் கூறப்படுகின்றமை தெரியவரும். அவற்றை எவரும் இது வரை பரிசீலனை செய்யாததே, முதற்கண் கூறின சரித்திர வுணர்ச்சிக் குறைவுக்கும் சாஸ்திர ஞானக் குறைவுக்கும் சாக்ஷியாகும். இது நிற்க:

இராமலிங்க ஸ்வாமிகளின் நூல்களை ஆராயப்புகின், அவர் வசனநடை தமிழ் மாணவர்க்கு ஏற்ற முன் மாதிரியாகப் பாராட்டக் கூடிய தன்று. அவர் பாக்களிலே, ஆன்மஞான விஷயத்தையும் அநுபவங்களையும் பற்றிக் கூறி யிருப்பதை ஆராய, யான் அருகனல்லன். கவி வன்மையைப் பற்றிமட்டும் சிறிது கூற விரும்புகிறேன். சொற்போரிலும் வாதங்களிலும் நுண்ணிய பிரிவினைகளிலும் இங்கிதவுரைகளிலும் சிலேஷைகளிலும் விருப்பமுடையவ



ரென்பது, "அகரத்தைப்பற்றிய உசாக்கள்," இங்கிதமாலை முதலியவற்றால் விளங்கும் எனினும், அவர் கவிகள் பெரும்பான்மையும் இனியவாய்ச் செம்பாகமாய் எளிதில் பொருள் விளங்குவன வாகவே உள்ளன. அவரது சொல்லாட்சி மிகப்பெரிதென்னலாம். நிஷேகதினத் திரவைத் திருவாசகம் படித்துக் கழித்த இந்தப் பரிசுத்தர், தம்மை மாதர்வலைப்பட்ட தூர்த்தனாகவும் பாவியாகவும் கூறிச் சில பாக்கள் புனைந் திருப்பது, இவர், தமிழ்த்தொண்டர் கவி



வடலூர் ஞானசபை

மரபை யொட்டிப்பாடுபவர் என்பதைக் காட்டுமாயினும்; இவர், அம்மரபை மட்டுமே பற்றி நில்லாது, தன் இயற்கைக் குணத்தையும் உள்ள நிகழ்ச்சிகளையும், உள்ளவாறு கூறியிருப்பது (உதாரணமாக, பிள்ளைத்திருவிண்ணப்பத்தை நோக்குக) பெரிதும் பாராட்டற் பாலது.

இயற்கையின் அழகுகளை இவர் அதிகம் அனுபவித்துப் பாடிலர். . எனவே, கவிராஜ்யத்தின் ஒரு மிகப் பெரும் பகுதியை இவர் கண்டிலர் என்னலாம். இவர் பாக்களில் மிக்கு விளங்குவது, மேற்பரப்பில் தெளிவும் இனிமையும், உள்ளுறையில் தெய்வ பக்தியும் ஜீவகாருண்யமும் என்று கூறலாம். இவரது ஜீவகாருண்ய உணர்ச்சி, இவரது சரித்திரத்திலும் அடிக்கடி காணப்படுகிறது. துறவிக்கேற்றபடி, 'கொல்லாமை' யை இவர் மிகப்பாராட்டினர். மதவைரிகள் சிலர் இவர் பாக்களை "மருட்பா" என்று பழித்தகாலம் போய்விட்டது. இப்பொழுது, இவர் பாக்களைப் பாடாத சங்கீதக் கச்சேரி இல்லையெனலாம்; கிராமபோனிலும் அவற்றைக் கேட்கலாம். தாயுமானவர் பாடல், திருப்புகழ்களைப்போல, இவர் பாடல்களும் பாராட்டப் படுகின்றன; எனினும், அவற்றைப் பாடும் பலர், சொல் பொருள்களை நன்கு தெரிந்து கொள்ளாது, சீர்களை விட்டும் சிதைத்தும் தவறுபடப் பாடுவது விசனிக்கத் தக்கதே. மற்றெல்லாவற்றினும் ஜனங்களுக்குள் சருவ சாதாரணமாய் வழங்குபவை, இவர் பாக்களில், "வாழையடிவாழை" "வான் மாறினும் மொழி" "கல்லார்க்கும் கற்றவர்க்கும்" "நான் படும் பாடு" "படமுடியாதினித்துயர்" என்று வரும் ஐந்துமே என்கலாம். இந்நூலின் பிரதி யொன்றையும், இரண்டு சித்திரக்கட்டைகளையும் அனுப்பி யுதவிய ஸ்ரீமான் சாம்பசிவ முதலியாருக்கு, என் வந்தனங்கள் உரியன.

ஆத்ம ஞான சூக்ஷமங்கள் அநுபவங்களும், பக்திரஸமும், சொற்சுவை பொருட்சுவைகளும் மலிந்து கிடக்கும் ஆறுயிரத்துச் சில்வானம் பாட்டுக்களையும்; பல்லாயிரம் தமிழர்கள் அவதார புருஷராய்க் கொண்டு பணிந்தேத்தும் ஒரு பெரியோரது சரித்திரத்தையும் அளந்தறிந்து மதிப்பிடுவது, என் சக்திக்கு மட்டுமோ, இச்சிறு வியாசத்துக்கும் மேம்பட்டதாகும். விஷயத்தில் பற்றுள்ளோர், இந்நூலை வாங்கிப் படித்துத், தாம் தாமே சுவை கண்டு பயனடைதலே பொருந்தும். இராமலிங்கரது கவிகளின் முக்கிய குணங்களை நன்கு காட்டும் சில செய்



யுட்களை எடுத்து வரைந்து, இக்கட்டுரையை நிறுத்துவேன் :—

மையலகற்றீரொற்றியுளீர் வாவென்றுரைப்பீரோ வென்றேன்
செய்யவதன்மேற்சிகரம்வைத்துச் செவ்வனுரைத்தாலிருவாவென்
றுய்யவுரைப்பேமென்றார்நும் முரையென்னுரையென்றேனிங்கே
யெய்யுன்னுரையையென்கின்றா ரிதுதான்சேடி!யென்னேடீ! 1.

மாடொன்றுடையாருணவின்றிமண்ணுண்டதுகாண்மலரோன்ற
ளேடொன்றுடையாரொற்றிவைத்தாரூரைமகிழ்வோடுவந்தாலங்
காடொன்றுடையார்கண்டமட்டுங்கறுத்தார்பூதகணத்தோடு
மீடொன்றுடையார்மகளேநீயேதுக்கவரைவிழைந்தனையே. 2.

தேன்படிக்குமமுதாமுன் றிருப்பாட்டைத்தினந்தோறு
நான்படிக்கும்போதென்னைநானறியேனுவொன்றோ
வூன்படிக்குமுளம்படிக்குமுயிர்படிக்குமுயிர்க்குயிருந்
தான்படிக்குமநுபவங்காண்டனிக்கருணைப்பெருந்தகையே. 3.

தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச் சர்க்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே, தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலுந் தெங்கின் றனிப்பாலுஞ் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி, யினித்தநறு நெய்யளைந்தே யிளஞ்சூட்டி னிறக்கி யெடுத்தசுவைக் கட்டியினு மினித்திடுந்தெள் ளமுதே, யகித்தமறத் திருப்பொதுவில் விளங்கு நடத் தரசே யடிமலர்க்கென் சொல்லணியா மலங்கலணிந் தருளே. 4.

# குயில் கூவுவதேன்?

ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயர்,
B. A., B. L., சென்னை.




யிலானது அழகற்ற பக்ஷிகளுள் ஒன்று. அது கரிய சிறிய காக்கையைப் போன்றது. வசந்தகாலம் வரின், காக்கை வேறு குயில் வேறு என்பது யாவர்க்கும் தெரியும்படி, இனிமையாய்ப் பாடும். கூவாக் குயிலைப் பார்த்தோர் இல்லை. குடியனுக்குக் கள்

எப்படியோ, சூதாடிக்குச் சூது எப்படியோ, வீரனுக்குப் போர் எப்படியோ, அப்படியே குயிலுக்குக் குரலும். 'பாட்டில்லா ஜன்மம் பாழ்' என்பதே குயிலின் கொள்கை போலும்.

வசந்தகாலம்தான் பொதுவாகப் பக்ஷிகள் இனம் பெருகும் காலம். அக்காலத்திலே, பக்ஷிகளுக்கு மிகவும் அதிகமாக உற்சாகம் ஏற்படுகிறது; அவற்றின் குதூகலம் ததும்பி வழிகிறது. ஒவ்வொரு வகைப் புள்ளும் ஒவ்வொரு விதமாய்த் தனது சந்தோஷத்தை வெளியிடுகிறது. பொதுவாகப், பாட்டும், பெண்டிரைத் தேடும் கோலாகலக் கூத்துமாகவே, இந்த மன உல்லாசம் வெளித் தோன்றுகிறது. சிற்சில பக்ஷிகள் கூடுகட்டும் வேலையிலும், குஞ்சுகளுக்கு இரைதேடும் வேலையிலுமாகக் குதூகலமாய் அமர்கின்றன. வேறு சில பக்ஷிகளுள் இவ்வாறின்றிப், பலநிறச் சிறகுகளும் கொண்டைகளுமாக, இந்த உற்சாகம் மாறிக் காண்கிறது.

குயில்களுக்கு மேற்கூறிய வழிகளுள் ஒன்றைத் தவிர வேறில்லை. அவை, அழகிய சிங்கார உடையை உடுத்து, மணக்கோலம் பூணுவதில்லை; கூடு எப்படிக் கட்டுவதென்பதை அறியா; பெண் தேடும் வைபவத்தைப் பெரிதாகக் கொண்டாடுவதில்லை; தம் குஞ்சுகளைப் பேணிப் பாதுகாக்கும் இன்பம் இன்னதென்பதையும் தெரியா. குயில்கள், தம் உற்சாகத்தை வெளியிட ஒரே ஒரு வழிதான் மீந்துள்ளது, அதாவது, பாட்டு. ஆகையால்தான், குயில் எப்பொழுதும் பாடிய வண்ணமாகவே இருக்கிறது. அது பாடித் திரியும்போது நாம் அதைப் பார்த்தால், அதற்குப் பயித்தியம் பிடித்துவிட்டதென்றே சொல்வோம். வசந்த கால ஆரம்பத்தில் அது பாடத் தொடங்கும்போது, அதன் குரலானது சற்றுக் கரகரப்பாக இருப்பினும்*, வெகு சீக்கிரம் அதன் குரல் செவிக்கு இன்பம் பயக்கத் தக்கதாய் மாறி விடுகிறது †. இதுவும் ஒரு நன்மை தான். இல்லாவிடில், இடையறாது பாடப்படும் அதன் பாட்டானது, கர்ணகடோரமாய் நமது காதைத் துளைத்து, நமக்கும் பயித்தியம் பிடிக்கச் செய்து விடும். இப்பொழுதோ வெனில், "மாங்குயில் கூவிய சோலைகளை" நமது நாட்டில் யாவரும் புகழ்ந்து கொண்டாடும்படி, இனிமையாய்ப்பாடி இன்பம் பயக்கின்றது.

---

* சங்கீத வித்துவான்கள் பலரைப் போல } ப-ர்.
† சங்கீத வித்வான்களில் மிகச்சிலரையே போல. } ப-ம்.

# தட்சிண சரித்திர வீரர்

## 1. தளவாய் அரியநாத முதலியார்

### 2. இராஜசேவை

(708-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தன் குடும்பத்தை நலியும் வறுமையையும், தனக்குள்ள பல்வகைத் திறமையையும் நினைந்து நினைந்து, என் செய்வதென்று தனக்குள் அதற்கு முன்பே சூழ்ந்து கொண்டிருந்த அரியநாயகர், சோதிடப் பிராமணர் சொன்னதைக் கேட்ட நாள் முதல், விஜயநகரம் செல்வதே கடமையென்ந் தீர்மானஞ்செய்து, தெலுங்கு பாஷை கற்கத் தொடங்கினார். தம் அருமை மகன் அவ்வளவு நெடுந் தொலை செல்வதற்கு அவர் தாய் தந்தையர் முதலில் இணங்கிலரெனினும், இல்லாமையும் சோதிட நம்பிக்கையும் நாள்தோறும் தூண்டா நிற்க, முடிவில் ஒருவாறு சம்மதித்தனர்.

அப்பால், பிரயாணத்துக்கு ஏற்றதொரு நல்ல நாளிலே, கவலையுற்ற நெஞ்சு பதைபதைக்க, கண்ணீர் ஊற்றெடுத்துப் பெருக, அவர்கள் வாய்குழறி வழுத்திய ஆசிமொழிகளையும் புத்திமதிகளையும் தலைமேல் தாங்கிய அரியநாயகர், எப்பாடு பட்டேனும் வினைமுடிக்கும் உறுதியும் ஊக்கமும் ஆசையும் ஆவலும் கிளர்ந்தோங்கித் ததும்பி வழியும் உள்ளத்தோடு, விஜயநகரத்தை நோக்கிப் புறப்பட்டார். அவர் வெளியேறிய வேளை, 'வால் நீண்ட கருங்குருவி வலமிருந்து இடம் சென்றது' போலும்; ஏனெனின், 'கால் நடையாய் ஏகின' அவர், தென்திசை மறுபடி மீண்டபோது, 'கனக தண்டிமேல்' ஏறி வந்தனர்.

பட்டினியும் பசியுமாக வழிநடந்து, பல இன்னல்களைச் சகித்துக் கொண்டு, அரியநாயகர் விஜயநகரம் சென்றடைந்தவுடன், அரமனைச் சேவகம் முதலில் அவருக்குக் கிடைக்கவில்லை. காசியப கோத்திரத்தைச் சேர்ந்த கொட்டியம் நாகம நாயகர் என்ற பிரபுவின் மாளிகையிலுள்ள கணக்கப்பிள்ளைகளில் ஒருவராக அமர்ந்து கொண்டார். அந்த நாகம நாயகர், ஆதியில் ஸம்ஸ்தான உக்கிராணி வேலையிலிருந்தவர்; பின்பு படிப்படியாக உத்தியோகத்

தில் உயர்ந்து, 'தோசே கானா' என்னும் அரசிறை அங்கத்தின் தலைவராகி, இப்பொழுது தளகர்த்தராயும் தக்ஷிண நாடுகளுக் கெல்லாம் மகாமண்டலேசுரராயும் விளங்கினார். எனவே, கிருஷ்ண தேவ மகாராயருக்கு அடுத்த படியிலுள்ள பிரபுநாயகர்களில் அவர் ஒருவ ரென்பது தேற்றம். அவர் நெடுங்காலம் மக்கட்பேறின்றித் தவித்து மனமேங்கி, தன் மனையாட்டியுடன் தீர்த்த யாத்திரைகள் செய்து, காசியை அடைந்து, கங்கைக் கரையிலே கடுந்தவம் புரிந்து, விசுவேசுரர் கருணையினால் ஒரு நன் மகவைத் தன் வாழ்க்கையின் பிற் பகற்பொழுதில் பெற்றெடுத்து, அம் மகனுக்கு விசுவநாதன் என்று பெயரிட் டிருந்தார்.

இவ்வளவு பெரும்பாடு பட்டுப் பெற்ற தன் அருமருந்தன்ன பிள்ளையை, நாகம நாயகர், தன் உயர் பதவிக்கும் தன்மகன் எதிர்பார்க்கக்கூடிய பெரும் பாக்கியத்துக்கும் ஏற்றவாறு கல்வியறிவுகளில் சிரேஷ்ட முறும்படி பயிற்றுவித்தது மன்றி; விசுவநாதரது பதினைந்தாவது வயதிலேயே, கிருஷ்ணதேவ ராயருக்கு அடைப்பம் முதலிய சிறு பணி யாற்ற அவரை நியமித்து, நரபதியின் பிரியத்தைக் கவரும்படிச் செய்திருந்தார். அழகிலும் அறிவிலும் ஆள்வினையுடைமையிலும், குதிரை யேற்றம் மிருக வேட்டையில் வாள் மற் போர்கள் சிலம்பங்கள் முதலிய சரீரப் பயிற்சிகளிலும், ஒருங்கே சிறப்புற் றிலங்கிய விசுவநாதர், தன் சௌரிய சீலங்களால் நரபதியின் வாஞ்சையை நாளுக்கு நாள் கொள்ளை கொண்டு, அவர் அருமை மகனோ என அறியாதார் மருளும்படி, இராஜ சபையில் விளங்கினார். அகத்துப் பொலிவு முகத்தே விளங்கும் கட்டிளங் காளையும், அவரைப் போலவே கற்றுத் தேர்ந்த அருங்கலை விநோதருமான அரியநாயகர், "உணர்ச்சி தான் நட்பாம் கிழமை தரும்" என்னும் உண்மைப்படி, விசுவநாதருடன் விரைவில் உற்ற நண்பினராகி விட்டது, வியப்பன்றே. இளைஞர் இருவரிடைப் பெருநட்பைக் கண்டுகந்த நாகம நாயகரோ, அல்லது அவர் தேவியாரோ, தன் மகன் பெயரொடு பொருத்தி, அரிய நாயகரை அரிய நாதர் என்று அழைக்க, அக்காலம் தொட்டே இவர் பெயர் அவ்வாறு மாறி வழங்கத் தலைப்பட்டது என்று கூறுவது, பொருந்தாதோ? விசுவநாதரின் நட்பினாலும், தன் வேலைத்திறமை நல்லொழுக்கம் சத்தியம் முதலிய நற்குணங்களினாலும், அரியநாதர், நாகம நாயகரின் நன்மதிப்பை மேன் மேலும் பெற்று, உத்தியோக பதவியில் உயர்ந்து வந்தது மன்றி,



விசுவநாதர் மூலமாக நரபதியின் அறிமுகத்தையும் கடாக்ஷத்தையும் அடையலானார்.

இவ் வண்ணம் நிகழும் நாள்களிலே ஒருநாள், தன் யஜமானருடன் அரியநாதரும் மகாராயரின் சபைக்குச் செல்ல நேர்ந்தது. அப்பொழுது, அநேக வித்துவான்களும் போர்வீரர்கள் பலரும் மதிமந்திரிகளும் மலிந்து பொலிந்த அச் சபையிலே, உடுபதி போன்று விளங்கிய கிருஷ்ண தேவ ராயர், அரசியற் பணிகள் முடிந்து, ஏதோ விளையாட்டாக அளவளாவும் சமயத்திலே: "இன்று காலை நாம் அரமனைத் தடாகத்தில் நீராடச் சென்ற பொழுது, அழகிய தாமரை மொட்டொன்று,—ஒரு சாண் நீள மிராது, முக்காற் சாண்தா னிருக்கும்,—தாள் முழுதும் தண்ணீர்க்குள்ளும், மொட்டு மட்டும் நீரின்மட்டத்துக்கு மேலாகவும், நின்றது. நாம் தடாகத்தில் குதித்த அதிர்ச்சியினால், அந்த மொட்டு, கொஞ்சதூரம் பின்செல்ல,—அப்படிச் சென்றதூரம், நாலுசாணிராது, 3¾ சாண் என்கலாம்,—அதன் தலையும் நீர் மட்டத்துக்குச் சமமாக நீர்க்குள் மறைந்து விட்டது. ஆயின், அது நின்ற விடத்திலே தடாகத்தின் ஆழ மென்ன?" என்று கேட்டார்.

அரசரது வினாவைக் கேட்டு, சிலர் விழித்தனர்; சிலர் ஏதேதோ முணுமுணுத்துக் கணக்குப் பார்க்கத் தொடங்கினர்; ஒருவர், "எவராலும் சொல்ல முடியாது" என்றார்; மற்றொருவர் "நான் போய் அளந்து பார்த்து வருகிறேன்" என்று புறப்பட்டார். இவ்வாறு சபையோர் யாவரும் திகைக்கும் தறுவாயிலே, ஒரு தூணோரம் ஒதுங்கி நின்று கொண்டிருந்த அரியநாதர்: "மகாராயனுவாரு உத்திரவானால், ஊழியன் விண்ணப்பம் செய்கிறேன்" என்று, வணக்கத்துடன் சொன்னார். எவரும் எதிர்பாராத இவ் வுரையைத் திடீரெனக் கேட்டவுடன், அனைவர் கண்களும் அவ்வரை நோக்கித் திரும்ப, கிருஷ்ணதேவராயர்: "எவர் அது, அரியநாதுடுவா? முன்னே வா; சொல், கேட்போம்" என்று, ஆஜ்ஞாபித்தார். சிம்மாசனத்தின் அருகே சென்று வணங்கி, அரியநாதர்: "அவ்விடத்தில் தடாகத்தின் ஆழம், அதாவது, தாமரைத் தண்டின் நீளம், சந்நிதானத்தின் பக்கத்தில் அதோ நிற்கிறாரே, விசுவநாத நாயகர், அவர் உயரமேதான்" என்று, விநயமாய் விடையளித்தார்.

நரபதி, உடனே இடப்பக்கம் நோக்கித் திரும்பி: "உன் உயர மென்ன, விசுவா?" என்று கேட்க, விசுவ

நாதர்: "ஒன்பது சாண்" என்று விடையளித்தார்.

இதைக் கேட்ட கணிதசாஸ்திரி ஒருவர், கணக்குப் பார்த்து, "விடை சரிதான்" என்றார். மற்றொருவர்: "இல்லை, தப்பு" என்றார். அப்பால், நரபதியின் கட்டளைப்படி ஒருவன் சென்று, முழக்கோலால் அளந்து வந்து, அவ்விடத்தில் குளத்தின் ஆழம் ஒன்பது சாண்தான் என்று தெரிவித்தான்.

ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் அடைந்த கிருஷ்ணதேவராயர், அரியநாதரைப் பார்த்து: "அது தான் கணக்கு: விசுவாவின் உயரத்தை எப்படி அளந்தாய்?" என்று கேட்டார்.

அரியநாதர், மீண்டும் வணங்கி: "ஊழியன் உயரம் 8½ சாண்; அவர்கள் என்னைவிட அரைச் சாண் அதிகம் இருப்பார்கள். கண் அளவாததா கை அளக்கும்?" என்று, பதில் அளித்தார்.

அன்று முதல், அரியநாதரை அரமனைச் சேவகத்திலேயே நரபதி அமைத்துக்கொள்ள, அவரும் விசுவநாதரும் இன்னும் நெருங்கிப் பழகவும், நரபதியின் கவனத்தை அவர் அடிக்கடி அடையவும் நேரலாயிற்று.

விஜயநகர ஸம்ஸ்தானத்தில் நவராத்திரித் திருவிழாவை விசேஷமாய்க் கொண்டாடுவது வழக்கம். படைவீரர் அடவி சென்று வேட்டையாடி உயிரோடு பிடித்துக் கொண்டுவந்த காட்டெருமைக்கடாவைக் காளிகாதேவிக்குப் பலிகொடுத்தலோடு, திருவிழா முடிவுபெறும். அவ்வாறு பலியூட்டப்படும் கடா, ஒரே வெட்டில் மடியவேண்டும்; அவ்வண்ணம் வெட்டத் தவறினால், அப் பிழை நாட்டுக்கே கேட்டை விளக்கும் என்பது பொதுஜன நம்பிக்கை.

அரியநாதர் அரமனைச் சேவகரான ஆண்டிலே, நவராத்திரியின் கடைநாளன்று, அவரும் பரிஜனங்களுடன் காளிகோயில் சென்றிருந்தார். அவ்வாண்டில் பலிக்காகப் பிடித்து வந்திருந்த எருமைக்கடா, மிகப் பெரிதாயும் கொழுத்ததாயும் மூர்க்கமுள்ளதாயும் இருந்தது மன்றி, அதன் கொம்புகள், வரிச்சல் பிடித்தாற்போல, முதுகின் இருபுறமும் வால்வரை நீண்டிருந்தன. கொம்புகள் கழுத்தைக் காத்து அதன் மேலாக விருந்ததனால், கொம்புகளையும் கழுத்தையும் சேர்த்து வாளால் ஒரேவெட்டில் வெட்-



டித் துணிப்பது அசாத்தியமா யிருந்தது. மீண்டும் காடு சென்று வேறொரு கடாவைப் பிடித்துக் கொணர்தற்கும் போதிய அவகாச மில்லை. இதனால், பிரபுக்களும் நரபதியும் மனம் கவன்று கையற்று உழன்று கொண்டிருக்கையில், அரியநாதர், அந்தப் பலிக்கடாவை எவ் வண்ணம் பிணித்துக் கழுத்திலே எந்தப் பொருத்துவாயில் வெட்டினால் கொம்புகளைத் தப்பி ஒரேவெட்டாய்த் துணித்துவிடக்கூடு மென்று, யுக்தி சொன்னார் அவ்வாறே கடாவை வலித்துக் கட்டி, அங்கிருந்தவர் அனைவரினும் வாள் பயிற்சியிலே சிறந்தவரான விசுவநாதரே கத்தியை எடுத்து வெட்ட, கடாப்பலி நன்கு நிறைவேறிற்று. அதனால் கவலை நீங்கி மகிழ்ச்சிகொண்ட கிருஷ்ணதேவராயர், ஸம்ஸ்தானத்துக்கு நேர விருந்த ஒரு பெரிய விபத்தை விலக்கிக் காத்து தவினவராகவே அரியநாதரை மெய்ச்சிப் புகழ்ந்து, அன்றுமுதல் அவரை அரமனையில் பெரிய கணக்கனாக்கிக் கொண்டார்.

இவ்வாறு சிலகாலம் இராயர் அரமனை உத்தியோகத்திலிருந்து படிப்படியாக உயர்ந்து வருகையில், கலிங்கத்திலும் இராயச்சூர்ப் பக்கங்களிலும் இந்தியச் சிற்றரசர்களாலும் மகமதியர்களாலும் நேர்ந்த கலகங்களை அடக்குதற்கு, மகாராயருடன் அரியநாதரும் சென்றபோது, தன் போர்த்திறனையும் வீரத்தையும் மெய்ப்பித்துக்காட்டி, மந்திர சபையில் ஒரு ஸ்தானத்தையும், முதலியார் என்ற இராணுவப் பெரும்பட்டத்தையும், பல்லக் கேறும் உரிமையையும், பெற்றார்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப, எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்னும் பொய்யாமொழிக்குச் சான்றாக விஜயநகரத்திலே தான் விளங்கி வருவதைத் தன் இனத்தார்க்குத் தெரிவித்தற் பொருட்டு, மற்றப் பொருள்களோடு, தங்கத்தால் ஒரு கலப்பையையும் தாற்றுக்கோலையும் செய்து, தன் தமக்கையார்க்கு வெகுமானமாக அனுப்பியது, இக்காலத்திற் போலும். இவர் விவாகம், விஜயநகரத்திலே, மகாராயர் சந்நிதானத்தில் நிறைவேறிய தென்றும், அக்காலத்தில் பத்துலக்ஷம் பொற்காசுகள் செலவழித்தன ரென்றும், தன் இனத்தார் நாற்பதினாயிரவருக்கு விருந்தூட்டின ரென்றும் கூறுவர்.

## 3. மதுரை நாயகர் வமிச ஸ்தாபனம்.

விஜயநகரம் ஸம்ஸ்தானத்துக் கர்த்தாக்களின் மேற் பார்வையில், சேர சோழ பாண்டியர்கள் தத்தம் நாடுகளை ஆண்டுவந்தன ரென்று மேலே கூறப்பட்டது. கிருஷ்ண தேவராயர் ஆட்சியிலே, சோழ நாட்டை வீர சேகரனும், பாண்டிய நாட்டைச் சந்திர சேகரனும் இவ்வாறு ஆண்டு வருகையில், வீர சேகரன் பாண்டியின்மேற் படையெடுத்துச் சென்று, சந்திர சேகரனை வென்று விரட்டிவிட்டு, அவன் நாட்டைப் பிடுங்கிக்கொண்டான். இந்த அக்கிரமத்தைச் சோழ பாண்டிய கர்த்தாக்கள் கவனித்திலர். நாடிழந்த சந்திர சேகரன், உயிர் தப்பி யோடி, விஜய நகரத்தை அடைந்து, மகாராயர் சந்நிதானத்தில் தன் குறையை முறையிட்டுக்கொண்டான். அதைக் கேட்ட கிருஷ்ணதேவராயர், தன் ஸம்ஸ்தானத்தில் அப்படிப்பட்ட அநியாயம் நிகழ்வதையும், அதைத் தன் கீழ்அதிகாரிகள் முறைசெய்யா திருப்பதையும் பொறாதவராகி, தக்ஷிண மாமண்டலேசுரரான கொட்டியம் நாகமநாயகரை அழைத்து, அவர் பராமரிப்புக் குட்பட்ட பிரதேசத்தில் நடந்த அக்கிரமத்தை அவரே நேரிற் சென்று ஒழுங்குபடுத்தி, சந்திர சேகரனை மீண்டும் பாண்டிய ராஜனாக முடிகவித்து மீளும்படி, ஏவினார்.

மகாராயரின் ஆணையின்படி, நாகம நாயகர், போதிய சைனியங்களுடன் பாண்டிமண்டலம் சென்று, வீரசேகரச் சோழனைப் போரில் முறியடித்து, பாண்டிய நாட்டை மீட்டி, அவனுக்கு நன்மதி கூறிப் பயமுறுத்தி எச்சரித்தனர். அப்பால், நாட்டின் சீர்கேடான நிலைமையையும் சந்திரசேகரனது திறமைக் குறைவையும் அறிந்து, அவன் வசம் நாட்டைவிடாமல், தானே நேரில் கண்காணித்து வந்தார். ஒருகால் வீர சேகரனை வென்றாலும், நாகம நாயகரைத் தன்னால் என்றுமே வெல்ல முடியாதென்பது, சந்திர சேகரனுக்கு நன்கு தெரியும். இதனால், நாயகரின் செயலையும், தன் பிரயத்தனம் வீண் போனதையும், கண்டு வருந்தி மனமிடிந்து, சந்திரசேகரன் மடிந்தான். அதன் பின், அவன் மகன் சுந்தரகுமாரன், மகாராயர் திருமுன்பை அடைந்து: "மகா ராஜாதிராஜ பரமேசுர நரபதி மஹாராயரே! 'வேலியே தின்றால் தெய்வமே காவல்' என்பர். எங்கள் குடியின் குறையைத் தீர்த்துவைத்தற் கென்றே, தக்ஷிண மகா மண்டலேசுரரான நாகமநாயகரை அனுப்பினீர்கள். சந்நிதானத்து ஆணையின் வண்ணமே



அவரும் வீர சேகரனை வென்று, எங்கள் நாட்டை மீட்டினார். அதன் பின்பு, தங்கள் கட்டளைப்படி என் தந்தைக்குக் கொடுத்துவிடாமல், தானே அதை ஆள நினைத்து வைத்துக் கொண்டுவிட்டார். தலைமுறை தலைமுறையாக என் முன்னோர்களும், என் தந்தையுமே ஆண்டுவந்த பாண்டி மண்டலத்தை, தங்கள் தர்மராஜ்யத்திலே, நான் மட்டும் ஆளாது, பரதேசிகள்போல் அலமருதல் முறையாகுமோ?

"அல்லற்பட் டாற்றா தழுத கண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

என்று நாயனார் கூறியிருக்கின்றனரே" என்று, ஓலமிட்டுக் கண்ணீர் பெருக்கினான்.

இதைக் கேட்ட மகாராயருக்குக் கடுங்கோபம் உண்டாகிவிட்டது. நரபதி ஆக்கினையை மீறி நடந்ததின் முகாந்தரத்தை உடனே தெரியப்படுத்தும்படி, நாகம நாயகருக்குக் கட்டளை யனுப்பினார். நாகம நாயகர், பாண்டி மண்டலத்தின் நிலைமையையும், சந்திர சேகரனது ஆற்றலின்மையையும், அரசு விரும்பி யன்றிக் குடிகளின் நன்மையை நாடியே அவன் மகனுக்கு நாட்டைக் கொடாது, தான் அவ்வாறு செய்தமையையும், விரிவாய் விண்ணப்பம் செய்துகொண்டது மன்றி, எல்லாவற்றையும் நேரில் எடுத்தோதும் பொருட்டு, தன் நண்பர் இராமபத்திர நாயக் என்று, விஜயநகரத்துக்கு அனுப்பினார். ஆயின், இப்பு[illegible]ங்களை யெல்லாம் கிருஷ்ண தேவ ராயர் ஒப்ப செ[illegible] 'பாண்டியநாடு சந்திர சேகரனுக்குப் பின் அவன் [illegible] சுந்தரகுமாரனது உரிமை யாதலின், அவனை நீக்குவது அநீதி' என்னும் ஒன்றை மட்டுமே அவர் கருதினவராய், உடனே நாட்டைச் சுந்தரகுமாரனிடம் ஒப்புவித்து விடும்படி, மீண்டும் ஆஜ்ஞாபித்தார்.

"அறிகொன் றறியான் எனினும், உறுதி,
உழையிருந்தான் கூறல் கடன்"

ஆதலின், அமைச்சரில் சிறந்த நாகம நாயகர், மஹாராயர் ஆணையையும் மதியாது, குடியோம்புதலையே தலைக்கடனாகக் கொண்டு, ஒழுகலானார்.

இதை அறிந்தவுடன், அளவற்ற சினத்தையும் சிறுமையையும் அடைந்த கிருஷ்ணதேவராயர், தன் சபையோரைப் பார்த்து: "இந்த அநீதியை முறைசெய்து, அந்த ராஜத்துரோகியின் சிரசைப் பாதகாணிக்கை யாகக்

கொண்டுவர வல்ல வீரன் எவனும் இங்கில்லையோ?" என்று கர்ச்சித்தார்.

நாகம நாயகரினும் உயர்ந்த பிரபுவேனும், சிறந்த போர்வீரனேனும், ஸம்ஸ்தானத்தில் இல்லாமையாலும்; அவர் மகன் விசுவநாத நாயகர், மகாராயரின் கண்மணி போன்றவர், சில்லாண்டுகளுக்கு முன்னரே கலிங்கத்து வேந்தனை வென்றடக்கவும் இராயச்சூரிலே மகமதியரை முறியடித்து ஒடுக்கவும் மகாராயருடன் சென்று, தன் போர்வலி சூழ்ச்சிகளால் புகழ்பெற்ற இளஞ்சிங்கம் போன்றவர், அச் சபையிலே வீற்றிருந்தமையாலும், எவரும் முன்வரத் துணிந்திலர்.

"இதைச் செய்யவல்ல வீரன் ஒருவனும் இல்லையோ?" என்று, மீண்டு மகாராயர் வினவ, விசுவநாதரே எழுந்து வணங்கி: "மகாராஜா! அவர் என் தந்தையே; நான் அவர் ஒரே மகனே; ஆயினும் என்? இராஜ சேவையில், தந்தை மகன் என்னும் தாக்ஷணியம் ஏது? அடியேனுக்கு ஆஜ்ஞையானால், நானே மதுரை சென்று, இப்பணியை முடித்து வருகிறேன்" என்று கூறினார்.

இதைக் கேட்டவுடன், மகாராயருள்பட, அனைவரும் திகைப்புற்றனர். ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. பிறகு விசுவநாதர்: "என்னை இவ் விஷயத்தில் சந்தேகிப்பது இயல்பெனினும், அப்படிச் சந்தேகிக்க வேண்டாம்; முழுதும் நம்பலாம்; நான் ஒருநாளும் மோசப் மாட்டேன்" என்றார்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண் விடும்"

சூழ்ச்சியில் நெடுங்காலம் பழகிக் கைவல்லவரான கிருஷ்ணதேவராயர், "சரி: அப்படியே செய், விசுவா! உன் நாயனா இப்படி நடப்பாரென்று நாம் கனவிலும் எண்ணவில்லை. கெடுங்காலத்துக் கெடுமதியே இது. அவர் துரோகத்தைக் கண்ட பின்னும் கூட, உன்னிடத்தில் நமக்கு முழு நம்பிக்கையே. நீயே இப் பணிமீது செல். இராஜத் துரோகி யாயினும் அவர் உன் தந்தை யாதலின், முதலில் ஆஜ்ஞாபித்தபடி, நீ அவர் தலையைக் கொணர வேண்டாம். அவரை வென்று சிறை செய்து, நம்மிடம் அனுப்பி விடு" என்றார்.

மகாராயர் இவ்வண்ணம் சபையில் உத்திரவு செய்த போதினும், அவர் மனம் முழுதும் சமாதானப் பட



வில்லை. அதனால், "பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்" என்பது போல, அரியநாதரையும் விசுவநாதருடன் மதுரைக்கு அனுப்பினார். அரியநாதரின் திறமையையும் விசுவாசத்தையும் கவனித்துவந்த மகாராயர், எவ்விதத்திலும் விசுவநாதருக்கு அவர் தாழ்ந்தவரல்லர், மேலானவரே என்பதை, அறிந்திருந்தார். நாகமநாயகர் விஷயத்திலோ, அவர் ஒரே மகன் மேல் சமுசயம் கொள்வது கிரமமா யிருக்க, அரியநாதரிடம் அவநம்பிக்கை கொள்ள இடமே யில்லை; அன்றியும், விசுவநாதர் தமிழ்நாட்டை யறியாதவர்; அரியநாதரோ, அவ்வூரார், நாட்டு வளப்பத்தையும், குடிகளின் பழக்க வழக்கங்களையும் நன்கறிந்தவர். இக்காரணத்தாலும், இருவரும் உற்ற நண்பர்களானதாலும், விசுவநாதர், மகாராயரின் உட்கருத்தை அறிந்துகொள்ள வில்லை.

மிகப் பெரிய சதுரங்க சைனியங்களோடு நண்பர்கள் இருவரும் தென்திசை நோக்கிச் சென்றனர். முதலில், நாகம நாயகருடன் சண்டை யிடாமல், காரியத்தை முடிக்கப் பார்த்தார்கள்; அது பலிக்க வில்லை. அப்பால் யுத்தம் நிகழ்ந்து, நாகமநாயகர் தோல்வி யடைந்து, சிறை செய்யப் பட்டார்.

பின்பு விசுவநாதர், 'என் செஞ்சோற்றுக் கடனைத் தீர்க்கும் பொருட்டு நான் செய்ததை மன்னித்தருளும்' என்று, தன் தந்தையை வணங்கிப் பிரார்த்தித்து, அவர் மனமுகந்து பிழைபொறுத்து வாழ்த்திய ஆசிகளைப் பெற்றுக்கொண்டு, அவரைக் கிருஷ்ணதேவராயரிடம் அனுப்பினார்.

இந் நிகழ்ச்சிகளைக் கண்ணுற்றவர்கள்,

"தந்தை மகற் காற்றும் நன்றி, அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

"மகன் தந்தைக் காற்றும் உதவி, 'இவன் தந்தை
என் நோற்றான் கொல்?' எனும் சொல்"

என்னும் இலக்கணக் குறள்களுக்கு இவ் விருவருமே ஏற்ற இலக்கியங்களாவர் என்று கூறிப் புகழ்ந்தனர்.

தன்னிடம் அடைப்பத் தொழிலிற் சிறுவனா யமர்ந்த காலமுதல் அன்றுவரை தான் நேசித்து வந்த விசுவநாதரின் வீரத்தையும் ஈடெடுப்பில்லாத இராஜபக்தியையும் கண்டு உள்ளம் பூரித்து மகிழ்வடைந்த மகாராயர், அவர் தந்தையும் நெடுங்காலமாகத் தன் உண்மை ஊழியருமான நாகம நாயகரை மன்னித்து, விடுதலை செய்துவிட்டார்.

பாண்டிய நாட்டின் உண்மை நிலையையும் பழைய பாண்டிய வமிசத்தாரது ஆட்சிக் கோளாறுகளையும் பற்றி, நாகம நாயகர் நேரில் தெரிவித்துக் கொண்டது போலவே, அரியநாதரும் விசுவநாதரும் சேர்ந்து அனுப்பிய அறிக்கைப் பத்திரமும் இருந்தது. இதனிடையில், சுந்தர குமாரனும் தற்செயலாய் இறந்துவிட்டான். இதனால், பிற்காலத்தில் மதுரைச் சீமையை ஆண்டுவந்த பாண்டிய வமிசம் சந்ததி யற்றுப் போய்விட்டது. முகமதியர் ஆதியில் தக்ஷிணத்துக்கு வந்து பாண்டிய மண்டலத்தைக் கைக்கொண்ட போது மதுரையை விட்டு ஓடிப் போய்த் தென்காசியைத் தலைநகராக்கிக் கொண்டு, அந்தப் பிரதேசத்தில் இன்னும் ஆண்டுவந்த கிளைவமிசத்திலிருந்து ஒரு வாரிசைத் தேடிக்கொணர்ந்து முடிசூட்டுவதைவிட, விசுவநாதரும் அரியநாதருமே நாட்டைப் பராமரித்து வருவதே மேலெனக் கருதி, அவ்வண்ணமே மகாராயர் ஆஜ்ஞாபித்து விட்டார். அப்பால், அரியநாதர், தன் நண்பர் விசுவநாதரைப் பாண்டியநாதனாக்கி; இராஜ்ய பரிபாலனத்திலே, இராணுவ விஷயங்களை மேற்பார்க்கும் சேனாபதி வேறு, மற்றெல்லா விஷயங்களையும் மேற்பார்க்கும் பிரதானி வேறு என்று அதுவரை இருந்ததை ஒழித்து, தளவாய் என்ற பட்டத்தோடு, தானே எல்லா விஷயங்களையும் கண்காணித்து வந்தார். இவ் விருதிறப்பட்ட அதிகாரங்களையும் அவரே வகிக்கும்படி மகாராயர் செய்ததே, அரியநாதரின் போர்வலி மந்திரச்சூழ்ச்சி ஆட்சித்திறமை யோக்கியதைகளுக்குத் தக்க சான்றாகும்.

இவ் வண்ணம் தளவாய் அரியநாத முதலியாரும் விசுவநாத நாயகரும் கூடிப் பாண்டியமண்டலத்தைக் கைக்கொண்டு ஆளத் தொடங்கிய காலத்திலே, நாடிருந்த நிலைமையைச் சிறிது எடுத்துரைத்தல் பொருந்தும்: பதினான்காம் நூற்றாண்டின் துவக்கத்தில் முகமதியர் உட்புகுந்து, பழைய வேந்தர்களைத் தென்காசிப் பக்கம் ஓட்டிவிட்டு, நாட்டைக் கைக்கொண்டு, இரண்டு தலைமுறைகளாக ஆண்டு வந்தனர். அந்த நாளிலே நிகழ்ந்த அழிம்புகள் பல. பிறகு, ஹொய்சால வமிசத்தார்கள் வந்து முகமதியரைப் புறங்கண்டு துரத்திவிட, பாண்டியநாடு விஜயநகர ஸம்ஸ்தானத்திற்கு உட்பட்டது. கிருஷ்ணதேவ மகாராயர் பட்டத்துக்கு வருமுன்பு, அந்த ஸம்ஸ்தானமே வலிகுன்றிச் சீர் குலைந்து குழம்பிய காலங்களிலே, பழைய பாண்டியர்கள் மீண்டும் ஆங்காங்கு ஆதிக்கம் பெறலாயினர். கிருஷ்ணதேவராயர் ஆட்சித் துவக்கத்தில் இவர்களின்



அதிகாரம் ஒருவாறு ஒழுங்குற்று, அவர் நியமித்த கர்த்தாக்களின் கீழ் நிகழ்ந்து வந்தது. அப்பால் நாகம நாயகரின் படையெடுப்பும் ஆட்சியும், அதன்பின் அரியநாதர்—விசுவநாதர் படையெடுப்பும் ஆதீனமும் நிகழலாயின: இவ்வாறு கழிந்த இரண்டு நூற்றாண்டுகளில் பல ஆட்சிப் புரட்சிகளுக்கும் குழப்பங்களுக்கும் உள்ளாயிருந்த குடிகள், இப்பொழுது, கள்ளர் மறவர் முகமதியர் தொட்டியர் வடுகர் முதலிய பலதிறப்பட்ட போர்வீரர்களின் கொள்ளை கொலைகளால் நொந்து வருந்திக் கொண்டிருந்தனர். சோழநாடும் பாண்டியும் கலப்பதால் ஆட்சியுரிமை எல்லைகள் நன்கு வரையறுக்கப்படாத பிரதேசத்திலே, கள்ளர் மறவர்களின் இமிசை பொறுக்க வொண்ணாததா யிருந்தது. சுந்தர குமாரனது மரணத்தினால் மதுரையை ஆண்டுவந்த புராதன பாண்டிய வமிசம் முளையற்றுப் போய், விசுவநாத நாயகரே முடிசூடிய பின்னர், பழைய பாண்டியன் ஒருவனது வைப்பாட்டி மக்கள் ஐவர், 'பஞ்ச பாண்டியர்' என்ற பட்டத்தைப் பூண்டு, "யானும் உண்டு பேயாடி: எனக்கும் உண்டு பாற்சோறு" என்பார் போன்று நாட்டுக்கு உரிமை பாராட்டி, அடங்காப் பிடாரிகள் போலக் கொழுத்துத் திமிருற்று ஆறலை கள்வராயும் வேறு வேலையில்லாராயும் திரியும் படையாட்களைத் திரட்டிக் கொண்டு, தம்மா லியன்றமட்டும் தெற்குப் பிரதேசத்தில் அழிம்பு செய்து வந்தனர்.

இத் தன்மையாக அலங்கோலப் பட்டுக் கிடந்த பாண்டி மண்டலத்தைச் சீர்திருத்தி முறைசெய்யத் தொடங்கி, அரியநாதரும் விசுவநாதரும், முதலில் தம்மதான வல்லத்துக் கோட்டையைச் சோழநாட்டாருக்குக் கொடுத்துத் திருச்சிராப்பள்ளியைத் தாம்கொண்டு, இருநாட்டெல்லைகளையும் வரையறுத்துக் கொண்டனர். அப்பால், கள்வர்களைத் தம் ஆக்கினா சக்கரத்துக் குட்படுத்தித் தண்டனை செய்தும், பயமுறுத்தியும், சோரபயத்தை அறவே தொலைத்தனர். காவிரி யாற்றின் இருபாங்கரும் அடர்ந்தோங்கிய காடுகளை வெட்டி யழித்துத் திருத்தி, நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தி, அக்கிரகாரங்களையும் கிராமங்களையும் கோயில்களையும் பிரதிஷ்டை செய்தனர். திருவரங்கத்துக் கோயிலைப் புதிப்பித்துப் பெரிதாக்கிக் கட்டினர். திரிச்சிராப்பள்ளியை, ஒன்றின் பின் ஒன்றாயுள்ள இரு பெருங் கோட்டை மதில்களாலும், அவற்றுக்குப் புறம்பே அகன்றாழ்ந்த பெரியதோர் அகழியினாலும், காவல் செய்தனர்; தெப்பக் குளத்தைத் தோண்டிக் கட்டி,

மலைக்கோயிலைச் செப்பனிட்டு, ஓர் அரமனையையும் பழைய வீதிகள் ஆவணங்களையும் நிருமாணஞ் செய்தனர். ற்றி,

இவ்வேலைகள் ஒருவாறு நடந்து வருகையில், அ லவே, றைக் கண்காணித்து நிறைவேற்ற விசுவநாதரை விட அறிக் விட்டு, அரியநாதர் தென்பால் சென்று, ஆங்குள்ள குழ ந்தர பத்தை ஒழுங்குபடுத்தி, பஞ்சபாண்டியர்களோடு போர் ால், புரியலானார். ஆறுமாத காலமாகச் சண்டை நடந்தது. ய இதற்குள் விசுவநாதரும் வடபாலிருந்து வந்து சேர்ந்து கொள்ளவே, நண்பர் இருவருஞ் சேர்ந்து மும்முரமாய்ப் போராடினர். அதற்கும் பஞ்சபாண்டியர்கள் மடங்க வில்லை. இவ்வண்ணம் இருபக்கத்திலும் படைவீரர் பல் லாயிரர் வீணே மாண்டொழிந்து, உழவுக்கும் தொழி லுக்கு முரிய ஆள்வன்மை நாளுக்குநாள் குன்றி, நாடு வறண்டுபோவதைக் காணச் சகியாத அரியநாதர், ஒரு சூழ்ச்சி செய்தார்: அதாவது, எதிர்க் கட்சியில் ஒருவனும் தம் கட்சியில் ஒருவனும் மாத்திரம், சுவாமி சந்நிதியில் யுத்தம் செய்ய, கடவுள் கிருபையினால், கடவுள் சாக்ஷியாக, எவன் வெல்கிறானோ, அவன் கட்சியே ஆதிக்கத்தைப் பெற, எதிர்க்கட்சியார் போரொழிந்து, தோல்வியை ஒப் புக்கொண்டு கீழ்ப்படிவது, என்பதே.

ஆசுகவி காளமேகப் புலவரின் சரித்திரத்தைப் படித் துள்ளோர், கயத்தாற்றாரை அறிவர். அவ்வூர்ப் பெரு மாளைத்தான்:—

"பாளைமணம் கமழ்கின்ற கயத்தாற்றுப் பெருமாளே !
பழிகாரா! கேள்:
வேளை என்றால், இராவேளை பதினாறு நாழிகைக்கு
மேலாயிற் (று) ; என்
தோளை முறித் ததும் அன்றி, நம்பியானையும்கூடச்
சுமக்கச் செய்தாய் ;
நாளை இனி யார்சுமப்பார் ? எந்நாளும் உன்கோயில்
நாசம் தானே."

என்று, அவர் வயிறெரிந்து பாடியது. அந்தக் கயத்தாற் றுப் பெருமாள் சந்நிதியிலே, இருதிறத்துப் படைவீரர்கள் பிரபுக்கள் பல்லாயிரர் குழுமிய மகாசபையின் நடுவிலே தான், தெய்வ சம்மதத்தை அறியும் பொருட்டு, இந்தத் தனிப்போர் நிகழ்ந்தது. பாண்டியரில் ஒருவன், வீம சேனனே போன்ற சரீர எழுச்சி திரட்சி வலிமைகளால் தென்பாண்டிவீமன் என்னும் புகழ்ப்பெயர் பெற்றவனே எதிரிகளுக்காகவும், "என் உயரம் ஒன்பது சாண்" என்று விடை கூறிய விசுவநாதநாயகர் தம்கட்சிக்காகவும், யுத்தம்



செய்தனர். கயத்தாற்றுப் பெருமாளின் கருணை யிருந்த வாறு, விசுவநாதர் பல்மான காயங்களை யுற்றாராயினும், முடிவில், தென்பாண்டிவீமனைக் கொன்றுவிட்டார். அப் பால், சபதப்படி, மற்ற நான்கு பாண்டியர்களும் போரொ ழிந்து, பாண்டியைத் துறந்து, மலைநாடுநோக்கிச் சென்ற னராக, நாடனைத்தும் நாயகர் வசமாயிற்று. தானுற்ற காயங்களை யாற்றிச் சுகப்படு மாறு விசுவநாத நாயகர் மதுரை மீண்டார். அரியநாதர் மட்டும், ஆங்காங் குள்ள கோளாறுகளை யெல்லாம் ஒழுங்கு படுத்திக்கொண்டே திருநெல்வேலி சென்று, அவ்வூரை முற்றிலும் புதுப் பித்துப் பெரிதாகக்கட்டி, கோயிலில் ஆயிரக்கால் மண்டப மும், வேறு பல பணிகளும் இயற்றினார். காவிரியின் இரு கரையிலும் காடழித்து நாடாக்கியது போலவே, தாமிர வருணியாற்றின் இருகரைகளையும் செப்பனிட்டு, சோலை களும் அக்கிரகாரங்களும் செழித்தோங்கும்படி செய் தார்; பாளையங்கோட்டையில் ஒரு கோட்டையையும் கட்டி னார். பிறகு அரியநாதர் மதுரை மீண்டு, நாடெங்கும் ஒருபடியாய்க் காணும் ஒழுங்கும் அமைதியும் நீடி த்து நிலைபெறுதற்கு வேண்டிய ஆலோசனை செய்து, அதற்குத் தக்க சூழ்ச்சியாகப் பாளையப்பட்டுக்களை ஸ்தா பித்தார். தொன்றுதொட்டு ஆங்காங்கு முதன்மையுற் றிருந்தவர்களும்; போர்க்குழப்பத்தில் தம் புயவலியால் மேன்மையுற்றுச் சிறுபடைகளுக்குத் தலைவராகி, ஊர்கள் கோட்டைகளைக் கைக்கொண்டு குரிசில்க ளானவர்களும்; நாகமநாயகரோடும், அவர்க்கு முன்னும் பின்னும், அவ்வக் காலங்களில் படைத் தலைவர்களாயும் இராஜ்யபரிபாலன உத்தியோகஸ்தர்களாயும் விஜயநகரத்தி லிருந்து வந்து, பாண்டிமண்டலத்தில் குடியேறினவர்களுமான இம் மூவகை முக்கியஸ்தர்களால், நாட்டுக்குத் தொந்தரையும் அபாயமு மின்றி, நன்மையும் க்ஷேமமுமே விளையுமாறு செய்த சூழ்ச்சி அது. இன்னாருக் குரிய ஊர்கள் பூமி களை எழுபத்திரண்டு பாளையங்களாக வகுத்து, மதுரைமா நகரைச் சூழ்ந்த பெரிய கோட்டையில் எழுபத்திரண்டு கொத்தளங்களைக் கட்டி, அவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பாளையக்காரனைக் காவலாக்கினார். அந்தப் பாளையக்காரர்கள், அவரவர் பாளையத்தில் வரிகண்டுதல், குற்ற விசாரணை செய்து தண்டித்தல், தம் இறைவராகும் மதுரை நாயகர் சேவகத்துக்கும் தமக்குரிய கொத்தளக் காவலுக்கும் தமது பாளையப் பராமரிப்புக்கும் வேண்டிய படைகளை அமைத்துக் கொள்ளுதல், முதலிய உரிமை



மதுரை—பழைய கோட்டையின் பாகங்கள்.
(மேற் கட்டடங்கள் இப்பொழுது ஆசுபத்திரியாய் உபயோகமாகின்றன)



களைப் பெற்றும்; தமது மொத்த வருமானத்தை மூன்று பகுதிகளாக்கி, ஒரு பகுதியைத் தாம் அனுபவித்தும், ஒரு பகுதியை நாயகருக்குக் கப்பமாக இறுத்தும், மூன்றாம் பாகத்தைப் படைகளின் பராமரிப்பில் செலவிட்டும் ஒழுகும் கடமையைக் கையேற்றும், சிற்றரசு புரியும்படி ஏற்படுத்தினர். இவ்வண்ணம் அமரநாயக முறை (military fief) யாக நாட்டுக்கு வேலிகோலிய சூழ்ச்சியின் திறனும் எதிர்நோக்கப் பேரறிவும், விசுவநாதர் மகனை கிருஷ்ணப்ப நாயகர் ஆட்சியிலே, மதுரை நாயகரது அதிகாரத்தை எதிர்த்த தும்பிச்சிநாயக்கனையும் கண்டிராஜனையும், பாளையப்பட்டார் உதவியைக் கொண்டு ஒடுக்கித் தொலைத்த காலத்திலும்; பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலே, ஆறுகாடு நவாபிடமிருந்து பாண்டிமண்டல ஆட்சியைப் பெற்ற ஈஸ்டிந்தியக் கம்பெனியார், நாட்டைக் கைக்கொண்டு வரிதண்ட முயன்றபோது நிகழ்ந்த பாளையக்காரர் யுத்தகாலத்திலும், நன்கு துலங்கின. இஃதன்றி, இன்றுமே தென்பாண்டியிலே பலவூர்களில், போலீசார் அதிகாரத்தினும் திறமாகச் சிறந்து விளங்கும் ஊர்க்காவல் முறை, அக்காலத்தில் அரியநாதர் ஏற்படுத்தியதே.

இவ்வாறாக நாட்டை ஒழுங்குசெய்து, காவலுக்கு வேண்டிய ஊர்களில் கோட்டை கொத்தளங்களைக் கட்டி, ஆணை மீறியவரைத் தண்டித் தடக்கி, அரியநாதர் நிலைநாட்டிய மதுரை நாயகர் ஸம்ஸ்தானம், நம் காலத்திலே திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, சேலம், கோயமுத்தூர் என்று வழங்கும் சில்லாக்களையெல்லாம் தனக்குள் அடக்கிக்கொண் டிருந்தது; நாஞ்சிநாடு என்னும் மலையாளப் பகுதியும், அதற்குட்பட்ட எழுபத்திரண்டு பாளையங்களில் ஒன்றாயிருந்தது.

இன்னணம் அரியநாதர் சீரும் சிறப்பும் திகழப் பாண்டிநாட்டை ஆண்டுவரும் காலத்திலே ஒரு நாள், பாளையக்காரர் பலரும், பரிவாரங்களும் புடைசூழ, இராஜசபையிலே அவரும் விசுவநாதரும் கொலுவீற் றிருக்கும் சமயத்தில், காவலாளர் தடுப்பதையும் மீறி, ஒரு பிராமணர் சபைக்குள் நுழைந்து, அரியநாதரை அணுகினார். பிராமணரைத் தடுப்போரை விலகச் சொல்லி, அரியநாதர், அவரைப் பார்த்து: "தாங்கள் யார், சுவாமி, இப்படி ராஜசபைக்குள் அவசரமாய் மீறி வருகிறீர்கள்? என்ன செய்தி?" என்று கேட்டார்.

பிரா:—தாங்கள் தானே தளவாய் அரியநாயக முதலியார் என்கிறது?

அரிய:—ஆம், அரியநாயகன் என்றும், அரியநாதன் என்றும் சொல்வார்கள்.

பிரா:—நமக்குக் காஞ்சீபுரம். இரண்டு வேதம் வரும்; கொஞ்சம் சாஸ்திராப்யாசமு முண்டு. பிதா அவாள் சிசுப் பிரகிருதியிலேயே விட்டுவிட்டுப் போய்விட்டாள். வடக்கே காசிக்குப் போய் அத்தியயனம் பண்ணி, பண்டித பட்டம் ஸம்பாதித்துக் கொண்டு வந்தேன். எங்கள் பரம்பரை குலவிர்த்தி, புரோகிதம். பிதா அவாளுக்கு ஜோஸ்யம் நன்ருய் வருமாம். இந்தக் கன்னி மாஸத்திலே, ஸரஸ்வதி பூஜைக்காக ஏதோ சில புராதன ஏடுகளைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருக்கும் ஸமயத்திலே, பிதா அவாள் கைப்பட ஒரு ஓலைநறுக்கும், இதோ, இந்த ஓலைநறுக்கும் அகப்பட்டது. கொஞ்சம் விசாரணை செய்ததிலே, ஆச்சரியமாயிருந்தது. இது தங்கள் ஸ்வஹஸ்த லிகிதம்தானு பாருங்கள்" என்று சொல்லி, இடுப்பிலிருந்து ஒரு பழைய ஓலைநறுக்கை எடுத்து நீட்டினுர்.

அரியநாதர், அதைவாங்கிப் பார்க்க, நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு, தன் சிறுபிராயத்திலே, மெய்ப்பேட்டு மைதானத்தில் குறிசொன்ன பிராமணருக்குத் தான் எழுதிக்கொடுத்த உறுதிமொழி ஓலைச் சீட்டாயிருந்தது. உடனே அவர் எழுந்து, பிராமணரை மரியாதையோடு வணங்கி, தன் பக்கலில் அவருக்கோர் ஆதனமளித்து வீற்றிருக்கச் செய்து, பிறகு தான் இருந்து, விசுவநாதரும் சபையோர் பிறரும் ஆச்சரியத்தை அடையும்படி, நடந்த விருத்தாந்தத்தை எடுத்துக் கூறினுர். அப்பால், பிராமணரை நோக்கி: "சுவாமிகளே! இது நான் எழுதிக் கொடுத்த ஓலைதான்; தங்கள் தந்தையார் இல்லையே என்று வருந்துகிறேன். என் வாக்கை நிறைவேற்ற நான் சித்தமாயிருக்கிறேன்" என்ருர்.

பிரா:—ஸந்தோஷம்: தங்கள் ஸத்தியமே ஸத்தியம்! அரிச்சந்திரனும் தாங்களும் ஸரிஸமானமே. தாங்களோ, பிதா அவாள் சொன்னது போலவே, ராஜாதி ராஜனுப் சோபிக்கிறீர்கள். நானே, ஏழைப் புரோகிதன்; வைதீகன்; பிராமண விருத்தியை விட்டுவிட்டு, ராஜ்யபரிபாலனம் செய்யப் போகிறேனு என்ன? எனக்கு வேருென்றும் அபேக்ஷையில்லை: ஏதோ, ஸொந்த ஊர், ஏகாம்பரநாதர் க்ஷேத்ரம், காஞ்சீபுரத்திலேயே ஒரு வீடு, குடும்ப ஸம்ரக்ஷக



ஜீவனத்துக்கு வேண்டிய பூஸ்திதி, தோட்டம், துரவு, மாடு, கன்னு, இல்லையா, அதுகள் கொஞ்சம்; இவ்வளவு அநுக்ரகம் பண்ணினுல், மஹாத்ருப்தி. பிராமணனுக்கு இதைவிட வேறென்ன வேண்டியிருக்கு? என்ன? நீங்கள் தான் சொல்லுங்களேன்."

இதைக் கேட்ட சபையோர், பிராமணரது மனநிறைவையும் ஸந்துஷ்டியையும் கண்டு வியப்படைந்தனர். அரியநாதர், அந்த விப்பிரோத்தமருக்கு வேண்டிய யாவும், அவர் வேண்டியதினும் பதின்மடங்கு அதிகமாகவே உதவி, அன்றுமுதல் அவரைத் தன் குடும்ப குருவாக வைத்துக்கொண்டார்.

## 4. தலைக்கோட்டைச் சண்டை.

ஓர் அரசாட்சியோ இல்லற வாழ்க்கையோ மற்றெந்த வைபவமோ, மங்களகரமாய் ஐம்பதாண்டுகள் நடைபெறின், அதன் முடிவிலே, அந்த நிகழ்ச்சியின் "பொன் விழா" (Golden Jubilee) கொண்டாடுதல் மேல் நாட்டார் மரபு. நமக்குள் அந்த வழக்கம் இருப்பின், அரியநாதர் விசுவநாதர்களின் அரும்பெரும் நட்பினது "பொன் விழா"க் கொண்டாடுதற்குரிய காலத்திலே, முடிபுனை திருவிழா ஒன்று தற்செயலாய் நிகழ்ந்தது. வாழ்க்கைப் போராட்டத்திலே களைப்புற்ற விச்வநாத நாயகர், அதுகாறும் புகழொளி பொலிந்து விளங்கிய தன் வாழ்நாட்பரிதி அஸ்தமிக்குமுன், தந்தைக்கேற்ற சேயான தன் மகன் குமார கிருஷ்ணப்ப நாயகருக்கு முடிசூட்டி, அவரைத் தன் ஸ்தானத்தில் இருத்தி, சிறிது இளைப்பாற விரும்பினர். அரியநாதரும் அதற்கு இசையவே, கிருஷ்ணப்ப நாயகர், ருத்ரோத்காரி வருஷம் தை மாதத்திலே பாண்டியநாத ராஞர். அவ்வண்ணம் மகன் முடிசூடிய பின்னர்ச் சில மதிகளே வாழ்ந்து, விசுவநாதர் தேகவியோகமடைந்தார்.

தன் ஆருயிர்த் துணைவருக்காக வருந்திக்கொண்டிருக்கையிலே, விஜயநகர ஸம்ஸ்தானத்தைக் கெடுக்க முகம்மதியர் அனைவரும் கூடிச் சூழ்ந்துகொண்டிருப்பதால், சிறிதும் தாழ்க்காது ஆண்டு வந்துசேர வேண்டுமென்ற மகாராயரின் ஆணை வந்தெய்த, "உடுக்கை இழந்தவன் கை போல"ப் பரபரத்து, உடனே திரட்டக்கூடிய சதுரங்க சைனியங்களோடும், தன் பரிவாரத்தோடும்,

குறிப்பு—முன்னுள்ள 733–748-ம் பக்கங்களை 737-752 என்று திருத்திக்கொள்க.

அரியநாதர், வடக்கே சென்றார். மூவாயிரத்துச் சில்லறை ஆண்டுகளுக்கு முன்னர் குருக்ஷேத்திரத்திலே நிகழ்ந்த பாரதப்போர் தொட்டு, இரண்டு தலைமுறைக்கு முன்பு அதனருகே நடந்த "சிபாய்க் கலக"ச் சண்டை இறுதியாக, இந்தியாவிலே மிகப் பல விடங்களில் நடந்த மிகப்பல சமரங்களிலே அதிமுக்கியமாக மதிக்கப்படும் சிலவற்றுள், கி. பி. 1565-ம் ஆண்டின் துவக்கத்தில் தலைக்கோட்டையின் அருகு நிகழ்ந்த போரும் ஒன்றாகும். அதைப் பற்றிக் கூறுமுன், நமது நண்பர் இருவரும், நாகமநாயகரை அடக்குதற் கென்று படையெடுத்துத் தமிழ் நாடுற்ற பின்பு, முப்பத்தேழு வருஷங்களாக, விஜயநகர விருத்தாந் தங்களைச் சுருக்கி யுரைத்தல் பொருந்தும்.

கிருஷ்ணதேவ மகாராயர் 1530-ம் ஆண்டிலே புகழுடம்பை நிலைநிறுவிப் பொய்யுடலை நீத்தார். அதன்முன், நாட்டில் உட்பகைக் கலகங்களை அஞ்சித் தான் முடிசூடிய காலத்திலே சிறையில் அடைத்து வைத்திருந்த தன் சகோதரர்களை விடுதலைசெய்து, அவர்களில் அச்சுதராயர் என்பவரே தனக்குப் பின் பட்டத்துக்கு வரும்படி நியமித்திருந்தார். நீண்ட சிறைவாசம் இராச்சிய நிருவாகத்துக்கு ஏற்ற முற்பயிற்சி யன்றெனின், ஒருமண்டல காலம்வரை சிறப்பேதுமின்றிக் கழிந்த அச்சுதராயர் ஆட்சியிலே, விஜயநகர ஸம்ஸ்தானம் தொய்வுறத் தொடங்கியது வியப்பன்றே. அச்சுதருக்குப் பின், அவர் தமயன் அரங்கராயரின் மகன் சதாசிவராயர் பட்டத்துக்கு வந்தார். தலைக்கோட்டைச் சண்டை நடந்ததும் விஜயநகரம் பாழாக்கப்பட்டதும் அவர் ஆட்சியிலேதான். இந்தச் சதாசிவராயர், மகாராயப் பட்டத்தைத் தாங்கிப் பொம்மை ராஜாவைப்போலச் சிங்காசனத்தில் வீற்றிருந்தாரே யன்றி, உண்மையில் இராஜ்யத்தை ஆண்டுவந்தவர், கிருஷ்ணதேவராயரின் மருமகனான இராமராயரே. "மாப்பிள்ளை" இராமராயர் மகா கர்வி: இராஜ்ய பரிபாலன முறைகளையும் சூழ்ச்சிகளையும் நன்கு கவனியாது, அதிகார உன்மத்தம் கொண்டு, நியாயம் தவறி ஒழுகுபவர். விஜயநகர ஸ்ம்ஸ்தானத்துக்கும் கிருஷ்ணாநதிக்கும் வடபாலுள்ள பீஜபுரம், கோல்கொண்டா, ஆமதுநகரம், பீதார், பீரார், என்னும் ஐந்து முகம்மதிய ராஜ்யாதிபதிகளும் உட்பகையினால் அடிக்கடி ஒருவரோடொருவர் போராடியதில், இராமராயர் கலந்து, பீஜபுரத்துச் சுல்த்தான் அடில்ஷாவுக்கு உதவிபுரிந்து, ஆமதுநகரத்து நிஜாம்ஷாவின் பகைமையை அடைந்திருந்தார். இவ்வண்ணம் முகம்மதியர்களுக்குள் நடந்த



போர் நிகழ்ச்சிகளில் உதவிசெய்துவந்த விஜயநகரத்து ஹிந்து சைநியங்கள், மதத்துவேஷத்தினால் முகம்மதியரையும் மசூதிகளையும் அவமதித்தொழுகிப் பல அழிம்புகள் செய்தன. இதனால், இராமராயரின் உதவியை நாடி அவர்க்கு நண்பராயிருந்த முகம்மதியமன்னருமே, உள்ளூர மனம் நொந்து வருத்தமுற்றனர். இராமராயர் இதைச் சிறிதுமே கவனியாததுமன்றி, தன் உதவியை நாடுவோரும் தன்னால் போரில் முறியடிக்கப் பட்டோருமான முகம்மதிய மன்னர்களையும், அவர்கள் அனுப்பும் தூதர்களையும் பிரதிநிதிகளையும் மானக்கேடாக நடத்தி வந்தார்.

வாழ்விலே செருக்கினாலும் பொறாமையினாலும் ஒருவரை யொருவர் மதியாது பகைத்து ஒழுகுவோர், தாங்குதற்கரிய தாழ்வுற்ற சமயத்திலே, தருக்கொழிந்து நன்மதியுற்று நட்புக்கொண்டு தம் பொதுப் பகையைத் தாக்கித் தகர்க்க முயலுவதைச் சரித்திரத்தில் பார்க்கக் காணலாம். "மிதியுண்ட புழுவுமே திரும்பித் தாக்கும்" என்பது, ஆங்கில முதுமொழி. அவ்வண்ணமே இவ்வைந்து முகம்மதிய வேந்தர்களும் ஒன்று சேர்ந்து, விஜயநகரத்து ஹிந்து ஸம்ஸ்தானத்தை அழிக்கக் கங்கணம் பூண்டனர். தம்முடைய புதிய நட்பு வலிமையுற்று நிலை பெறுதற் கென்றே, நிஜாம்ஷாவின் மகள் சாந்தபீபியை அடில்ஷாவுக்கும், அடில்ஷாவின் சகோதரியை நிஜாம் ஷாவின் மூத்தமகன் முர்த்திஷாவுக்கும் மணம்புரிந்து, இரண்டு குடும்பத்தாரும் நெருங்கிய உறவின ராயினர். அப்பால், இராமராயரைக் கெடுப்பதொன்றே குறியாக, முகம்மதிய மன்னர்கள் ஐவரும் கூடிச்சூழ்ந்து, பெரும் போருக்குப் பிரயத்தனஞ் செய்யலானார்.

முகம்மதியர் சூழ்ச்சிகளை இராமராயர் ஒரு பொருட்டாகப் பாராட்டில ரெனினும், தானும் போர்க்குச் சன்னத்தராகி, அரியநாதர் உடனே புறப்பட்டு வரும்படி அவருக்கு ஆளனுப்பினார். இராமராயருடன் பிறந்த திருமலையும் வேங்கடாத்திரியும் அவர் ஆணையைமீறி அதற்குமுன் ஒருகால் கலகஞ்செய் திருந்தமையால், அவர்களிடத்துப் போதிய நம்பிக்கை அவருக் கில்லை; அரியநாதரின் சூழ்ச்சித் திறமையையும் இராஜபக்தியையும் சத்தியத்தையும் நன்குணர்ந்தவ ராதலின், அவரை அழைப்பித்தார்.

கிருஷ்ணையாற்றின் வடபால் முகம்மதியந் ... றும், தென்பால் விஜயநகர ஸம்ஸ்தா[illegible]

20652

கூறினோம். தலைக்கோட்டை, கிருஷ்ணைக்கு இருபத்தைந்து மைல்களுக்கு வடக்கே, தோன் என்னும் நதிக்கரையில் இருக்கின்றது. அந்தப் பிரதேசம் பீஜபுர மன்னன் அடில்ஷாவைச் சேர்ந்தது. பீஜபுரத்தின் அருகே முகம்மதிய மன்னர்கள் ஐவரும் தத்தம் படைகளுடன் வந்து சந்தித்து, தெற்குநோக்கி வந்து, தலைக்கோட்டையில் தங்கலாயினர். அவ்வூர் அடில்ஷாவின் எல்லையாதலின், தன் கூட்டாளிகளையும் அவர் படைகளையும் அதிதிகளாகப் பாராட்டி, அவர்களுக்கு நல்விருந்தூட்டி, அவர் உபசரித்தார். இராணுவ உக்கிராணங்களையும், படைகளுக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் பிறவும் தாழாது தங்கா து தடையின்றி வந்துசேரும் வழிகளையும், அவற்றைச் சுமந்துவரும் பண்டிகள் பொதிமாடுகள் முதலியவற்றையும் பற்றித் தீர்க்காலோசனை பண்ணி, தக்க ஏற்பாடுகள் செய்துகொண்டனர். அப்பால், படைகள் கிருஷ்ணையைக் கடந்து எதிரிகளின் தென்கரையை அடைதற்கு ஏற்ற துறைகளை அறிந்துவரும்படி, ஒற்றர்களை அனுப்பினர். விஜயநகரத்திலோ, நகரவாழ்க்கையும் திருவிழாக்களும் வியாபார நடபடிக்கைகளும் என்றும் போலவே நிகழ்ந்து வந்தன. பல்லாயிரம் பொதியெருதுகள் நாள்தோறும் ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்களைத் துறைமுகப் பட்டணங்களுக்குச் சுமந்துபோய் மீண்டுவந்துகொண்டிருந்தன. தன் முதுகின்மீது வந்துட்கார்ந்த கொசுவை மதியாத மிருகேந்திரனைப் போலவே, இராமராயர் அலக்ஷியமாயிருந்தார். ஆயினும், அரியநாதர் பாண்டிமண்டலப் படைகளுடன் வந்துற்றபின்,

" ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை ?
நாகம் உயிர்ப்பக் கெடும் "

என்று, இறுமாந் திருத்தல் நன்மதி யன்றென்றும் ;

" வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை, எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும் " என்றும் ;

" இளைதாக முள்மரம் கொல்க : களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து "

என்னும் யுக்திப்படி ஒழுகுவதே தக்கதென்றும், எடுத்தோதித் தூண்ட, இராமராயர், தன் தம்பிகள் திருமலையையும் வேங்கடாத்திரியையும், கிருஷ்ணையின் தென்கரைத் துறைகளைக் காக்கும்படி, சதுரங்க சேனைகளுடன் அனுப்பினார். அப்பால் அவரும் அரியநாதரும் எஞ்சிய படைகளுடன் போர்முகம் நோக்கிச் சென்று, கிருஷ்ணைக்குப்



பத்துமைல் தென்பாலுள்ள மூடுகல் கோட்டையைத் தம் படைவீடாக்கிக்கொண்டனர். விஜயநகர ஸம்ஸ்தானத்துப் படைகள் மொத்தம் ஒன்பது லக்ஷம் காலாள், நாற்பத்தையாயிரம் பரிவீரர், ஈராயிரம் போர்யானைகள், பதினையாயிரம் துணைப்படைவீரர் என்றும் ; முகம்மதியரின் படைத்தொகை அதில் பாதி யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. வெடிகுண்டு பீரங்கிப் படைகள் வேறு போலும். அந்த நாளிலே சாதாரணப் படையாட்கள், குருதிக் கறையைக் காட்டாது மறைக்கும்படி சாயம் தோய்த்த துவர்நிற அங்கியும், குறுகிய கால் சட்டையும், அணிந்திருப்பர் ; வேல், கட்டாரி, வாள், வில், அம்புகளே அவர் படைக்கலங்களாம்.

முகம்மதியரின் சைநியங்கள் இங்குலிகி என்னும் கிராமத்தின் அருகே கிருஷ்ணையின் வடகரையை வந்தடைந்த போது, விஜயநகரத்துப் படைகள் மண்மதில்களை எழுப்பிப் பீரங்கிகளை அணைவாய் அமைத்துத் தென்கரையைக் காத்து நிற்பதைக் கண்டனர். சைநியம் ஆறு தாண்டுதற்கு மற்றத் துறைகளைவிட இங்குலிகித் துறையே இசைவா யிருந்தது ; அத்துறையே மற்றவற்றினும் பலமாய்க் காக்கப்பட்டு மிருந்தது. அதை யறிந்த சுல்த்தான்கள் ஒரு தந்திரம் செய்தனர் : அவ்விடத்து நதியைத் தாண்டுவது அசாத்தியமென் றுணர்ந்து, வேறு சுலபமான துறையை நோக்கிச் செல்வார்போல நடித்து, பத்து மைல்களுக் கப்பாலுள்ள தானூர்த் துறையை நோக்கி வடகரை வழியே தம் படைகளைச் செலுத்தினர். இராமராயரின் படைகளும், முகம்மதியருக்கு எதிர்முகமாக, தென்கரை வழியே தானூரை நோக்கிச் சென்றன. சிறுவர் கிளித்தட்டு விளையாட்டில் ஒருவரை ஒருவர் மறிப்பது போல, இருதிறத்துப் படைகளும் மூன்று நாள் இவ்வாறு தட்டு மறித்தபின், முகம்மதியர் தானூரில் பாசறை கொண்டதைக் கண்டு, விஜயநகரத்து ஆற்றுக்காவற் படைகள், முதலில் இங்குலிகித்துறையைக் காத்ததுபோலத் தானூர்த் தென்கரைத் துறையைக் காக்கலாயின. சுல்த்தான்கள் விரும்பியதும் அஃதே : இங்குலிகித் தென்கரை காவல் நீங்கியதை ஒற்றர்களால் அறிந்த முகம்மதியர், இரவில் இருட்டிலே சரேலெனத் திரும்பிப் பாய்ந்து, ஆற்றைத் தாண்டி, 1565-ம் ௵ ஜனவரி மாதம் 22-ம் தேதியன்று காலை, கிருஷ்ணையின் தென்கரையிலே விஜயநகர ஸம்ஸ்தான எல்லையிலே, போருக்கு ஆயத்தமாய் அணிவகுத்து நின்றனர்.

தான் எதிர்பாராத வண்ணம் ஏமாற்றுண்ட இராமராயர், இதைக் கண்டும் நிலைகலங்கிலர். ஆற்றுக்காவலில் அமைந்திருந்த அவர் தம்பிகளும், தம் முயற்சி பயன்படாதாகிவிடவே, தக்கணமே அதைக் கைவிட்டு, வெகு சாதுரியமாய்த் தம் படைகளையும் இராமராயரின் மூல சைநியங்களோடு சேர்த்துக் கொண்டனர்.

23—1—1565 செவ்வாய்க் கிழமை யன்று, ஹிந்துக்களும் முகம்மதியரும் தத்தமக்குரிய படைகள் அனைத்தையும் கொண்டு கடும்போர் புரிந்தனர். முகம்மதியர் வழியில் தங்கிப் பாசறைகொண்ட தலைக்கோட்டையின் பெயரே அச் சண்டைக்குச் சரித்திரத்தில் வழங்குகின்றதாயினும், உண்மையில், கிருஷ்ணையாற்றுக்குத் தெற்கே, இங்குலிகியி லிருந்து மூடுகல்லுக்குச் செல்லும் மார்க்கத்திலே, முக்கியமாய்ப் போகபுரம் என்னும் ஊரி னருகே தான், அப்போர் நிகழ்ந்தது. தன் தம்பிமார் திருமலையும் வேங்கடாத்திரியும் இடப்புறமும் வலப்புறமும் முறையே தலைமைவகிக்க, தானே நடுவில் நின்று, இராமராயர் சைநியங்களைப் போரில் நடத்தினர். அவர் கிழவரேயாயினும், முப்பது பிராயத்துக் கட்டிளங்குமரனையே போல, ஐராவதத்தை நிகர்க்கும் மிகப்பெரிய தன் போர் யானையின் மீதேறி, இருதிறத்துப் படைகளும் தன்னை எளிதில் நன்கு காணும்படி உயர்ந்து விளங்கி, சைநியங்களைத் தைரியப் படுத்தியும், வீரச்செயல்களுக் கேற்றபடி வெகுமானங்கள் அளித்து உற்சாகப்படுத்தியும் போர் புரிந்தார்.

முகம்மதியர் கட்சிப் படைகள், திருமலையை எதிர்த்துச் சுல்த்தான் அலி அடில்ஷாவின் தலைமையின்கீழ் பீஜபுர சைநியங்களும்; வேங்கடாத்திரிக்கு நேராக கோல்கொண்டா, பீதார், பீரார் சுல்த்தான்களின் சேனைகளும்; நடுவே இராமராயரை எதிர்த்து, அவர் ஜன்மவிரோதியான ஹுஸேன் நிஜாம்ஷாவின் தலைமைக்கீழ் ஆமதுநகரத்துத் தண்டுகளுமாக, அணிவகுக்கப்பட்டிருந்தன. முகம்மதியர், தமது நீண்ட படைமுகத்தின் மத்தியைப் பீரங்கிப் படைகளால் காத்து, இருபுறச் சிறகரின்முன்பும் பன்னிரண்டு இமாம்களின் கொடிகள் பறக்க, போர் விரும்பி நின்றனர். சுல்த்தான் நிஜாம்ஷா, தன் போர் முகத்தின் நடுவிலே மூன்று வரிசையாக அறுநூறு பீரங்கிகளை அமைத்து, எதிரிகளுக்கு அவை புலப்படாவண்ணம் அவற்றின் முன்பு இரண்டாயிரம் வில்லாட்களை நிறுத்திவைத்து மறைத் திருந்தார்.



விஜயநகர வீரர்கள், வெடிகுண்டு பாணங்களைச் சோனைமாரிபோற் பொழிந்து சண்டையைத் தொடங்கி, முகம்மதியரை நெருங்கிக் கைகலந்து பொருது, இருபுறமும் அவர் பின்னிடும்படித் தாக்கினர். போர் முகத்தின் நடுவிலே, வில்லிகளின் அப்புமாரியைப் பொருட்படுத்தாது இராமராயரின் படைகள் மேற்சென்ற போது, நிஜாம்ஷாவின் வில்லாட்கள் விலகிவிடவே, மறைவி லிருந்த பீரங்கிகள் குபீரென நெருப்பு மழையைப் பொழியாநிற்க, மேற்சென்று தாக்கிய வீரர்கள் அதைத் தாங்கமாட்டாது பின் வாங்கினர். உடனே இராமராயர் யானையை விட்டிழிந்து, பொன்னையும் மணிகளையும் வாரியளித்து, தன் தண்டுகள் மீண்டும் மேற்சென்று பீரங்கிகளைத் தாக்கும்படிச் செய்தார். ஒரு பல்லக்கில் ஏறிக்கொண்டு, அங்கும் இங்கும் போர்க்களத்தில் சென்றுலவி, தன் வீரர்களை உற்சாகப் படுத்தலானர். அதைக் கண்ட தளகர்த்தர்களும் அரியநாதரும், அவ்வண்ணம் அவர் அந்தச் சமயத்திலே பல்லக்கி லிருப்பது தகா தென்றும், ஒருவேளை தோல்வியே நேர்ந்துவிட்டால், விரைவில் தப்பியோடுவதற்கு யானை குதிரைகளே ஏற்ற வாகனங்க ளென்றும் கூறினர்.

அதைக் கேட்ட இராமராயர்: "இந்த ஆமதுநகரப் பூனைகளின் போர் வலியை யான் அறியேனே? இதுவரை எத்தனை முறை இந்த நிஜாம்ஷா எனக்குத் தோற்றோடியிருக்கிறன்! இதோ, இன்னும் ஒரு நாழிகையில், சூறை முன் பூளைப்பூப்போல, இவன் பறக்கப் போகிறன், பாருங்கள். ஆனால், இந்த முறை அவனைத் தப்பவிட்டு விடாமல், எவ்வண்ணமாவது அவன் தலையைக் கொய்துவந்து விட வேண்டும். மற்ற இரண்டு துரோகிப் பயல்கள் இருக்கிறார்களே, பீஜபுரம் அடில்ஷாவும் கோல்கொண்டா இபிராஹிம்ஷாவும், அவர்களை உயிரோடு பிடித்துக்கொண்டு வந்து, 'இராமராயருக்குத் துரோகம் செய்தவர்களின் கதி இது தான்!' என்று எல்லோரும் தெரிந்துகொள்ளும்படி, அவர்களை ஆயுள் பரியந்தம் இரும்புக் கூடுகளில் அடைத்து வைக்கவேண்டும்" என்றார்.

அரியநாதர்:—"மாப்பிள்ளைராயர் சொல்வது சரியே, அப்படியே நடக்கவும் செய்யும். ஆயினும், ஜயலக்ஷ்மியும், தனலக்ஷ்மியைப் போல, ஒரு வேசைதானே? இன்று ஒருவனிடமும் நாளை வேறொருவனிடமும் இருப்பவள் தானே? அதனால் தான்,—"

இராமராயர் குறுக்கிட்டு மறுத்து: "அரியநாதரே!

இந்தப் பேச்செல்லாம் வீணே. விஜயநகரத்தின் அடிமையே விஜயலக்ஷ்மி. அப்படிக் கின்றி ஒரு வேளை நிகழ்வதா யிருந்தால், நான் இந்த யுத்த களத்தைவிட்டு உயிர்கொண்டு புறங்காட்டித் திரும்பமாட்டேன். நானாவது, அந்த நிஜாம்ஷாவாவது, இன்று இங்கே மடிவது நிச்சயம். நானே மாளும்படி நேர்ந்தால், இப்பொழுதே இங்குள்ளவர் எல்லார் முன்னிலையிலும் சொல்லிவிடுகிறேன் கேளுங்கள்: சதாசிவ மகாராயர் பொம்மலாட்டம் ஆடினதெல்லாம் போதும்; அதனால் பல சங்கடங்களுண்டு. என் தம்பிமாரோ, எனக்கே துரோகம் செய்தவர்கள். நான் போனபின் ஒருவரோடொருவர் கலகம் செய்து, ஸம்ஸ்தானத்தையே நாசமாக்கி விடுவார்கள். அவர்களுக்கு, இந்தச் சமயத்திலே வேண்டிய அதிசாமர்த்தியம் போதாது. எனக்குப்பின் அரியநாதர்தான் ஸம்ஸ்தானத்தைக் காப்பாற்றக் கூடியவர். இந்த ஸம்ஸ்தானத்துக்கு, அம்மான் கிருஷ்ணதேவ மகாராயர் காலம் தொட்டு, அவரைவிட ஆப்தர்கள் இல்லை. அதனால் எனக்குப் பின் அவர் அடைக்கலமே இது; அவரே மகாராயராக மகுடாபிஷேகம் செய்துகொண்டு, இந்த முகம்மதியப் பதர்களையெல்லாம் ஒடுக்கி நசுக்கி, ஸம்ஸ்தானத்தை ரக்ஷிக்கட்டும்" என்றார். "அப்படியொன்றும் மாப்பிள்ளை ராயருக்குக் கேடு வராது; இன்று ஜயம் நம்மதே" என்று, அரியநாதர் விடையளிக்க, "நானும் அப்படியே நம்புகிறேன்" என்று கூறிவிட்டு, பல்லக்கி லிருந்துகொண்டே, இராமராயர், மீண்டும் படைகளைத் தைரியப் படுத்தித் தூண்டிக் கொண்டிருந்தார்.

இராமராயரின் ஏவுதலால் மீண்டும் தண்டுகள் நிஜாம்ஷாவின் பீரங்கி வரிசைகளைச் சென்று தாக்கின. அப்பொழுது, நிஜாம்ஷா, குண்டுகளுக்குப் பதிலாக ஏராளமான செப்புக் காசுகளைப் பீரங்கிகளுக்குள் இடித்துச் செலுத்திச் சுடும்படி செய்தார். சமயோசிதமான இந்த யுக்தியினால், உருக்கிய செம்பு வந்து மழைபோற் பொழிய, அதைத் தாங்க வொண்ணாது, விஜயநகரத்தார் நாற்புறமும் சிதறுண்டு ஓடலாயினர். அதுவு மன்றி, அதுவரை பெரிய யானையின்மீது யாவரும் காண விளங்கிய இராமராயர் பல்லக்கி லிருப்பதை அறியாத சைநியங்கள், அவர் மடிந்தார் அல்லது கடுங் காயமுற்றாரென்று அஞ்சி மனந்தளர்ந்தளர, இருபுறத்து யானைகளும் அங்குமிங்கும் ஓடிச்சாடித் துவைத்துப் போர்க்குழப்பத்தை அதிகரித்தன. (தொடரும்)

# விகட விநோதம்

## முதல் நாள்.

பிரசங்கி—இன்று பிரசங்க விஷயம் தெரியுமா?
சபையார்—தெரியாது.
பிரசங்கி—எனக்கும் தெரியாது.

## இரண்டாம் நாள்.

பிரசங்கி—நான் இன்று பேசும் விஷயம் தெரியுமா?
சபையார்—தெரியும்.
பிரசங்கி—ஆயின், நான் பேசவேண்டிய தில்லை.

## மூன்றாம் நாள்.

பிரசங்கி—இன்று பேசும் விஷயம் தெரியுமா?
சபையார்—(பாதிப்பேர்) தெரியும்; (பாதிப்பேர்) தெரியாது.
பிரசங்கி—தெரிந்தவர்கள் தெரியாதவருக்குச் சொல்லுங்கள்.

---

தன் சிந்தையில் ஆழ்ந்திருந்த ஒரு தத்துவஞானியிடம் மருத்துவச்சி வந்து, "உமக்கு ஒரு மகன் பிறந்தான்" என்றாள்.
தத்துவஞானி—ஆ! அப்படியா! தயைசெய்து என் மனைவியிடமும் சொல்லிவிடு.

---

குழந்தை—அம்மா! அண்ணா பூனையை அடிச்சான்.
தாய்—நீ தடுக்கக் கூடாதா?
குழந்தை—நான் என்ன செய்வேன்? அது ஓடிவிடாமல் வாலைப் பிடித்துக்கொண் டிருந்தேனே.

---

பையன்—அப்பா! ஆப்பிரிக்காவிலே ஜனங்கள் குளிக்கிற தில்லை என்று எங்கள் பூகோளசாஸ்திர வாத்தியார் சொல்கிறாரே, மெய்தானா, அப்பா?
தந்தை—ஆம், மெய்தான்.
பையன்—ஆனால், நாமும் அந்த ஊருக்குப் போய்விடலாமே!

---

குழந்தை—அம்மா! கிட்டு ஆத்திலே பக்ஷணம் பண்ணுகிறாளே, மணக்கிறதே, ஏது?
தாய்—கிட்டுவின் அப்பாவுக்கு திவசம் இன்றைக்கு.
குழந்தை—அம்மா! நம்ம அப்பா திவசம் என்றைக்கு வரும்?

---

நியாயாதிபதி—நீ பல வீடுகளிலே திருடி யிருக்கிறாயாமே? போன பௌர்ணமி யன்றுகூட மவுண்ட்ரோட்டில் திருடினாயாமே?
குற்றவாளி—அது நானில்லையுங்கோ; அந்த பௌர்ணமி எளவிலே நான் ராவிலே வெளியிலே போறதேயில்லை.

---

ஜட்ஜ்—நீ என்ன வர்ணம்?
கருப்பாயி—மா நிறம்.
ஜட்ஜ்—உன் நிறத்தைக் கேட்கவில்லை. நீ என்ன சாதி?
கருப்பாயி—நானா, எங்க வீட்டுக்காரருக்குப் பெண்சாதி.

## இயற்கை ஆராய்ச்சி

(664-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

**கொசுக்கள் :**—கொசுக்கள் நம்மைக் கடிப்பதால் தூக்கம் கெடுவது எல்லோரும் அறிவர்; மலேரியா என்னும் கொடிய விஷ ஜுரத்தைக் கொசுக்களே பரவச்செய்வதைச் சிலர் அறிவர்; யானைக்கால் முதலிய வேறுசில நோய்களையும் அவைகள் பரவச் செய்கின்றன என்பதை, மிகச்சிலரே அறிந்திருப்பார். கண்ணோவை ஒருவரிடமிருந்து பலருக்குக் கொண்டுகொடுத்துப் பரப்புவது கொசுக்கள் அல்ல, ஒருவிதச் சிற்றீயின் இனமே என்பது பலருக்குத் தெரியாது. கொசுக்கள், தேங்கி நிற்கும் தண்ணீரில் முட்டையிடுகின்றன; முட்டைகளிலிருந்து கொசுப் புழுக்கள் வெளிவந்து, நீரில் மிதந்து திரிந்து, சிறு பூச்சிகளையும், செடிகளையும் தின்று வளர்கின்றன; இவை நீரிலுள்ள பிராணவாயுவைச் சுவாசிக்க அறியா; வாற் கொண்டையை மேலே தூக்கி, நீருக்கு மேல் வாயுமண்டலத்திலுள்ள வாயுவையே சுவாசிக்கின்றன. அப்பால் இப் புழுக்கள் ஒரு தோற்கவசம் பூண்டு, பட்டுப் பூச்சியைப்போல் பாப்பாவாகிச் சிலகாலம் சமாதியிலிருந்து, பிறகு

---


*படிக்கப் படிக்கத் திகட்டாதன !*

*இடித்து இடித்துப் புத்திகூறுவன !*

*வெடிக்க வெடிக்கச் சிரிக்கச்செய்வன !*


| | | | |
|---|---|---|---|
| முதல் எட்டுக்கதைகள் | 0 | 10 | 0 |
| இரண்டாம் ஷை | 0 | 10 | 0 |
| மூன்றும் பாகம் | 0 | 10 | 0 |
| 2-சேர்த்து வாங்கினால் | 1 | 0 | 0 |
| 3-ம் சேர்த்து வாங்கினால் | 1 | 8 | 0 |

குசிகர் குட்டிக் கதைகள் — மூன்றாவது (கடைசிப் பாகம்) இந்த நவம்பர் மாதமே வெளிவந்து விட்டது. 633-ம் பக்கம் பார்க்க.

பஞ்சாமிர்தம் ஆபீசு - மயிலாப்பூர் - சென்னை.





தோற் சட்டையைக் கழற்றி யெறிந்து விட்டு, சிறகுகளுடன் வெளி வந்து கொசுவாகப் பறக்கத் தலைப்படுகின்றன. முட்டைகள் கொசுக்களாவதற்கு மூன்று வாரம் செல்லும். கொசுவாய்ப் பறக்கத் தெரிந்தபின் இவற்றைப் பிடித்துக் கொல்வது அசாத்திய




1. "அனபிலீஸ்" ஆண் கொசுவின் தலை, ஆண் கொசுவின் ஸ்பரிசக் கொம்புகளில் மயிர் அடர்ந்திருப்பதைக் கவனிக்க.
2. "அனபிலீஸ்" பெண் கொசுவின் தலை.
3. "கியூலெக்ஸ்" கொசுவின் முட்டைத் தெப்பம்,
4. அனபிலீஸ் கொசுவின் தனித்த முட்டை; முட்டையின் இரு பக்கத்திலுமிருக்கும் "மிதப்புப்பை" களைக் கவனிக்க.
5. அனபிலீஸ் முட்டை வெடித்து வெளிவந்து நீர் மட்டத்திற்குச் சமமாக மிதக்கும் கொசுப் புழு.
6. புழு உருவம் மாறிய கொசுக்குஞ்சு.

மாதலால், புழுவாய்த் தண்ணீரில் வாழும்போதே மண்ணெண்ணெயை நீரில் ஊற்றி, புழுக்கள் சுவாசிக்க முடியாமல் சாகும்படி செய்வதே சுலபம்; வீட்டின் அருகே கொசுக்கள் முட்டையிடுதற் குதவும் தண்ணீர்த் தேக்கங்கள் இல்லாமற் காப்பது இன்னும் நல்லது. கொசுக்கள் நோயாளியைக் கடித்து, அவன் இரத்தத்தை உறிஞ்சி, பிறகு நோயில்லாரையும் கடித்து, நோயாளியின் இரத்தத்தி லுள்ள விஷபீஜங்களை நோயில்லார் இரத்தத்தில் கலக்கச் செய்வதால், நோயைப் பரப்புகின்றன. கொசுக்களில் பலவகைகள் உண்டெனினும்,மலேரியாவைப் பரப்பும் அனபிலீஸ் சாதியும், யானைக்கால் முதலிய நோய்களைப் பரப்பும் கியூலெக்ஸ் சாதியும், சாதாரணமானவை. அனபிலீஸ், தனித்தனி முட்டைகளிடும்; அதன் புழு, ஜலமட்டத்துக்குச் சமமாய்ச் சஞ்சரிக்கும்; அக் கொசு, சுவர்மேலோ தரையிலோ உட்கார்ந்தால், சுவரின் தரையின் மட்டத்துக்குக் குறுக்காகத் தூக்கியிருக்கும். கியூலெக்ஸ் சாதியோ, அடையடையாய்ச் சேர்ந்த துவியலாக முட்டைகளிடும்; அதன் புழு ஜலமட்டத்துக்குக் குறுக்காக இருக்கும்.; உட்கார்ந்த கொசுவோ, சுவரின் தரையின் மட்டத்துக்குச் சமமாக இருக்கும். இந்தப் பேதங்களால் இவற்றை யறியலாகும். (தமிழர் நேசன் பத்திரிகையி லிருந்து சுருக்கி யெழுதியது)



அனபிலீஸ். கியூலெக்ஸ்.

கொசுக்கள் உட்காரும் தோற்றம்.



# ஜீவசக்தியும் நீண்ட ஆயுளும்

ஸ்ரீ. பா. ஆதிமூர்த்தி அவர்கள், காசி

(640 ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மேலே நாம் கூறிய வண்ணம் நம்மிடத்தில் குறைவுபட்டிருக்கும் ஜீவசக்தியை எப்பொழுதும் பெருக்கி வைத்துக் கொள்ளும் மார்க்கத்தை மட்டும் இங்கு விவரிப்போம்.

ஜீவசக்தி--ஆகாரம் ஜலம், சுவாசம் ஆகிய இம்மூன்று பதார்த்தங்களின் உதவியினால் தான் நமது ஜீவ வாழ்க்கை சுகமுடையதாக நடைபெற்று வருகிறது. இம்மூன்றின் அளவு விவரங்களின் ஞானம் நமக்குத் தெரிந்திருப்பது எப்போதும் மிகவும் அவசியமாகும்; அன்றியும் இப் பதார்த்தங்களின் வழியாகவே நமது தேகத்திலிருந்து செலவாகும் ஜீவசக்தி ஒவ்வொரு நிமிடமும் பூர்த்தி செய்யப்படுகின்றது. இவ்வேலைக்குத் தடையான காரியங்கள் நேரும்போதுதான் நாம் நோய் என்று அந்நிலையை அறிகிறோம். ஆகவே இந்நிலை மாறாமலிருப்பதற்கான உதவிகளை நாம் எப்போதும் செய்து கொண்டிருக்கவேண்டும்.

ஆகாரம் ஜலம் வாயு ஆகிய இம்மூன்றில், ஆகாரத்தில் 2½ பங்கும், ஜலத்தில் 2½ பங்கும் ,வாயுவில் 95 பங்கும் ஜீவசக்தி கலந்திருப்பதாக தற்கால விஞ்ஞான சாஸ்திரிகள் கொள்கை. இதற்காதாரமாக மனிதன் ஆகாரமில்லாமல் சில தினங்களும் ஜலமருந்தாமல் இரண்டொரு நாட்களும் ஜீவித்திருக்க முடியுமென்றாலும், வாயுவின்றிச் சில நிமிடங்கள் கூட ஜீவித்திருக்க முடியாதென்று நாம் அனுபவத்தால் அறிந்து வருகிறோம். ஜீவனுக்கு இவ்வித ஆதாரவாக இருந்துவரும் இந்தச் சாதாரண வாயுவின் சுவாச வேலைகளைப்பற்றிச் சில முக்கிய அம்சங்களை நாமறிய வேண்டியது அவசியமாகையால், சுவாசிக்கும் வாயுவால் தேகத்தில் நடக்கும் மாறுதல்களின் சங்கிரகத்தை இங்கு குறிப்பிடுவோம்.

தேகம், உணவைவிட வாயுவை 95 பங்கு அதிகமாக விரும்புகிறதென்றோம். வாயு தேகத்தின் சகல உட்புறங்களிலும் வேண்டிய அளவு செல்ல வேண்டும். இந்த வேலை எப்பொழுதும் நடந்து

கொண்டே யிருத்தல் வேண்டும். வெளி வாயு சுவாசத்தின் வழி உட்சென்று கொண்டிருப்பதும், உள்ளழுக்குக்கள் எரிக்கப்பட்டு வெளியில் வந்து கொண்டிருப்பதுமாகிய வேலைக்குத்தான், சுவாசமென்று பெயர். மனிதனுடைய இரு சுவாசத் துவாரங்களும் தொண்டையிலிருந்து ஆரம்பித்து, மார்பின் உட்புறமிருந்து இரண்டாகப் பிரிந்து, ஆயிரக்கணக்கான சிறு குழாய்களாகப்பரவி, தேக முழுவதும் உரோமக்கால் வரையில் பரவி(?)வாயு ஒவ்வொரு நிமிடமும் செல்கின்றது. இவ்விதச் சிறு குழாய்களின் வழியாக உட்பிரவேசிக்கும் வாயுவானது தன்னிடத்திலுள்ள ஜீவசக்தியைத் தேகத்திற்கு உணவாகக் கொடுத்துவிட்டு, அப்பாகங்களிலுள்ள அழுக்குக்களை எடுத்துக்கொண்டு வெளியேறுகின்றது.

இவ்வேலை கேவலம் நாசித் துவாரங்களால் மட்டும் நடந்தேறவில்லை. தேகத்தின் போர்வையான தோல் அல்லது சர்மத்தினாலும் நடந்து கொண்டேயிருக்கிறது. சர்மத்தில் அழுக்கேனும் புண்ணேனும் நோயேனும் ஏற்படும்போது, இந்த சுவாச வேலைகள் நின்று போகின்றன. சுவாசத்தில் அழுக்கேற்படுவது தற்கால நாகரீகப்படி மிகச் சாதாரணமும் அறியத்தகாததுமாக விருக்கிறது. இரத்தத்தின் உஷ்ணமும் ஓட்டமும் பரிசுத்தமும் சக்தியும் இந்த வாயுவின் பரவுதலாலேயே நடக்கிறது.

இரத்தத்தின் சூடு முக்கியமாக சுவாசத்தின் அளவைப் பொறுத்ததாகும் என்பதை நாம் மறக்கக்கூடாது. சுவாசத்திற்கு நாசம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும் ஒரு வேலையை நாம் ஜாக்கிரதையாகக் கவனித்துவந்தால், இரத்தச் சூட்டுக்கு ஆபத்து நேரிடமாட்டாது. இந்த நியதிப்படி, சராசரி மனிதனுடைய (இரத்தச்) சூடு 98 பாகையாக வைத்திய நிபுணர்கள் மதித்திருக்கிறார்கள். ஆனால் சிறு குழந்தைகள் வேகமாகவும் அடிக்கடியும் சுவாசம் விடுவதால், அவர்களின் இரத்தச் சூடு 100 முதல் 102 பாகையாக அதிகப்பட்டிருக்கும்.

இந்தக் கணக்கு பொதுப்பட நாகரீகமுள்ள தற்கால நோய் கொண்ட மனித வாழ்க்கையின் சராசரி தேக அனலைக் குறிப்பிடுவதாக விருக்கிறதேயன்றி, யதார்த்த மனித தத்துவங்களையும் மானுஷீக ஜீவவல்லமையையும் அறிந்தவர்களின் மதிப்பில் சிரிப்புக் கிடந்தரும் மதிப்பையே கொடுப்பதாகும். எனினும் இரத்த அனல் முழுவதும் சுவாசத்தையே பொறுத்ததாக விருக்கிறதென்பதை மேலேகண்ட விவரங்கள் நிச்சயப்படுத்துகின்றன.



இந்த நிச்சயப்படி இரத்த அனல் ஜீவனுக்கு ஆதாரமாகவும், அந்த இரத்த அனலுக்குச் சுவாசம் ஆதாரமாகவுமிருப்பதால், சுவாசவித்தையை விருத்தி செய்யும் செய்கையை நாம் ஆயுதமாகக் கொண்டு, நோய்களைப் போக்கவும் ஆயுளை விருத்தி செய்யவும் முயல்வது, தப்பிதமாகமாட்டாது.

* * *

விஞ்ஞான ரீதியாக யோசித்துப் பார்ப்போமானால், முற்காலத்தும், இப்பொழுதும், இனி வரும்பொழுதும், சுவாச இயக்கமாகிய அஸ்திபாரத்தில் தான் சகல ஜீவரூபங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன வென்பது, நன்கு விளங்கும். அன்றியும் ஜீவன் மட்டுமன்று, எண்ணங்கள், செய்கைகள், மாற்றம், மஹா மாற்றம் முதலிய சகலமும் சுவாச அசைவினாலும் சுவாச சக்தினுயிலும் நடத்தப்படுவதைப் பார்க்கலாம்.

தற்கொலை என்பது வேறொன்றுமில்லை. நமது பிராணனுள்ள தேகத்தை அதற்குப் பிரியமுள்ள உணவைக் கொடுக்காமல் விஷ உணவுகளைக் கொடுத்துக் கொல்வதேயாகும். நமது ஜீவனுக்கு முக்கியமாக வேண்டியது பிராண வாயுவாகும். இவ்வாயு விலை கொடுத்து வாங்க வேண்டுவதில்லை. எங்கும் எப்பொழுதும் [பட்டணங்களில் தவிர? ப-ர்.—ப-ம்.] ஏராளமாகக் கிடைக்கும். இப்படிப்பட்ட தாராள ஜீவ பதார்த்தத்தைக் கொடுக்க மறந்து, கடின விலைகளால் பெறக்கூடிய அதிக்கிரமித்தனவும் அவசிய மற்றனவுமான ஆகாரங்களைக் கொடுத்து, அவைகளை ஜீரணிக்கச் சக்தியில்லாது மடிகிறோம்.

வற்றாத நிறை நீரையுடைய கங்கையில் நீந்தி வாழும் மச்சங்கள் தாகசாந்திக்காக ஜலந்தேடித் தவிப்பதுபோல, ஜீவசக்தியாகிய கடலில் நீந்திக்குதித்து விளையாடும் மனித சமூகமாகிய நாம், நமது நோய்களாகிய தாகத்திற்கு நீர்தேடி, வைத்தியனையும் ஔஷத விஷங்களையும் சரணடைந்து, உடற்பலி உயிர்ப்பலியளித்து, அழிந்து வருவது மிகவும் துக்கிக்கத்தக்கது.

மேலே நாம் கூறிய விடயங்களைக் கொண்டு ஜீவசக்தியின் விவரணமும் அதுகிடைக்கும் இடமும் நன்கு விளங்கலாம்.

இவ்வாறு, சாதாரண வாயுவுடன் கலந்து எங்கு பார்த்தாலும் நிரம்பியிருக்கும் பிராணவாயுவாகிய ஜீவசக்தியை, புத்தியுள்ள மனிதவர்க்கமாகிய நாம், நமது தேகத்திலிருந்து செலவாகும் ஜீவசக்தியின் குறைவைப் பரிபூரணம் செய்து கொள்வதற்கு மட்டுமா

வது, அல்லது, நம் தேகத்தையும் பிராணனையும் புதிய சிருஷ்டி செய்து கொள்வதற்கும் சேர்த்தாவது, வேண்டிய அளவு தேகத்தில் சேகரஞ் செய்து வைத்துக்கொண்டே வந்தோமானால், நமது தேக, மானசிக, தொந்தரவுகளும் கஷ்டங்களும் நிவர்த்தியாவதற்குத் தகுந்த வழியேற்பட்டுவிடும். * * *

இங்கு, நமது கொள்கை, தேகத்தைப் பரிசுத்தம் செய்வது மட்டுமல்ல; தேகத்தைப் பரிசுத்தம் செய்வதினால் மட்டும் நீண்டாயுளும் ஜீவசக்தியும் உண்டாகிவிடமாட்டாது. தேக பரிசுத்தத்தினால் ஜீவனைக் காப்பாற்றி விடலாம் என்பது வைத்திய முறையைச் சேர்ந்தது. இம்முறை எப்பொழுதும் அபாயகரமானது. பேதியினாலாவது வாந்தியினாலாவது தேகம் சுத்தம் செய்யப்பட்டுவிட்டால், பிராணன் காப்பாற்றப்படுவதாக வைத்தியர்கள் நம்பியே தினசரி மரணங்களையும் பலஹீனத்தையும் பெருக்கி வருகிறார்கள். கட்டாயப்படுத்தி பேதியையோ வாந்தியையோ யுண்டாக்கும்போது, உடனே ஜன்னியென்றழைக்கப்படும் சீதம் அதிகப்பட்டு மரணத்திற் கேதுவாகிறது. ஆகவே நமது கொள்கை, தேகத்தைச் சுத்தப்படுத்தும் வேலையினாலேயே தேகத்திற்கு ஜீவசக்தியும் கொடுக்கப்பட வேண்டும் என்றால், எந்த சக்தி தேகத்தைச் சுத்தப்படுத்துகின்றதோ, அதே சக்தி தேகத்திற்குப் புதிய ஜீவனையும் கொடுக்கவேண்டும். இந்த முறை யொன்றினால் மட்டுந்தான் நீண்டாயுளும் ஜீவசக்தியும் உண்டாகிறது. மற்ற சகல முறைகளும் தவறிவிட்டனவென்று கூறுவதில் பயமொன்றுமில்லை.

இவ்வாறு பிராண வாயுவைக்கொண்டு, எனில், பிராண வாயுவை நமது தேகத்திற்குள் செலுத்தி, கரியமில வாயு, உப்பு வாயு ஜலவாயு அழுக்குகள் முதலிய ஜீரணிக்கப்படாத அந்நிய பதார்த்தங்களை எரித்துச் சாம்பலாக்கி வெளிப்படுத்துவதுடன், இரத்தத்திற்கும் ஆகாரமாகும்படி செய்யவேண்டும். இந்த வேலை தினசரி செய்யப்படவேண்டும். ஆண், பெண், குழந்தைகள், வியாதிஸ்தர்கள், வேலை செய்வோர், பிச்சைக்காரர், முதலிய சகலரும் செய்ய வேண்டும். தினசரி ஸ்நானம் செய்தல். போஜனமருந்துதல், படுத்தல், படித்தல், முதலிய வேலைகளைப் போல், இந்த வாயுபக்ஷணம் செய்தல் என்ற ஜீவசம்பாத்திய முறையை, அவசியம் அனுஷ்டிக்கவேண்டும்.

ஒவ்வொரு வீட்டிலும் பிராணவாயுவை கிரஹிக்கும் அறையும் சூரிய ஸ்நானம் செய்யும் மேடையும் கட்டப்படவேண்டும். ஒவ்வொரு நகரபரிபாலன சபையும் பொது ஜனங்களுக்குப் பயன்படும்படியாக ஜீவசக்தி யறைகளும் சூரிய ஸ்நான மேடைகளும் அமைத்து வைத்துப் பரிபாலித்தல் வேண்டும். * * *



இவ்வித அப்பியாசத்தால் நாளாவர்த்தியில் உண்டாகும் சில அற்புதமான மனோ பரிசுத்தத்தையும் புத்தித் தெளிவையும் சுருக்கி இங்குக் கூறி, வியாசத்தை முடிக்க நினைக்கிறேன். அவையாவன :—தொத்து வியாதிகளைப் பற்றி பயமே இல்லை. தீராத வியாதிகள் நாட் செல்லச் செல்லத் தேய்ந்து அழிந்துபோய் விடும்; வீண் நம்பிக்கைகள், மௌட்டிய புத்தி, பொய்யான தெய்வ பக்தி, இவைகள் பறந்தோடிப் போய்விடும். மந்திரம், பேய், பிசாசு, முதலிய மானிட சத்துருக்கள் விலகி விடும். திடபுத்தி, தெளிவு ஆண்மைத்தனம், பெண்மைத்தனம், வீரம், உற்சாகம், ஆகிய நமது சொந்தக் குணங்கள் நெற்பயிர் வளர்வது போல் வளரும். ஆகவே சகோதர சகோதரிகள் பிராணனைப் பரிசுத்தப்படுத்தி ஜீவசக்தியைப் பெருக்கி உண்மையான பாரத புத்திரர்களாக ஆகவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

பிராண வாயுவை தேகத்திற்குள் செலுத்திப் பழகும் முறைக்கே "ஜீவசக்திப்பிரயோகம்" என்று தெரிந்து கொள்ள வேண்டியது. பிராண வாயுவை தேகத்திற்குள் ஏராளமாகப் பெருக்குவதால் தேகத்தின் அழுக்குக்கள் நோவின்றி எரிக்கப்பட்டு இரத்தம் சுத்தமடைகின்றதென்று முன்னமே கூறியிருக்கிறோம். ஆகையால் எந்த வழியால் தேகத்திற்குள் பிராண வாயுவைச் செலுத்தலாம் என்றும், எம்முறையைக்கொண்டு செலுத்துவது சுலபம் என்பதைப்பற்றியும் இங்கு யோசிப்போம்.

வழி--ஐரோப்பிய மஹா யுத்தம் நடந்து கொண்டிருந்த பொழுது காயம்பட்ட யுத்தவீரர்களுக்குப் பலவித சிகிச்சைகள் செய்த முறைகளில் காயங்கள் சீக்கிரமாக ஆறுவதில் பிராண வாயுவின் பிரயோகமே சீக்கிரமாகவும் பூரணமாகவும் பலன் கொடுத்து வந்ததாக நாம் படித்திருக்கிறோம். அந்தப் பிரயோகம் எப்படியெனில், வெளிவாயுவி லிருந்து பிராண வாயுவைப் பிரித்தெடுத்து, மூடுங் கிண்ணங்களால் புண்களை மூடிக் குழாய்களின் வழியாகப் பிடித்துள்ள பிராண வாயுவைப் பிரயோகிப்பதாகும். மற்றொரு வழி யெதுவெனில் ஆகாய விமானங்களில் செல்வோரும் மலைகளின் மீதேறுவோரும் பாழுங் குகைகளிலும் கிணறுகளிலும் சுரங்கங்களிலும் வேலை செய்வோரும் பாத்திரங்களில் பிடித்து வைத்த பிராண வாயுவை சுவாசித்து உபயோகிப்பதாகும். ஆக இவ்

விரு விதங்களாலும் இதைப்போன்ற பலமுறைகளாலும் பிராண வாயுவைத் தேகத்திற்குள் செலுத்தி தற்கால சாந்தியான சுகங்களை யடைந்து வருகிறார்கள் எனினும், எவ்விதத்திலேனும் பிராண வாயுவை உபயோகப்படுத்திய மட்டும் நற்பலன் உண்டாகிக் கொண்டே வருவதைப் பார்க்கலாம்.

ஆனால் பொதுவாக நாம் தேகம் முழுவதையும் பரிசுத்தப்படுத்துவதற்காகவும் ஜீரணமாகாமல் தங்கியுள்ள அழுக்குகளை எரித்து அப்புறப்படுத்துவதற்காகவும் இரத்தத்தைச் சுத்தப்படுத்த வேண்டியதற்காகவும் பிராண வாயுவைத் தேகத்திற்குள் செலுத்தவேண்டியிருப்பதால், நமது முறை முழுவதும் இயற்கையைத் தழுவிய முறையாகவே யிருக்கவேண்டும். இல்லையானால் பயன்பட மாட்டாது; ஏனெனில் நாசித்துவாரங்களும் உட்பாகங்களின் வழிகளும் நாடிகளின் மெதில்களும், கோழைகளாலும் அழுக்குகளாலும் அடைபட்டிருக் கும்போது, பிராண வாயுவை வெளிப்பிரயோகம் செய்வதினால் யாதொரு பயனும் உண்டாகமாட்டாது.

ஆகவே இயற்கையான ஜீவசக்திப் பிரயோக முறையைக் கீழே குறிப்பிடுகிறோம். அவ்விதம் தினசரி பத்து அல்லது பன்னிரண்டு தடவை மட்டும் காலையில் செய்துவர வேண்டியது. அப்படி விடாது செய்வதினால், இந்த வியாசத்தில் கண்ட நற்பலன்கள் ஒவ்வொருவாரமும் அபிவிர்த்தி யடைந்து வருவதைப் பார்க்கலாம். படிப்பவர்கள் கீழேகண்ட முறையைவிடச் சுலபமான வேறு முறை இதுகாறும் இவ்வுலகத்தில் கண்டு பிடிக்க வில்லை யென்றும், இனி வருங்காலத்திற் கண்டு பிடிக்கப்படலாமோ என்னமோ என்றும் அறிய வேண்டியது.

முறை:—காலையிலெழுந்து அவசரமான சிறு வேலைகளை முடித்துக்கொண்டு, சுத்த வாயுவுள்ள விடத்தில், முதுகின் தண்டெலும்பு நிமிர்ந்து நிற்கும்படி உட்கார்ந்துகொண்டு, மூக்குத்துவாரங்களிரண்டில் ஒன்றை விரலால் மூடிக்கொண்டு, திறந்துள்ள மற்றொரு துவாரத்தால் வெளி வாயுவை முயற்சியால் நிரம்ப மூக்குக்குள் இழுத்து, அவ்வாயுவை உள்ளிறக்கித் தொப்புளுக்குக் கீழுள்ள அடிவயிற்றில் கட்டாயப்படுத்திக் கொண்டுபோய் நிறுத்த வேண்டியது. இவ்வாறு நிறுத்திப் பிடிவாதமாக எவ்வளவு நேரம் சாத்தியமோ அவ்வளவு நேரம் நிறுத்திவைக்கப் பிரயாசைப்பட வேண்டியது. சாத்திய மற்றதாகத் தெரியும் போது, மெதுவாக, மெதுவாக; மிகவும் மெதுவாக, வெளியில் சுபாவமாக விட்டுவிட வேண்டியது. இது ஒரு தடவை யென்று சொல்லப்படும். பின்னை எதிர்த்த மூக்கில் வாங்கி இவ்விதமே நிறுத்தி மெதுவாக



விடவேண்டியது. இவ்விதம் மாறிமாறிச் செய்துவர வேண்டியது. குறிப்பிட்ட பத்தோ, பன்னிரண்டோ ஆனதும், நிறுத்தி விட்டு, தங்கள் வேலைகளைப் பார்க்க வேண்டியது. ஸ்நானம் போஜனம், வேலை இவைகள் செய்யலாம்.

எச்சரிக்கை—(அ) மேற்கண்ட முறையே உண்மையான முறையாகும். ஒருவருடம் ஆகும் வரையில் இந்தப் பத்துப் பன்னிரண்டுக்குமேற் செய்யவேண்டாம். (ஆ) இந்த முறையைப்பற்றிச் சந்நியாசி, வைதீகன், பூசாரி, பிச்சைக்காரன், யோகீசுவரன், ஹடயோகி, படிப்பற்ற மூட வேஷதாரி, முதலிய துர் அர்த்த சிகாமணிகளிடம் பேசவும் வேண்டாம், கேட்கவும் வேண்டாம்; ஆனால் சாவகாசமிருந்தால் வாயு வித்தையைப்பற்றியும் அப்பியாசத்தைப்பற்றியும் இந்திய ஐரோப்பிய விஞ்ஞானிகள் சமீபித்த காலத்தில் எழுதிய புஸ்தகங்களையும் முற்காலத்திய நம் நாட்டு விஞ்ஞானிகளால் எழுதப்பட்ட புஸ்தகங்களையும் படிக்கலாம். (இ) ஒருவருடம் சென்றதன்மேல் பிரியமிருந்தால் பத்தைப் பதினைந்தாகவும் அன்றி இருபதாகவும் செய்து கொள்ளலாம்.

ஒன்றாகக் காண்பதே காட்சி புலனைந்தும்
வென்றான் தன்வீரமே வீரம்—என்றானும்
சாவாமற் கற்பதே கல்வி தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்.

---


# ஸ்ரீமத் பகவத்கீதை.

மூலத்துடன் அத்வைத விசிஷ்டாத்வைத த்வைத பாஷ்யச் சுருக்கத்துடனும் இது வரையில் வெளியிடாத ரகஸ்யங்கள் அடங்கிய முன்னுரையுடனும் கண்ணனுடைய கருத்திற் கிணங்க சென்னை ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்யாயர் ஸ்ரீமான் சி. ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார் பி. ஏ. அவர்களால் எழுதப்பட்டது.

முழு காலிகோ பயிண்டு செய்தது.

விலை ரூபா 3—0—0

சுதேசமித்திரன் ஆபீஸ்,

சென்னை,

| | | |
|---|---|---|
| Mr. | C. M. ஷ்வா ... ... ... | 88,480 |
| ,, | J. D. ராக்பெலர் (தந்தை) ... | 3,72,790 |
| ,, | T- லாமாண்ட் ... ... ... | 1,43,430 |
| ,, | J. P. மார்கன் ... ... ... | 2,95,930 |
| ,, | O. கான் ... ... ... | 5,54,950 |
| ,, | G. F. பேக்கர் (தந்தை) ... ... | 1,981,110 |
| ,, | ஷை (மகன்) ... ... | 1,920,990 |
| ,, | E. கேரி ... ... ... ... | 1,420,090 |
| ,, | J. பீல்ஷ்மன் ... ... ... | 2,481,850 |
| ,, | J. D. ராக்பெலர் (மகன்) ... ... | 22,305,510 |
| ,, | ஹென்ரி போர்டு ... ... | 7,403,820 |

106. பண்டைக் காலத்தில் இந்தியாவிலே படிப்புக்கு மரியாதை—தஞ்சாவூர் சம்ஸ்தானத்திலிருந்த ஸ்ரீமதி ராமச்சந்திரம்மாள் என்ற பெண்மணி, எட்டுப் பாஷைகளில் கவிபாட வல்லவளாம். இரகுநாதநாயகர் என்னும் அரசர் அவளுக்கு கவிதா சார்வ பௌமா என்ற பட்டமளித்துக் கனக ரத்நாபிஷேகமும் செய்தனராம். தமிழரசர்கள், தமிழ்க் கவிவாணருக்கு, குன்றேறிக்காணும் நாடனைத்தையும் மானியமளித்ததும், கவிக்கொரு பொன்தேங்காயுருட்டியதும், பல்லாயிரம் பொன்கள் கொடுத்ததும் தமிழ்நூல் கிடக்கைகளாம்.

---

SRINIVASA VARADACHARI & Co.,

*Printers & Booksellers,*

MOUNT ROAD, MADRAS.

## தமிழ்ப் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. V. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M. A. விலை அணா 10.

2. போஜ சரித்திரம்.—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B. A., B. L., ஸப்ஜட்ஜ், நாகபட்டணம். விலை அணா 10.

3. ராஜராஜசோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீசஐயர் அவர்கள், R. ரங்காசாரியாரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.

(அடுத்த பக்கம் பார்க்க.)



107. ஆக் முட்டை—ஆக் என்னும் நீர்ப்பறவை முற்காலத்தில் வட அட்லாண்டிக் பிரதேசங்களில் வாழ்ந்து, இப்பொழுது இனமேயின்றி மாண்டொழுந்து போயிற்று. உடல் மிகப்பெரிதாயும் இறக்கைகள் மிகச் சிறிதாயுமுள்ள இந்தப் பக்ஷி, நீர்ச்குள் முக்குளிப்ப தன்றிப் பறக்க முடியாது. அந்தப் பிரதேசத்தில் உள்ள மனிதர்கள் இதை வேட்டையாடித் தின்று நசிக்கச் செய்தனர். இதன் முட்டைகள் சில மட்டும் இன்னும் இருக்கின்றன. கடைசி முட்டை ரூ. 7500-க்கு விற்கப்பட்டதாம்.

108. காகித வீடு—அமெரிக்காவில் மாஸசூஸெட்ஸ் மாகாணத்தில் ராக்போற்டூரி லுள்ள எல்லிஸ் ஸ்டென்மன் என்பவர், தன் மனைவி, மக்களின் உதவியைக்கொண்டு, பழைய பத்திரிகைகளின் காகிதத்தால்த் தன் வீட்டின் சுவர் கூரைகளை உள்ளும் புறமும் மூடியிருக்கிறார். காகிதங்களை அழுத்திப் பசையாலொட்டித் தகடுகள் போலாக்கி, நீரால் நனையாதபடி வார்னீஷ் பூசியிருக்கிறார்.

---

4. இட்டார்க்கு இட்டபலன்.—ஆசிரியர் மிஸ்டர் J. பொன்னுஸாமி ராவ். விலை அணா 10.

5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் எழுதியது. ராவ் ஸாஹெப், S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1–4–0.

6. தமிழ் வசன லக்ஷணம்.—G. தாமோதர முதலியார், B. A. எழுதியது. விலை அணா 12.

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1-6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7-12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

9. சுகாதாரபோதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது. விலை அணா 8.

109. அன்பின் வலிமை—ஓஹியோ மாகாணத்தில் டொபாஸ்கோ என்னும் ஊரிலே, ராங்க் பார்னேஹாபர் என்பவர் தேனீக்கள் வளர்த்து வருகிறார். அவர் ஈக்களிடத்தில் காட்டும் கருணையும், அவ் வீக்களுக்கு அவரிடத்துள்ள பக்ஷமும் எவ்வளவெனின், அவர் விரும்பியபோது, பல்லாயிரங்களாக வந்து கவிந்து அவர் தலையையும் கன்னங்களையும் கழுத்துக்களையும், அவை, ஒரு பனிக் குல்லாவைப்போல் மூடிக்கொண்டு, அவ்வாறே இருக்கின்றன. இப்படிச் செய்யும் ஈக்களில் ஒன்றேனும் அவரைக் கொட்டுவதில்லை.

110. தலைவலியின் சில காரணங்கள்—'தலைவலி' என்பது தனிநோயன்று; நோய்களின் குறிகளில் ஒன்றேயாம். அதன் காரணங்கள் சிலவாவன—(1) பெருந்தீனி (2) கண்ணின் பலவீனம்; பொடிஎழுத்துப் புஸ்தகங்களைப் படிப்பதாலும், அதிக வெளிச்சம், குறைந்த வெளிச்சத்தில் படிப்பதாலும், படக் கூத்துக்களை அடிக்கடி பார்ப்பதாலும் உண்டாகக்கூடும். (3) அதிகவேலைக் களைப்பு. (4) காப்பி; டீ, புகையிலை முதலிய லாகிரி வஸ்துக்களை அதிகம் உபயோகிப்பது (5) கண்ணில் சில அங்கக் குறைவுகள்.


## The "Hindu Nesan"

(THE LEADING TAMIL WEEKLY.)

Commands a decent circulation-stands as a best medium for advertising.

News of varied interest a special feature.

"இந்து நேசன்"

வாரப்பதிப்பு-சந்தா விவரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-வருஷத்திற்கு | ... | ரூ. | 6 | 0 | 0 |
| 6-மாதத்திற்கு | ... | ,, | 3 | 8 | 0 |
| 3-மாதத்திற்கு | ... | ,, | 1 | 12 | 0 |
| மலாய், மோரீஸ், நெட்டால், முதலிய வெளிநாடுகளுக்கு. | | | | | |
| 1-வருஷத்திற்கு | ... | ,, | 10 | 0 | 0 |
| தனிப்பிரதி | ... | ,, | 0 | 2 | 0 |

*For particulars apply to*:

THE MANAGER THE "HINDU NESAN"

65, Armenian Street, MADRAS.




(111) 100 ஆண்டுகளுக்குமுன் ஆங்கிலேயர் நாகரிகம்—இந்தியாவில் நடக்கும் ஆங்கிலத் துரைத்தனத்தைப் பழித்து வெறுப்பவர்களில் பலர், இங்கிலாந்து சென்று மீண்டபின் அந்நாட்டின் மேலான நாகரிகத்தையும் சுகசௌகரியச் சிறப்புக்களையும் ஆங்கிலேயரின் சாமர்த்தியத்தையும் மனதார மெச்சிப் புகழ்கின்றனர். அதே இங்கிலாந்து ஒருநூறாண்டுகளுக்கு முன் என்ன நிலைமையிலிருந்ததென்பதைக் கவனித்தால் ஆச்சரியத்தைத் தரும்.

அக்காலத்தில், அது வரையில் கேட்டிராத வியாபார ஆதிக்கத்தைத் திடீரெனப் பெற்றதினால், தனிகர் எளியரை வருத்த, தேச முழுவதும் சீர்குலைந்து, குரூரச் செயல்களும் பாதகங்களும் தினசரி சம்பவங்களாயின. அந்நாடு அவ் வநாகரிகத்தைத் தள்ளிப் புத்துயிர் பெற்று விளங்கிய நிகழ்ச்சி, உலக விருத்தியில் கவனமுள்ளோர்க்கும், அவர்களுள்ளும், அவ்விருத்திக் குரிய சக்திகளில் மத நம்பிக்கையே முக்கியமென்று நம்புவோர்க்கும், என்றும் களிப்பை தரக்கூடியது. மேற்கூறிய நிலைமையின் விருத்தாந்தத்தைச் சிறிது கூறுவோம்.

சுகாதார விதிகளை அதிகாரிகள் பாராட்டாததினால் நகரங்களெல்லாம் வியாதிகளுக்கு வசதிகளாயின. மான்செஸ்டா என்ற நகரத்தில் நீண்டதொரு பெரும் பள்ளத்தின் மேல், ஒரு வீதி கட்டி விட்டார்கள். இதனால் செலவொன்றும் இல்லாமல் வீதியடியில் ஒரு குகை உண்டாயிற்று. இக்குகையிலும், இம்மாதிரியான மற்ற விடங்களிலும் ஆயிரக் கணக்காய் எளியர் வசித்துவந்தனர். பல குடும்பங்கள் குதிரைக் கொட்டகை, மாட்டுத் தொழு, பண்டசாலைகள் முதலிய விடங்களில் வாழ்ந்துவந்தனர். ஜனங்களுக்கு உரிமையான பொது நிலங்களை யெல்லாம், செல்வர் பிடுங்கிக்கொண்டனர். சிசுக்கள், ஏழைகளுக்குள் ஆயிரக்கணக்காய் மரித்தன. முனிஸிபாலிடி அங்கத்தினர் யாவரும் பேராசையும் தன்னலக் கருத்தும் உள்ளவராயிருந்தனர். சாக்கடைகள், குழாய்கள், தெருவிளக்குக்கள் முதலிய விஷயங்கள், கவனிப்பாரற்றுக் கிடந்தன. நகரத்தின் பணம் பலரால் அபகரிக்கப்பட்டது. 1833-ம் வருஷத்தில், 186 நகரங்களின் நகரபரிபாலனசபையார், தம்மைத்தானே மறுபடி நியமனம் செய்யக்கூடும். அதாவது; அச்சபையின் அங்கத்தினர் வாழ்நாளெல்லாம் அங்

கத்தினராகவே கழிக்கலாம். நகரங்களை நரகங்களெனக் கூறுவது பலவிதத்தில் நியாயமா யிருந்தது.

இராஜாங்கத்தார்கள், எளியரை வருத்தும் பொருட்டும், தற்காப்பின் பொருட்டும், நகரங்களில் ராணுவச் சேவகர்களை நியமித்திருந்தனர். 1819-ம் வருஷத்தில், பீடர்லூ வென்ற இடத்தில், பல ஏழைகள் போர்வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதிகாரிகளால் நியமிக்கப்பட்ட போலீஸ் ஒற்றர்கள், ஏழைகளுடன் உலவி வாழ்ந்து, குரூரங்களை நிறுத்தக் கலகஞ்செய்வோரைக் காட்டிக் கொடுத்தனர். நாடின் என்ற ஓர் ஒற்றன், இப் பொல்லாத் தொழிலில் கைதேர்ந்து, 20,000 பவுன் வரைச் சம்பாதித்ததாகச் சொல்கின்றனர். ஒரு போலீஸ்காரன் பல ஏழைகளைக் கள்ள நோட்டுக்கள் உண்டாக்கும்படி தானே தூண்டிவிட்டு, பிறகு அவர்களைச் சிறைசெய்ததாக ஒப்புக்கொண்டான். சட்டங்களும் அநியாயமா யிருந்தன. புரோகிதரும் தனிகரும் ஒரு கட்சியாயினர். பல அற்பமான குற்றங்களுக்குச் சிரச்சேதம் விதிக்கப் பட்டுவந்தது. காபெட் என்பவரின் பிரசுரங்களை விற்றதற்காக இரண்டு ஏழைகள் கசையடித் தண்டனை அடைந்தனர். ஒரு புரோகிதச் செல்வர், தமக்குச் சொந்தமான வீடுகளில் குடியிருந்தவர்களை, காலராக் காலத்தில் அவ்வீடுகளினின்றும் வெளியே துரத்திவிட்டார். ஒரு குற்றமும் சாட்டப்படாமல், கோர்டில் ஒருவிதத் தண்டனையும் பெறாமல், ஒருவன் ஏழுவருஷங்கள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டானும்! அறிவைப் பெற்றால் ஏழைகள் கிளம்பி விடுவார்களென்று பயந்து, பத்திரிகைகளும் வரிசுமத்தப் பெற்றன. யந்திரச் சாலைகளில், சிறு குழந்தைகள் வேலைசெய்துவந்தனர். பலமணிநேரம் இருட்டறைகளில் உழைப்பதால், இவர்கள் அடிக்கடி கைகால் கூம்பிப் போய், அங்கஹீனம் அடைந்தனர். களைப்புற்ற பிறகும் இவர்களை வேலை செய்யும்படி நிர்ப்பந்திக்க, சவுக்கடிக்காரர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். பைத்தியக்காரர்களுக்கு ஆஸ்பத்திரி யில்லை. அவர்களை அநேகமாய், கைகால் அசைக்க முடியாத பலகைக் கூண்டுகளில், பல வருஷங்களுக்கு அடைத்து விடுவார்கள். ஏழைகள், தனிகர்களால் வருத்தப்பட்டு, தாங்களும் தங்களுக்குக் கீழான மிருகங்களை வருத்திவந்தனர். ஓர் ஏழைப்பெண், ஒரு பூனையையும் அதன் குட்டிகளையும் தோலை உரித்துத் தெருவில் எறிந்து விட்டுப் போனாளாம். —பா.



112. பம்பாயில் பெண்கள் சர்வகலாசாலை—ஒரு காசேனும் கைம்முதலின்றி ஆறு வருஷங்களுக்கு முன் தொடங்கப்பட்ட இக் கலாசாலைக்கு, இப்பொழுது 18 லக்ஷ ரூபாய் மூலதன மிருக்கிறது. இதன் கட்டடம்மட்டும் 2½ லக்ஷ ரூபாய் பிடித்தது. பத்துப் பள்ளிக்கூடங்களும் இரண்டு கலாசாலைகளும் இப்பொழுது இதன் கிளைகளாயுள்ளன. இருபது பெண்களுக்குமேல் இதுவரை இதில் பட்டம் பெற்றிருக்கின்றனர். இந்தச் சர்வகலாசாலை இனி நாளுக்கு நாள் விருத்தியடைந்து தழைத் தோங்குமென்பது உறுதி.

113. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பெண்கள்—கடைசித் தேர்தல் அக்டோபரில் நிகழ்ந்தபோது 41 ஸ்திரீகள் அபேக்ஷகராய் நின்றனர். அவர்களில் நான்கு பேரே அங்கத்தினராய்த் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

114. இந்தியர்களின் ஆதி நாகரிகம் :—இந்தியாவின் ஆதிக் குடிகள், கறுப்பு நிறமுள்ள நாகரிகமற்ற மூடஜனங்கள் என்றும்; மத்திய ஆசியாவிலோ உத்திர துருவப் பிரதேசத்திலோ இருந்து வந்து குடியேறிய ஆரியர்கள், இவர்களை வென்றடக்கிக் கீழ்ப்படுத்திக் கொண்டன ரென்றும்; தக்ஷிணத்திலிருந்த திராவிடர்கள் மட்டும் சிறிது நாகரிக முள்ளவரா யிருந்தாலும், அவர்கள் நாகரிகமுமே அவ்வளவு சிறந்ததாயன்றி, ஆரியரின் நாகரிகத்தினால் தான் மேன்மை யடைந்ததென்றும், இதுவரை நம்பப்பட்டன. பிற்காலத்து ஆராய்ச்சியின் விளைவாக இவ்வெண்ணம் மாறி வருகிறது. பண்டைத் தமிழ்நூல்களையும் ஆரியரின் வேத சாஸ்திரங்களையும் ஊன்றி நோக்கி ஆராய்வோர், ஆரியர்கள், ஹோமங்களையும் அக்கினி காரியங்களையும் தேவாராதனையில் முக்கியமாகக் கொண்டொழுகின ரென்றும்; பண்டைத் திராவிடர்கள், அவ்வாறன்றி, இலை மலர்களை அருச்சித்துச் செய்யும் பூசையையே பிரதானமாய்க் கொண்டிருந்தன ரென்றும்; பூசை என்னும்மொழி, பூ என்னும் தமிழ்மொழியி னடிப்பிறந்த தென்றும் கூறுகின்றனர். இவையன்றி, இந்தியாவிலே ஆரிய நாகரிகச் சின்னங்கள் மூவாயிரம் ஆண்டுகளுக்குட் பட்டனவாகவே இருக்கின்றன. திருநெல்வேலி ஜில்லாவிலே, திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் வழியிலே, தாமிரவருணிக் கரையிலுள்ள ஆதித்தநல்லூரில் தோண்டி யெடுக்கப்பட்ட 'முதுமக்கள் தாழிகள்', பாண்டங்கள், முதலியனவோ, இற்றைக்கு ஏறத்தாழ ஆறாயிரம் ஆண்டு

களுக்கு முற்பட்டனவாயிருப்பதன்றி, அங்கே அகப்பட்ட மண்டையோடுகளை அளந்து பார்த்ததில், இப்பொழுதுள்ள திராவிடர்களின் முன்னோர்களே பண்டைக்காலத்திலும் அங்கிருந்தவர்கள் என்பதை நிரூபிக்கின்றன. இதுகாறும் இந்தியாவில் அகப்பட்ட பண்டை நாகரிகப் பொருள்களில், ஆதித்தநல்லூரில் கிடைத்தனவே முக்கியமாயிருந்தன. இப்பொழுது, வடக்கே பஞ்சாப் பிரதேசத்திலே ஹரபாதம் என்னும் ஊரிலும், ஸிந்து பிரதேசத்திலே மோஹெஞ்சதாரோ என்னும் ஊரிலும், ஏராளமான பாண்டங்களும், புதையற் குழிகளும், பண்டை நாகரிகச் சின்னங்கள் பிறவும் அகப்பட்டிருப்பதுமன்றி, இவையாவும் ஆதித்த நல்லூரில் இதுவரை கிடைத்துள்ளவை போலவேயிருந்து, நெடுந்தூரம் இடையுள்ள இவ்விரு பிரதேசங்களிலும், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன், சிறந்த நாகரிக முன்னேற்றத்தைப் பெற்றிருந்த திராவிடர்களே வாழ்ந்துவந்தனரென்பதையும்; அவர் வாழ்ந்து வந்தது, ஆரியர் இந்தியாவுக்கு வருதற்கு வெகு காலத்துக்கு முன்னரும் என்பதையும் நிரூபிக்கின்றன. இம்மட்டோ? தமிழகம் என்னும் சொல்லும், வேறு சில திராவிடச் சொற்களும், லீஷியன் என்னும் ஆதிபாஷையில் உருமாறி வழங்கினதையும்; ஆதி பேபலோனிய நாகரிகச் சின்னங்களையும், இவை சம்பந்தமான இதர விஷயங்களையும், இன்னும் தோண்டியாராய்தற்குரிய வேறிடங்களில் கிடைக்கக்கூடிய நாகரிகச் சின்னங்களையும் பற்றி ஆலோசனை செய்யுங்கால், இந்தியாவிலே பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த ஆதி திராவிடர்களே பேபலோனியா, மெசபொடேமியா, கிரேக், மத்தியதரைக் கடல் பிரதேசம் முதலிய இடங்கள் சென்று, அவ்விடங்களின் ஆதி நாகரிகங்களுக்குக் காரணபூதராயிருந்தனரென்றும்; அவர்களே ஆதிச் சுமேரியர்களென்றும் ஊகிக்க, ஆஸ்பதங்கள் உள்ளன. இதனால், விவிலிய நூலிலே புராதனமாகக் கூறப்படும் நாகரிகம், இந்தியாவிலிருந்தே சென்றதென்பது பெறப்படும். இதற்குப் போதிய ஆதாரங்கள் இன்னும் அகப்படவில்லையெனினும், இப்பொழுது நிகழ்ந்துவரும் ஆராய்ச்சிகளால், இது வெளிப்படையாகலாமென்று Dr. சுநீதிகுமார சட்டர்ஜி நம்புகிறார்.

**115.** மோரின் மகிமை—புளித்த மோரைக் குடித்து வந்தால், ஜீரண சம்பந்தமான நோய்களெல்லாம் நீங்கி,



ஆயுள் விருத்தியாகுமென்று, ஒரு வைத்திய நிபுணர் கண்டுபிடித்திருக்கிறார். அமெரிக்க ஐக்கிய மாகாணங்களிலுள்ள கோடீசுரப் பிரபுக்களுக்குள் மிகப் பெரியவரான ஜான் டி. ராக்பெலர் என்பவர், ஜீரணசக்திக் குறைவினால் பல்லாண்டுகளாக வருந்தி, இப்பொழுது மோர் குடித்து வருவதால் சௌக்கியப்பட்டு, சுகமாய் வாழ்ந்து வருகின்றனராம். மோர் குடிப்பதன் பலனாக ஒரு நூறாண்டேனும் உயிர்வாழ எதிர்பார்க்கின்றனர். மண்ணெண்ணெயினால் கோடீசுரப் பிரபுவான இவர், மோர்குடித்து தீர்க்காயுஷ்மானாய் வாழ்வது பொருந்தும். மோரைவிடப் புளித்த பாலைக் குடிப்பது சிறந்ததாம்: ஆயின், புளித்த பாலைக் குடித்துக்கொண்டேனும் உயிர் வாழ்வதை, அவ்வளவு அவசியமானதாக வேணும், விரும்பத்தக்கதாக வேணும், பலர் கருதிலர். —மா.

# நமது சீமைக் கடிதம்

# ஆகாயக் கப்பல் யாத்திரை

ஸ்ரீ. V. S. துப்புஸ்வாமி ஐயர், B. A. (Hons.) மார்ஸேல்ஸ்.

ஆகாய மார்க்கப் பிரயாணம், நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஆரம்பத்திலிருந்த, திகிலும் நடுக்கமும், ஏறக்குறைய மாறிவிட்டன. ஆண்பாலரும் பெண்மக்களும், ஐயமும் பயமுமின்றி ஆகாயக் கப்பலேறிச்செல்லத் தயாராய் விட்டனர். இக்கால மக்களின் உணர்வென்னவெனின்: ‘காலத்தை நன்கு உபயோகித்தாலன்றோ, நமக்கு வேண்டிய சாதனங்கள் கிடைக்கும்? எந்தெந்த வழியில் ஒரு வேலையைச் சுருக்கிச் செய்யலாமோ, அவ்வாறு செய்ய முயலுவதுதான் நன்று’ என்பதே.

ஆகாய மார்க்கப் பிரயாணம், முதல் முதலில் மிகவும் ஆபத்துக்களை விளைவித்தது. இப்பொழுதும், ஆபத்துக்கள் முற்றும் நீங்கினபாடில்லை. காலையில் சிற்றுண்டியுண்டவுடன், பத்திரிகையை நோக்கின், இங்கு இந்த விமானம் எரிந்து விழுந்ததென்றும், அங்கு அக்கப்பல் திசை தெரியாமல் சென்று பிளந்து விழுந்ததென்றும் சமாசாரத்தை அடிக்கடி காணலாம். சில ஆகாயக்கப்பல்கள் போய்க்கொண்டேயிருக்கும்போது, ஏதோ யந்திரத்

தின் குற்றத்தினால், திடீரென்று கீழேவிழ, அதிலிருக்குமனைவரும் மாளுவர். ஆனால் இத்தகைய விபத்துக்கள் கூட, மேல் நாட்டு ஜனங்களின் விடா முயற்சியை மாற்றவில்லை. அவ்வகை யந்திரக் குற்றங்கள் நேரா வண்ணம் சாதனங்கள் கண்டுபிடிக்கலாயினர். எனவே, இப்பொழுது ஜனங்கள் ஆகாய மார்க்கப் பிரயாணத்தைக் குதூகலத்துடன் கைப்பற்றுகின்றனர்.

சில நாட்களுக்கு முன், நானும் எனது சினேகிதனும், இவ்வகைப் பிரயாணத்துக்குச் சித்தமானோம். நாங்கள் லண்டனிலிருந்து பாரிஸ் நகரத்துக்குப் பறந்து செல்லத் துணிந்தோம். காலை போஜன:முடிந்ததும், காரில் ஏறி, கிறாய்டென் என்னும் கப்பல் புறப்படுமிடத்திற்குச் சென்றோம். கிறாய்டென், ஆகாயக்கப்பல் புறப்படுவதற்கும், வந்து இறங்குவதற்கும் ஏற்படுத்தப்பட்ட ஒரு பிரும்மாண்டமான மைதானம். அந்நாள் ஆகாயம் மேகங்களால் மூடப்பட்டு மந்தாரமாக விருந்தது. (லண்டன்மாநகர் சாதாரணமாக எக்காலமும் அவ்வாறாகத்தானே இருக்கிறது!) மைதானத்தின் அருகில் செல்லும்போதே, சுமார் இருபது ஆகாய விமானங்கள் இங்குமங்கும் சுற்றி வருவதைக் கண்டோம். தூரத்திலிருந்து பார்ப்பதற்கு, ஆகாயக் கப்பல் ஓர் பெரிய பறவைபோலக் காணப்பட்டது; இரண்டிறக்கைகளையும் விரித்துப் பறக்கும் பறவை போலிருந்தது. கால்களுக்குப் பதிலாக, இரண்டு ரப்பர் சக்கரத்தை உடைத்தாயிருந்தது. அருகில் வரவே, மற்றைய உறுப்புக்களைக் காண முடிந்தது. நடுப்பாகத்தில், ஒரு பெரிய நீண்ட பெட்டி, கதவுகளுடனும் சன்னல்போன்ற துவாரங்களுடனுமிருந்தது. இதற்குள் நாம் இரண்டரை மணிநேரம் அடைக்கப்பட்டிருப்போம் என்று எண்ணிய மாத்திரத்தில், மயிர்க்கூசலெடுத்தது. காதடைக்கும் தொனி தொடங்கியவுடன், ஏணி வழியாகக் கப்பலுட்புகுந்தோம். இருவரிசையில் பன்னிரண்டு நாற்காலிகள் போடப்பட்டிருந்தது, முதல் முதலில் கண்ணுக்குத் தென்பட்டது. காதிலடைத்துக்கொள்வதற்குப் பஞ்சு ஒரு சிறு கூடையில் வைக்கப்பட்டிருந்தது. கப்பலோட்டியை ஒரு சன்னல் வழியாகக் காணமுடியும். அவன் பெட்டியின் வெளிப்புறத்தில் உட்கார்ந்திருந்தான். சில நிமிஷத்திற்குள் கதவுகளை அடைத்து விட்டார்கள். இருபுறத்திலும் யந்திரம் வேலை செய்து கொண்டிருந்தது. துடுப்புகள் போன்ற இரண்டு ஆயுதங்கள், வெகு வேக



மாய்ச் சுழல்வதைக் கண்டோம். இதனொலிதான், காதை அடைத்துக் கொள்ளச் செய்தது. பிறர் பேசுவது கேட்பது அசாத்தியமானதால், கர்கிதத்தில் எழுதிக் காண்பிக்கத் தொடங்கினோம். சிறிது நேரத்திற்கெல்லாம் கப்பல் நகரலாயிற்று. எங்களுக்குப் பயமொருபக்கம், ஆச்சரியம் ஒரு பக்கம்; ஏனெனின், அஃது எங்கள் முதலனுபவமன்றோ! மேலும், எவ்வளவோபேர் திடீரென்று மாண்டனர் என்பதை நினைத்த மாத்திரத்தில், நமக்கும் அக்கதி நேரிடுமோ என்பது மனதைச் சிறிது வருத்திற்று. ‘எல்லாம் இறைவன் விட்டவழி’ என்று, மனத்தை ஒருவாறு தேற்றிக்கொண்டோம். கப்பலோட்டியின் முகத்தில் யாதொரு கவலைக்குறியும் காணோம்; அவன் முகத்தைப் பார்த்து நாங்களும் தேறுதலை யடைந்தோம். கப்பலோ, பூமியிலிருந்து சுமார் 2500 அடி உயரக் கிளம்பி, அதிவேகமாய்ச் சென்றது. போகும் வேகத்தைக் கண்டுபிடிக்கவும் இயலவில்லை. சன்னல் வழியாய்க் கீழ் நோக்கின் எஃதொன்றும் ஓரணுவளவாகத் தோன்றிற்று. ராஜ பாதைகள் கோலக்கோடுகள் போலவும், காடுகள் சிறு செடிக்கூட்டங்கள் போலும், ரயில் முதலிய வண்டிகள், மிருகங்கள், சிற்றெறும்புகள் போலும், வெகு நூதனமாகக் காணப்பட்டன. சுற்றி நோக்கின் ஈராயிரத்து ஐந்நூறு சதுரமைல் தூரம் காண முடியும். சில நேரத்தில் கெண்ட் என்னும் ஆங்கில பிரதேசத்தின் மேல் பறந்து சென்றோம். பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாக விருந்தது. கப்பலோ வாயுவேகமாகப் பறந்தது. இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் மத்தியிலுள்ள கடலை 20 நிமிஷத்தில் கடந்தோம். இக் கடலை நினைத்த மாத்திரத்தில் எங்களுடல் நடுங்கிற்று. அது எக்காலத்திலும், பெருங்கொந்தளிப்பா யிருக்கும். நீராவிக் கப்பலினால் அதைக் கடப்பதற்குச் சுமார் ஒன்றரை மணிநேரம் பிடிக்கும். மேலும் அப்பொழுது கப்பலாட்டம் யமவேதனைக் கொப்பாக விருக்கும். அக்கஷ்டத்தை ஒருவராலும் சரிவர எடுத்துக்கூற முடியாது. இவ்வித கஷ்டங்கள் ஒன்றும் இல்லாமல், 20 நிமிஷத்தில் இக் கடலை கடக்கக் கூடும் கப்பலில் நாமும் உண்டல்லவா என்று சந்தோஷித்தோம். நாமெல்லோரும், இம்மாதிரி ஆகாயக் கப்பலைக் கண்டுபிடித்த மாகானுக்கு நன்றியுள்ளவராயிருத்தல் வேண்டும். லண்டனை விட்டு ஒரு மணி நேரத்திற்குள், பிரான்ஸ் தேசத்தின் மேல் பறக்கலானோம்.

இத்தேசத்தின் வளமையை எவ்வண்ணம் நாம் விஸ்தரிக்க முடியும்! ஆகாயமும் தெளிந்து விட்டது. கதிரவனும் மேகங்களைவிட்டு வெளிவந்து விட்டான். கீழே வயல்களோ பச்சென மனதைக் கவர்ந்தன.

இவ்வாறாகத்தானே சில ஊர்களைக் கடந்து, சுமார் இரண்டரை மணி நேரத்தில், பாரிஸ் நகரத்தி னருகே சென்றோம். பாரிஸோ, கண்ணுககுத் தேவலோகம் போல் காணப்பட்டது. நாங்கள் பக்ஷி பார்ப்பதைப் போலல்லவோ பார்த்தோம்! பாரிஸ் நகரத்தின் முக்கிய கட்டடங்கள் தெளிவாகக் கண்ணுக்கு தென்படலாயின. கப்பலி லிருந்த நாங்களனைவரும் எங்கிருக்கிறோம் என்பதை மறந்தவர்களாய், எழுந்து நின்று பாரிஸை உற்று நோக்கினோம். இம்மாதிரி யாத்திரை செய்யாவிடின், இவ்வாறான காட்சியை எவ்வாறு காணக்கூடும் என்னும் எண்ணம், எங்கள் மனத்தில் தோன்றியது. நமது தேயத்தா ரனைவரும் இம்மாதிரி கப்பலில் பிரயாணஞ்செய்ய வேண்டும் என்னும் அபிப்பிராயம், எங்களுக்குத் தெளிவாக ஏற்பட்டது. ‘மனிதனுக்கு இம்மாதிரிக் கப்பல், பெரும் நன்மையை விளைவிக்கும் என்பது சொல்லாமலே ஏற்படும். ஒரு தேசத்தி னின்று மற்றொரு தேசத்திற்கு ஒரு மணிப் பொழுதில் போகமுடியுமானால், வேறு நன்மை என்ன வேண்டும்? அவ்வாறு ஒரு தேயத்தார், மற்றொரு தேயத்திற்கு அடிக்கடி போவாரானால், அவ்விரு தேசங்களுக்கும், ஐக்கியம், அந்நியோன்னியம் உண்டாகு மல்லவா? அவர் மத்தியி லிருக்கும் வித்தியாசம், சூரியன் முன் பனிபோல் நீங்கிவிடு மல்லவா? தரைமேல் ஏராளமான பொருள் செலவு செய்து இருப்புப் பாதைகள் போட வேண்டியதில்லை. பின்னால் அதைப் பெரும்பொருள் செலவழித்துப் பாதுகாக்கவும் வேண்டாம். சமுத்திரப் பிரயாணம் எவ்வளவோ துன்பங்களை உடைத்தா யிருக்கிறது. அவ்வகைத் துன்பங்களை ஆகாயப் பிரயாணத்தினால் நிவர்த்திக்கலா மன்றோ?’ என்று, இவ்வாறாகத் தானே ஒவ்வொருவரும் யோசித்துக் கொண்டிருக்கையில், கப்பல் மெள்ளெனக் கீழ் நோக்கிச் சென்றது. தரையில் வந்து நின்றதும், நாங்கள், ஒரு பெரு மூச்சு விட்டு, கப்பலிலிருந்து வெளிப்பட்டோம். கப்பலோட்டிக்கு எங்கள் வந்தனமளித்துவிட்டு, காரிலேறி பாரிஸ் நகரத்தினுட் புகுந்தோம்.

# கம்ப ராமாயண இன்கவித் திரட்டு*

(654-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீ. வே. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C., வெள்ளக்கால்

4. வெயில் இயற் குன்றம் கீண்டு வெடித்தலும், நடுக்கம் எய்தி
மயில்இயற் றேவிமார்கள் தழீஇக்கொளப் பொலிந்தவரனோர்,
அயில்எயிற் றரக்கன் அள்ளத் திரிந்தநாள், அணங்குபுல்லக்,
கயிலையின் இருந்த தேவைத் தனித்தனி கடுத்தல் செய்தார்.

இ - ள்:—(அநுமானது பாரம் தாங்க மாட்டாமல்) அந்த மலை பிளந்து வெடிக்கத், தேவமாதர் (பயந்து தம்மைக்) கட்டிக்கொள்ள விளங்கிய தேவர்கள் ஒவ்வொருவரும், இராவணன் (கைலாச மலையை) வாரியெடுக்க (அம்மலை) சுழன்ற காலத்தில் (பயந்து) உமாதேவி கட்டிக்கொள்ள (அந்த) மலையில் இருந்த சிவனை ஒத்தார்கள்.

வெயில்—ஒளி. இயல்—தன்மை. வெயில் இயல் குன்று-(தன்னிடத்துள்ள பொன்மணிகள் அருவிகள் முதலியவைகளால்) ஒளித் தன்மையுடைத்தான மலை. மயில் இயல்—மயில் போலும் சாயல். தேவி-தேவப் பெண்; மனைவி. தழீஇ-தழுவி. அயில்—கூர்மை. எயிறு-பல். கடுத்தல்-ஒத்தல்.

[அநுமான் வாலை உயர்த்திக் கால்களை மடக்கி மார்பை ஒடுக்கித் தோள்களை எழுப்பிக் கழுத்தைச் சுருக்கிக் கைகளை நீட்டி வேகமாக உயரக் கிளம்பினான்.]

5. விண்ணவர் ஏத்த வேத முனிவரர் வியந்து வாழ்த்த
மண்ணவர் இறைஞ்சச் செல்லும் மாருதி, மறம்உட் கூர,
‘அண்ணல் வாள் அரக்கன் தன்னை அமுக்குவாம் இன்னம்’ [என்னக்
கண்ணுதல் ஒழியச் செல்லும் கயிலையங் கிரியும் ஒத்தான்.

இ - ள்:—தேவர்கள் துதிக்க, முனிவர்கள் ஆசீர்வதிக்கப், பூவுலகத்தோர் வணங்கச் செல்லுகின்ற அநுமான், (தன்னைப பிடுங்கி எடுத்தானென்ற) கோபம் மனத்தில் மிகுதலினால் ‘இராவணனை (முன் அமிழ்த்தினது போல) இன்னும் அமிழ்த்துவோம்’ என்று, சிவன் (தன்

* All Rights Reserved by the Author.

மீது இருத்தல்) நீங்க (த்தனியே) செல்லும் கைலாச மலையை ஒத்தான்.

மறம் உள்கூர-கோபம் மனத்தில் மிக. அண்ணல்-பெருமை (உடைய)

"முன்னர்ச் சிவபிரான் இராவணன் சாமகானஞ் செய்தற்கு உவந்து அவனைக் கால் தளர விட்டிட்டமை கருதி, இப்பொழுது அவனை அமுக்குதற்கு அப்பிரானின் றித் தான் தனியே சென்றதென்க."

கைலை மலையாகிய வெள்ளிமலை பருமையிலும் நிறத்திலும் அநுமானை ஒத்ததென்க.

6. தடக்கைநா லைந்து பத்துத் தலைகளும் உடையான், தானே
அடக்கிஐம் புலன்கள் வென்ற தவப்பயன் அறுத லோடும்,
கெடக்குறி ஆக, மாகம் கிழக்கெழு வழக்கு நீங்கி
வடக்கெழுந் திலங்கை செல்லும் பரிதிவா னவனும் ஒத்தான்.

இ-ள்:—இருபது கைகளும் பத்துத் தலைகளும் உடைய இராவணனது தவப்பயன் (அநுபவித்து) ஒழிந்து விட்டதனால், (இனி அவன்) கெட்டுப்போவதற்கு (த்துர் நிமித்தமான) அறிகுறியாக, (இயல்பாக எக்காலத்தும்) கிழக்கே உதிக்கும் முறைமை நீங்கி, வடக்கே உதித்து, (த்தெற்கே) இலங்கை (நோக்கிச்) செல்லும் சூரியனை ஒத்தான் (வடக்கேயிருந்து தெற்கே செல்லும் ஒளிமயமான அநுமான்).

தடம்கை-பெரியகை; நீண்டகை. ஐம்புலன்கள் அடக்கி-(ஐம்பொறிகளை அவற்றிற்குரிய) ஐம்புலன்கள் (நுகரச் செல்லாமல்) தடுத்து. மாகம்-ஆகாயம். வழக்கு—வழக்கம். பரிதிவானவன்—சூரிய தேவன்

7. விளித்துப்பின் வேலை தாவும் வீரன்வால், வேதம் எய்க்கும்
அளித்துப்பின் அநும னென்னும் அறம்துணை பெற்ற தாயும்,
களித்துப் புன் தொழில்மேல் நின்ற அரக்கர்கண் ணுறுவ[ராமென்
றொளித்துப்பின் செல்லும் கால பாசத்தை ஒத்த தன்றே.

இ-ள்:—(தோள் கொட்டி) ஆரவாரித்துப் பிறகு கடல் தாவத்தொடங்கிய அநுமானது வாலானது, வேதங்களை உணர்ந்தவனும் அருளும் பலமும் உடையவனுமாகிய அந்த அநுமானென்ற தருமதேவதையைத் துணையாகக் கொண்டதாயிருந்தும், கள்ளுண்டு இழிதொழில் புரிதலையே மேற்கொண்ட இராக்கதர் பார்த்து விடுவார்களென்று (பயந்து, அநுமானது உடல் மறைவில்) மறைந்து



பின் பக்கமாகவே (அவர்களைக் கொல்லுங் காலத்தை எதிர்பார்த்து அக்காலம் வந்தவுடன் கொல்லக்கருதிச்) செல்லுகின்ற கால பாசத்தை ஒத்தது.

விளித்து—கூவி. எய்த்தல்—அறிதல். அளி—அருள்; அன்பு. துப்பு–பலம். களித்தல்—கள் உண்ணல்; கருவங்கொள்ளல். கால பாசம்—இயமனது கயிறுபோன்ற ஆயுதம். 'அளித்துப் பின் அநுமன்' என்பதற்கு (இராமனது) அருட்பலத்தையுடைய அநுமானென்றும் பொருள் கூறுதலுண்டு.

"கீழ் இரண்டாஞ் செய்யுளில் 'அண்டமுந் திசைகளெட்டும் நடுங்கத்தோள் கொட்டி யார்த்தான்' என்றாராதலின், இங்கு விளித்துப்பின் வேலை தாவும் வீரன்' என்றார்."

"இனி அநுமான் இலங்கையிற் சென்று தனது வாலினாற் பல அரக்கர்களைக் கட்டியும் எறிந்தும் அடித்தும் தவறாது கொல்வதனால், அவ்வாலுக்கு அரக்கர் மேற் செல்லும் கால பாசத்தை உவமை கூறுதல் ஏற்கும்."

['அநுமான் செல்லும் வேகம், இலங்கை (சேர்தற்கு வேண்டிய) அளவினதன்று; அதற்கு மிக அதிகமாயிருக்கின்றது; இவ்வளவு வேகங்கொண்ட இவன் குறிப்பு, வேறு யாதோ?' என்று விண்ணுலகத்தோரும் மண்ணுலகத்தோரும் கலக்கமடைந்தார்கள்.]

அவன் வேகங் கொள்ளும்படி முன்னுக நீட்டிக் கொண்டு சென்ற கைகள், இராம லக்குமணர் அவனுக்குத் துணையாக முன் சென்றாற் போன்றிருந்தன.

அவன் அவ்வாறு செல்லும்போது, எதிரே, கடலுள் முழுகிக்கிடந்த மைநாகமலை, ஆகாயம் அளாவ எழுந்து வந்ததானது, தேவர்கள் அமுதத்துக்காகக் கடலைக் கடைந்த காலத்தில், கடலினின்று ஐராவத யானை தோன்றுதல் போன்றது; அன்றியும், பொன்னும் மணிகளும் ஒளியிடுகின்ற அளவற்ற சிகரங்கள் கிரீடங்கள் போலவும் அருவித்திரள் மேலாடை போலவும் விளங்க, கடலிற் பள்ளிகொண்ட ஆயிரங் கிரீடங்கள் உடைய திருமால் உலகத்துள்ள தீயோரைத் தொலைக்க எழுந்ததும் நிகர்த்தது.

அம் மலைமேற் காணப்பட்ட பளிங்குப்பாறையானது, அதன்மேல் இப்பிகள் ஒலிக்கும் பாசித்திரள் இடிகள் முழங்கும் மேகக் கூட்டம்போல, (தான் ஈன்ற) முத்துக்

கள் சூழ விளங்கும் சங்கு நட்சத்திரங்களின் மத்தியில் பிரகாசிக்கும் பூரண சந்திரன்போல, எங்கும் நிலவு பரவப் பெற்ற வானத்தை ஒத்திருந்தது.

அந்த மலையைக் கண்ட அநுமான், அதனைத் தலைகீழாகத் தள்ளிவிட்டு, அப்பாற் செல்ல, அது ஒரு மானுட வடிவத்துடன் தோன்றி, "நான் விரோதியல்லன். இந்திரன் மலைகளைச் சிறகரிந்த காலத்தில், உன் தந்தையாகிய வாயு தேவன், என்னைக் கடலிற் கொண்டு சேர்த்துக் காப்பாற்றினான். அந்த நன்றியறிவால் அவன் புத்திரனாகிய உன்பால் அன்பு செய்கின்றேன். என்பால் தங்கி இளைப்பாறியிருந்து விருந்தருந்திச் செல்வாயாக' என, அநுமான்,

"யான், மேற்கொண்ட காரியம் நிறைவேறினாலன்றி ஒன்றும் புசியேன்: உன் அன்பு என்னைப் பற்றிக் கொண்டபோதே, உன்பால் தங்கியிருந்து விருந்து அருந்தினேன் போல, மகிழ்வடைந்தேன். அன்பினும் சிறந்ததாக நீ தரத்தக்க விருந்து யாதிருக்கின்றது?"

8. "முன்பிற் சிறந்தார் இடைஉள்ளவர் காதல் முற்றப்
பின்பிற் சிறந்தார் குணம் நன்றிது பெற்ற யாக்கைக்
கென்பிற் சிறந்தாயதோர் ஊற்றம்உண் டென்ன லாமே:
அன்பிற் சிறந்தாயதோர் பூசனை ஆர்கண் உண்டே?"

இ - ள்:—(தம்பால் அடைந்த யாசகரது) ஆசை நிறைவேற (க்கொடுத்தலில்) முதலாகச் சிறந்தோர் (ஆகிய முதல் வள்ளல்கள்) நடுவாக (ச் சிறந்து) உள்ளோர் (ஆகிய இடை வள்ளல்கள்) கடையாகச் சிறந்தோர் (ஆகிய கடை வள்ளல்கள் என்ற இவர்களுடைய கொடைக்குக் காரணமான) குணமாகிய அன்பு (மற்றெல்லாக் குணங்களினும்) சிறந்தது. அப்படிப்பட்ட அன்பைக்கொண்ட (உயிர் நின்ற) உடம்புக்கு (உறுதி தருவதாகிய) எலும்பினும் (உறுதி தருவதில் அதிகமாகச்) சிறந்து அமைந்ததோர் உறுதி தரும் பொருள் (ஆக அவ் அன்பு அவ் உயிர்க்கு) இருக்கின்றதென்று நிச்சயமாகக் கூறலாம். (அவ்வளவு சிறந்த) அன்பினும் சிறந்த உபசாரம் யாரிடத்தில் உண்டு? (ஒருவரிடத்தும் இல்லை.)

வள்ளல்களின் 'குணம்' அன்பு. 'இது' அந்த அன்பைச் சுட்டியது. ஊற்றம்-உறுதி; உறுதி தரும் பொருளை உணர்த்தி நின்றது. ஆமே என்பதில் ஏ தேற்றப்பொருளையும் உண்டே என்பதில் ஏ எதிர்மறைப் பொருளையும் குறித்தன.



அன்பு கொள்வது உயிராயினும், என-ம் குறள் உரை கூறுமாறு உயிர் "உடம்போ டியைந்தல்லது அன்பு செய்ய லாகாமையின்" 'இது (அன்பு) பெற்ற யாக்கை' என்றார்.

அன்பு செய்தலினும் உபசாரம் செய்தல் சிறந்த தன்றென்பது கருத்து.

["உபசாரமாகிய விருந்தினும் சிறந்த உன் அன்பை ஏற்றுக்கொண்டேன். உன் விருந்தையும், நான் செல்லுங் காரியம் சித்தியானால், திரும்பி வரும்போது ஏற்றுக் கொள்வேன்" என்று சொல்லிச் செல்வானானான்.

அப்போது, அவன் பலத்தைச் சோதிக்கும்படி தேவர்களா லேவப்பட்ட சுரசை யென்பவள், அரக்கி உருக்கொண்டு, ஆகாய வழியை அடைத்து, "என் பசி தீர்க்க என் வாயுட் புகுவாயாக. வேறு வழியில்லை" என, மூச்சுவிடும் நேரத்துக்கு முன்னே அவள் வாயுள் நுழைந்து வெளிப்பட்டான். உடனே அவள் தன் இயற்கை யுருவங்கொண்டு "இனி உன்னால் முடியாத காரியம் ஒன்றும் இன்று" என்று வாழ்த்தி வழியனுப்பினாள்.

(இன்னும் வரும்.)

# விகடப்பா

ஸ்ரீமான். ஸி. எம். இராஜு செட்டியார், சென்னை.

1. பொய் பிறந்தது புலவர் வாயினில்
நெய் பிறந்தது கடைந்த வெண்ணெயில்
கை பிறந்தது தோளிரு பக்கமும்
தை பிறந்தது மார்கழி செல்லவே.

2. ஆபத்துக் குதவாத் துட்டு, அரும்பசி யெடுக்காத் தொந்தி,
கோபத்தில் துடிக்கா மீசை, குருவினை யெதிர்க்காச் சீடன்,
சோபத்தைத் தணியாக் காப்பி, சொத்தெல்லா மழிக்காப் பிள்ளை,
பாபத்தி லுழலா ஜென்மம் பயனில்லை யெழுந் தானே.

3. தலைவலி வந்ததானால் தயவுடன் மருந்தைக் கேளும்:
மலைதனிற் பாரங்கல்லை வண்டிமே லேற்றிவந்து,
தலைதனைக் கீழேவைத்துத் தாங்கியே ஓங்கிப்போட்டால்,
தலைவலி தீர்ந்து போகும்; தவறுதி துண்மைதானே.

4. கண்வலி வந்ததானால் கருத்துடன் மருந்துகேளாய்:
கள்ளியுந் தில்லைப்பாலும் கலந்துமே கண்ணில் விட்டால்,
உள்ளது நொள்ளையாகி, ஒருவிர லாழம் பாய்ந்து,
பல்லியு முட்டையிட்டுப் பாம்பும் வந்தடைய லாமே.

# ‘தூரத்துப் பச்சை’

ஒரு சிறு கதை.

ஸ்ரீமதி. வி. விசாலாக்ஷி அம்மாள், சென்னை.

*“ சிறுமையுள் நீங்கிய இன்சொல், மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.”*

கோடினம் என்பது தஞ்சாவூரின் அருகில் ஒரு சிறு கிராமம். அதில் மிராசுதார் சுப்பிரமணிய ஐயர் வீட்டிற்குத்தான் மாடி உண்டு. சுப்பிரமணிய ஐயர் கொழுத்த பணக்காரர். சுற்றுப்பக்கங்களில் செல்வாக்குடையவர். அவர் சர்வகலாசாலையிற் படித்து F. A. பட்டம் பெற்றிருந்தார். வீட்டுப் பெண்கள் படித்து நாகரிகமாக இருக்கவேண்டும் என்பதில் மிகவும் ஊக்கம் உடையவர், அவருக்கு வெகு காலம் ஆண் குழந்தை பிறக்காமலிருந்து அநேக தருமங்கள் செய்து, வீட்டில் இராமாயணம், ஆலாலிய மகாத்மியம், முதலிய புராணங்களை வாசிக்கச் செய்து ஒரு பிள்ளைக் குழந்தை பிறந்தது. அந்த அருமை மகனுக்கு ஒரு பணக்கார வீட்டுப் பெண்ணைச் சிறுவயதிலேயே கலியாணம் பண்ணிவைத்தார். அவர்களுக்கு வரிசையாக மூன்று பெண்கள் பிறக்கவே, தனக்கும் ஒரு பேரன் பிறக்குமோ என்று ஏங்கினர். அவர் நாட்டுப்பெண் நாலாவது பிரசவத்திற்காகப் பிறந்தகம் போயிருந்த தருணத்தில், அவர் மகன் திடீரென்று இறந்து விட்டான். தன் அருமை மகனை இழந்ததுடன் வம்சமில்லாமற் போய்விடுமோ என்று, சுப்பிரமணிய ஐயர் துக்கித்தார். தன் நாட்டுப்பெண் வயிற்றிலிருக்கும் சிசு ஆண் பிரஜையாக இருக்கட்டும் என்று தெய்வங்களை வேண்டிக்கொண்டார். காலக் கிரமத்தில் அவருக்கு ஒரு பேரன் பிறந்தான். சில மாதங்கள் சென்ற பிறகு, தன் பேரன் விளையாடுவதைப் பார்க்க வேண்டுமென்று நாட்டுப் பெண்ணைத் தன் வீட்





டிற்கு அழைத்தார். அவளுக்குத் தன் கணவனில்லாத புக்ககத்திற்குப் போக மனமேயில்லை: ஆனால், சுப்பிரமணிய ஐயர், தன் பெரிய மிராசுக்கெல்லாம் உரியவனான தன் பேரன் தன் வீட்டில்தான் வளரவேண்டும் என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டார்.

ஒரு நாள் சாயங்காலம், அந்திபழுக்கும் தருணத்தில் சுப்பிரமணிய ஐயர் வீட்டில் கலவரமாக இருந்தது. சுப்பிரமணிய ஐயருடைய செல்வப் பேரன்—அவர் சிரமப்பட்டுப் பெருக்கி வைத்திருக்கும் மிராசுக்கெல்லாம் அதிபதி; அவர் ‘புத்’ என்னும் நரகத்தில் வீழாமல் காக்கப்பட்டவன்,—மாந்தம் வந்து இழுத்துக்கொண்டிருந்தான். குத்து விளக்கின் கீழ் குழந்தையைக் கிடத்திவிட்டு, சுப்பிரமணிய ஐயர், அவர் மனைவி, பெண், சகோதரி, எல்லாரும் சூழ வீற்றிருந்தார்கள். குழந்தையின் தாயார் ஒரு ஓரமாக நின்றுகொண்டிருந்தாள். அப்பொழுது ஒருவன் அந்த உள்ளுக்குள் வந்தான். அவன், உயரமாகவும், வெளீரென வெளுத்தும் இருந்தான். சுமார் நாற்பது வயதிருக்கலாம்: பார்வைக்கு அயல் தேசத்தான் போலிருந்தது. குழந்தைக்குப் பிராணன் போகும் தருவாயாயிருந்ததால், புதிதாய் வந்த மனிதனை யாரும் கவனிக்க வில்லை.

“ஐயோ! மூச்சில்லையே!”, என்றாள் சுப்பிரமணிய ஐயர் சகோதரி. எல்லாரும் ‘ஓ!’ என்று அழுதார்கள். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் சுப்பிரமணிய ஐயர் எழுந்து வெளியே சென்றார். உடனே அவர் தமக்கை, அருகில் அழுதுகொண்டு நின்ற தன் மருமகன் மனைவியை நோக்கி, “இவள் தான் அப்போதே அந்தக் குழந்தைக்கு வழிவைத்து விட்டாளே. மார்கழி மாதத்துப் பனியிலே, முற்றத்தில் குழந்தை விளையாட வேடிக்கை பார்த்தாளே. பாவம்! அது என்ன செய்யும்? இது ஒழிந்தால் தான், சொஸ்தமாகப் பிறந்தகத்தில் போய் உட்காரலாமென்று செய்தாற்போல் தானே இருக்கு!” என்றாள்.

உடனே அவள் மருமகள்—“ஆமாம்; அத்தே! அதற்குப் பால்கூடச் சரியாகக் கொடுக்காமல் கொன்றுவிட்டாள். என் தாயார் முகத்திற்குமுன் வெட்கமில்லாமல் இப்படி வாய் விட்டுக் கத்துவதிலேயே ஸாகஸம் தெரியவில்லையா?” என்றாள்.

இதுவரை ஒரு மூலையாக நின்று இவர்கள் பேசுவதைக் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்த அன்னியன், வெளியில் வந்து, அடுத்த வீட்டு வாசல் திண்ணையில்போய் உட்கார்ந்து கொண்டான். அவன் முகம் திடீரென்று சகல சௌபாக்கியத்தையும் இழந்தவன் முகம்போலிருந்தது. அடுத்த வீட்டுப்பிள்ளை கிருஷ்ணன், பட்டினத்தில் பி. ஏ. பரீட்சைக்கு படித்துக் கொண்டிருப்பவன், ‘கிறிஸ்ட்

மஸ்' விடுமுறைக்காக ஊர்வந்திருந்தான். அவன் அன்னியனைப் பார்த்து—"நீ யார்? நம்மூரானா? நான் இது வரை உன்னைப் பார்த்த தில்லையே! சுப்பிரமணிய ஐயருக்கு உறவா? ஏன் விசனப் படுகிறாய்?" என்று கேட்டான்.

அன்னியன், தன்னை ஒருவாறு சாந்தப் படுத்திக்கொண்டு, விடை அளித்தான்: 'நீ உட்காரு; நான் சொல்லுவதை சாவதானமாகக் கேள். நான் இந்த உங்கள் உலகத்தைச் சேர்ந்தவனே இல்லை. இல்லை; நான் பயித்தியக்காரனுமில்லை. நான் சொல்லச் சொல்ல எல்லாம் விளங்கும். இதோ, நம் முன் ஆகாயத்தில் மின்னும் ஒரு நக்ஷத்திரத்திலிருந்து நான் வருகிறேன். வரும் வழியில், என் அருமையான கருவிகளை நான் இழந்துவிட்டதால், என் உலகம் இது என்று இப்பொழுது என்னால் நிர்ணயிக்க முடியவில்லை. நான் ஒரு ரசாயன சாஸ்திரி. அநேக வருஷங்களாக, "தீயா" என்று எங்களால் அழைக்கப்படும் இந்த உங்கள் உலகத்திற்கு, உயிருடன் செல்லவேண்டுமென்ற அவாவால் தூண்டப்பட்டு, வெகு சிரமப்பட்டு, அநேகம் தரம் தோல்வி அடைந்து, கடைசியில் ஒரு ஆகாய விமானத்தைச் செய்து முடித்தேன். இதை என் உலகத்தவரிடம் சொல்லாமல் இரகசியமாக வைத்திருந்தேன். இப்பொழுது எங்கள் உலக மதவிஷயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன், கேள். எங்கள் பெரியவர்கள் வேதங்களில், ஒரு ஆத்மாவானது திரும்பித் திரும்பிப் பிறக்கிறதென்றும்; ஒருவன் நல்ல கருமம் செய்தால், அவன் திரும்பி எங்கள் உலகத்தில் பிறவாமல், "தீயா" என்று எங்களாலழைக்கப்படும் இந்தப் பூமியிலே பிறப்பானென்றும், இங்கும் அவன் மேல்நோக்கிச் சென்றால், அவனுடைய ஆத்மா இன்னும் ஐந்து உலகங்களில் முறையே பிறந்து, கடைசியில், "கோவனோர்ஜ்" என்ற சுவாமி இருக்கும் இடத்தில் சந்தோஷமாக என்றுமே வாழும் என்றும், சொல்லியிருக்கிறார்கள். அதில் அவர்கள் தீயாவை வர்ணிக்கும்பொழுது, 'அவ்விடம் பசுமையாக, தாமரைப்பூக்கள் உள்ள தடாகங்கள் நிரம்பி இருக்கும். அவ்வுலகத்து மனிதர்கள், நடை உடை பாவனை முதலியவைகளில், சுமாராக நம்மவர்களைப்போலவே இருப்பார்கள். ஆனால் அவ்வுலகத்து விசேஷமென்னவென்றால், அம்மனிதர்கள், ஒருவரைத் துன்பப்படுத்தும் வார்த்தைகளைச் சொல்லுவதே இல்லை. இது, ஒரு ஆத்மா முக்தி பெறுவதற்கு முதற்படி ஆகையால், நம்முலகில் அதற்கு அருகராகும்படி வாழ்ந்துவந்தவர்கள், "தீயா"விற் பிறப்பார்கள்!' என்று எழுதி இருக்கிறார்கள்.



"தீயைவிடக் கொடுமையான வார்த்தைகளால் மனிதர்கள் தங்கள் சகோதரர் சகோதரிகளைப் புண்படுத்தாமலிருக்கும் உலகத்தை, உயிருடன், நாம் இவ்வுலகத்தவனல்லன் என்ற உணர்வுடன், பார்க்கவேண்டுமென்ற ஆசையால், நான் ஒருவருடனும் சொல்லாமல், என் ஆகாயவிமானத்திலேறிக்கொண்டு புறப்பட்டேன். நான் தயாரித்திருந்த சில வெடி மருந்துகளின் வேகத்தினால், எங்கள் உலக வசீகர சக்தியின் எல்லைக்கப்பால் தள்ளப்பட்டு, உங்கள் உலக வசீகரசக்தியினால் இழுக்கப்பட்டு, சில மணிநேரங்களுக்கு முன்பு, இந்த ஊரின் அருகிலிருக்கும் தடாகத்திற்குள் விழுந்தேன். நல்லவேளை, என் விமானம், நான் கரையேறும் வரை மிதந்து, பிற்பாடு என் அருமையான கருவிகளுடன் மூழ்கி விட்டது. சுற்றிப் பார்த்தேன்; தாடகத்தில் செந்தாமரைப் பூக்களிருந்தன; எங்கும் பசுமையாக இருந்தது. இதுதான் "தீயா" என்று தீர்மானம் பண்ணிக்கொண்டேன். கொஞ்ச தூரத்தில் சில மனிதர்கள் கும்பலாக நின்றுகொண்டிருந்தார்கள். அவ்விடம் சென்று, இங்கு என்ன நடக்கிறதென்று ஒருவனைக் கேட்டேன். "மிருதுவான சொற்கள், என்பதைப் பற்றி, சர்வ சமய சகோதர சங்கத்தைச் சார்ந்தவர் ஒருவர் பிரசங்கம் செய்கிறார்" என்றான். எனக்கிருந்த அற்ப சந்தேகமும் நீங்கிவிட்டது. இந்த கிராமத்திற்கு வந்தேன். பக்கத்து வீட்டில் ஏதோ கலவரமாயிருந்ததால், அது என்ன என்று பார்க்கலாமென்றெண்ணி, உள்ளே சென்றேன். அங்கே, அப்பொழுதுதான் இறந்த தன் குழந்தைக்காகத் துக்கிக்கும் தாயாரை நோக்கிச் சில ஸ்திரீகள் சொன்ன சொற்களால், "தீயா"விலும் கடுஞ் சொற்களுக்குப் பஞ்சமில்லை என்று தெரிந்து கொண்டேன். ஐயோ! என் விமானம் கருவிகள் எல்லாம் போய்விட்டனவே! என் உலகம் எது என்றுகூடத் தெரியவில்லையே! எங்கள் வேதத்தில் சொன்னபடியின்றி, எல்லாம் எங்கள் உலகைப்போல் கொடிய மனிதர்களால் நிரம்பியிருக்கின்றது. நான் என்ன செய்வேன்? "கோவனோர்ஜ்" ஜும் இப்படித் தானிருக்குமோ, என்னவோ?" என்றான்.

"நீ சொல்லுவது நிஜமானால், வெகு அதிசயமானதே; நிஜம் என்றே வைத்துக்கொள்ளுவோம். இதிலும் உனக்கு ஆறுதல் கொடுக்கக்கூடிய இரண்டு விஷயங்கள் உள: உங்கள் உலகைவிட எங்கள் உலகு மிகக் கெடுதலாயில்லாததே முதலாவது நன்மை. நீ, உயிருடன், நினைவுடன் இருப்பதால், விசனப்படுகிறாய். இறந்த பிற்பாடு திரும்பிப் பிறக்கும்பொழுது, ஒரு

காருண்ய முள்ள கடவுளின் சட்டத்தால், நமக்குப் பூர்வஜென்ம ஞாபக மில்லாததே இரண்டாவது நன்மை. சுப்பிரமணிய ஐயர், அவர் மனைவி, மக்கள், சகோதரி, எல்லோரும், 'அன்பாகப் பேசு' என்னும் முதல் பிரமாணத்தை யுடைய சர்வசமய சகோதர சங்கத்தைச் சார்ந்தவர்களே!'' என்றான் கிருஷ்ணன்.

## மதுவிலக்கு

(672-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சிறைச்சாலை ஏலம்:—அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் ஒன்றான மாஸசூஸட்ஸி லுள்ள லோவல் என்னும் ஊரிலே, 24—9—1924 அன்று, ஒரு சிறைச்சாலைக் கட்டடம் ஏலம் போடப் பட்டு, கார்டிநல் ஓகானல் என்பவர் உயர்ந்த விலைக்கெடுத்தார். இதன் காரணம், மதுவிலக்குச் சட்டத்தால் குடி நின்று, குற்றங்கள் குறைந்து விட்டதேயாம். அக் கட்டடத்தில் தொழிற் கலாசாலை வைக்க உத்தேசமாம்.

இந்தியாவின் மதுவரி வருமானம் :—1911—12ல் ரூபாய் 11,41,46,285 ; 1920—21ல் ரூ 20,43,65,359; இப்பொழுதோ, 25 கோடிக்குக் குறைவில்லை. சர்க்கார் வரிமட்டும் இவ்வளவானால், மதுக்களை உண்டாக்கும் செலவு, உண்டாக்கி விற்போரின் இலாபம், சிப்பந்திச் செலவுகள், எல்லாவற்றையும் சேர்த்து, ஆண்டுதோறும், குடிப்பவர்கள் குடியில் செலவழிக்கும் மொத்தப்பணம், நூறு கோடி ரூபாய்க்குக் குறையா தென்று மதிப்பிட்டிருக்கின்றனர். ஏழையிலும் ஏழையான நாட்டிலே, இவ்வளவு பொருளைப் பாழாக்கி, நோய்களையும் அகாலமரணங்களையும் தரித்திரத்தையும் விலைக்கு வாங்குதல், எவ்வளவோர் மூடத்தனமாகும்!

---

விஜயமார்த்தாண்டம்—காதற்பத்து-கற்புப்பத்து. 2-ம் பதிப்பு—நவரஸம் கொழிக்கும் நாவல்-பழமொழிக் களஞ்சியம்-விலை 1—4—0.

பாலராமாயணம்—இராமாயணக் கதையை இனிமையாய்க் கூறுவது—விலை 0—12—0.

பாரிஸ்டர் பஞ்சநதம்—புதிய சிறிய ரஸிக நாடகம்—0—6—0. பஞ்சாமிர்தம் சந்தாதாரர்க்குப் பாதி விலை—மூன்றணா தான்.

பஞ்சாமிர்தம் ஆபீசு - மயிலாப்பூர்.




## மாதச் செய்திகள்

சென்னைச் சட்டசபை—3—12—24 ல் மீண்டுங் கூடி நீர்ப்பாசன மசோதாவைச் சட்டமாக்கிற்று.

டாக்டர் ஸர். ஸ்ரீ. சுப்பிரமணிய ஐயர்—5—12—24 ல் தேகவியோக மானார்.

சென்னைச் சர்வகலாசாலைப் பரிபாலன சபை—ஸெநேட்—15—12—24 ல் கூடி, இரண்டு நாள் வேலை செய்தது.

ஸ்ரீ ஞானபாதபானர்ஜீ—தேகவியோக மானார்.

அகில இந்தியா கீழ்த்திசைக் கழகம்—(ஓரியண்டல் கான்பரன்ஸ்) 22—12—24ல் சென்னையில் கூடி, மூன்று நாள்கள் விமரிசையாக நடந்தது.

பெல்காமில்—இந்தியன் நாஷனல் காங்கிரஸ் முதலிய பல சங்கங்கள் கிறிஸ்ட்மஸ் வாரத்தில் கூடின.

ஸ்ரீமங்களம்மாளும் (லேடி சதாசிவையர்), ஸ்ரீ. பாண்டுரங்கராவின் மனைவியாரும், இந்தியரல்லாத ஒரு ஸ்திரீயும், கவுரவ பிரஸிடென்ஸி மாஜிஸ்திரேட்டுக்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். குற்றஞ் செய்த சிறுவர் சிறுமிகளை விசாரித்துத் தண்டிக்கும் நியாயாதிபதிகளாக இவர்கள் இருப்பர்.

சுதேச வைத்திய கலாசாலை—சென்னையில் ஏற்பாடாகி, கனம் கவர்னரவர்களால் திறக்கப்பட்டது.

---

குறள் நானூறு:—1925 ஜனவரி மாதத்தில் வெளி வந்து விடும். உடனே ஆர்டர் செய்க—விலை வகையறா விவரம் இந்தக்காசின் பின்னட்டை வெளிப்பக்கத்தில் காண்க.

பஞ்சாமிர்தம் ஆபீஸ்
மயிலாப்பூர், சென்னை.

# பத்திராதிபர் குறிப்புக்கள்

(698-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

(49) உப்பு வரி—உயர்ந்து, உப்பின் விலை அதிகமானதால், உப்பின் செலவு, தலைக்கட்டொன்றுக்கு 21·19 பவுண்டிலிருந்து 18·11 பவுண்டுக்கு இந்த ராஜதானியில் குறைந்திருக்கிறது. பம்பாயிலும் உப்பின் செலவு குறைந்துவிட்டது. உப்பு, மனிதரின் தேக சுகத்துக்கு இன்றியமையாதது, சில வியாதிகளை விலக்குவது என்பது, வைத்தியர் துணிவு. "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்பது, தமிழ் முதுமொழி. அதன் வரியை உயர்த்தி, செலவைக் குறைத்தது சரியன்று. இஃதன்றி, உப்பைத் திருடியும், உப்புமண்ணைச் சுரண்டி உப்புக் காய்ச்சியும், ஏழைகள் செய்யும் குற்றங்கள், உப்பு மலிவாயிருக்கும் பொழுது மிகக் குறைந்திருந்தவை, மீண்டும் இப்பொழுது இருமடங்குக்கு மேல் அதிகரித்து விட்டனவாம்; ஆகையால், ஏழைகள் இருவிதத்திலும் இதனால் கஷ்டப் படுகின்றனர். உப்புவரியைத் தாழ்த்தி, இக் கஷ்டங்களை நிவர்த்திப்பது துரைத்தனத்தார் கடமையாகும்.

(50) ஸஸிபாத பானர்ஜீ—பங்காளத்துக் குலின் பிராமணர்களில், மனைவியுடன் கடல் தாண்டி முதலில் இங்கிலாந்து சென்றவர் இவரே. இவர் மகன் ஆல்பியன் ராஜகுமார பானர்ஜீ (இப்பொழுது மைசூர் ஸம்ஸ்தான திவானாயிருப்பவர்—Sir K. G. குப்தாவின் மாப்பிள்ளை) இங்கிலாந்தில் பிறந்தவர். தன் மூத்ததாரம் தவறிப்போனபின், ஸஸிபாதர் ஒரு விதவையை விவாகம் செய்துகொண்டார். அந்த நாளிலே இவ்விதச் சீர் திருத்தங்களால் இவர் பட்ட கஷ்டங்கள் அளப்பரியனவாம். இந்த நாளிலே பங்காளத்திற் காணும் ஜனசமூக நாகரிக முன்னேற்றத்துக்கு இவர் ஒரு மூல புருஷராவர். பாரா நகரம் என்னும் இவர் ஊரிலே, ஏழைத் தொழிலாளிகளுக் காகவும், பெண் கல்வி விருத்திக்காகவும், இவர் செய்திருக்கும் பேருதவிகள், பல. குலின்





பிராமணராகப் பிறந்த இவர், பின்பு, தம் குடும்பத்துடன் ப்ரும்மஸமாஜத்தைச் சேர்ந்துவிட்டார். நிறை வயதிலே, இம்மாதம் தேக வியோகமான இவர், பாரதமாதாவின் நவ சக்திக்கும் முன்னேற்றத்திற்கும் காரண பூதர்களான மகான்களில் சிறந்தவர் ஒருவராவர்.

(51) Dr. Sir S. சுப்பிரமணிய ஐயர்—"மணி ஐயர்". என்ற பொதுஜனப் பெயரால் விளங்கிய இவரை அறியாத தமிழர் எவருமே யிரார்; இந்தியா முழுதுமே, ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுங்கூட, இவரை நன்கு அறியும். 1–10–1842-ல் பிறந்த இவர், இம் மதியில், தன் 83-வது பிராயத்தில், தேக வியோகமானார். சாகும்வரை இவர் புத்தியும் மனமும், தெளிவாயும் தீவிரமாயு மிருந்தனவாம்.



Dr. Sir S. சுப்பிரமணிய ஐயர்

நாற்பதிலும் ஐம்பதிலும் நீரழிவாலும் பிளவைகளாலும் இந்தியர்கள் மாண்டொழியும் இக்காலத்திலே, இஃதொன்றே பெருஞ் சிறப்பாகும். இஃதுடன் நின்று விடாமல், இவர், தேசத் தொண்டிலும் இராஜாங்க சேவையிலும், கல்விப் பயிற்சி தத்துவ ஞானங்களிலும் பெற்

றுள்ள சீரையும் சிறப்பையும் சிந்திக்குங்கால், புத்திந்திய மாகான்களின் முதல் வரிசையில் விளங்குதற்குரியவரென்பது, தேற்றமாகும். இந்தியன் நாஷனல் காங்கிரஸின் மூல புருஷர்களில் இவர் ஒருவர்; சென்னை மாகாண ஹைகோர்ட்டின் தலை நியாயாதிபதியாக மும்முறை திகழ்ந்தனர்; ஹிந்து மதத்திலும் ஹிந்துக்களின் ஆசார அநுஷ்டானங்களிலும் காணப்படும் பழம்பாசிகளை யெல்லாம் களைந்தெறிந்து விட்டு, தற்கால நாகரிகத்துக்கும் நாட்டின் முன்னேற்றத்துக்கும் அநுகூலமாகுமாறு, ஹிந்துமதத்தையும் ஸம்ஸ்காரங்களையும் சுத்தப்படுத்திப் புத்துயி ரளித்துச் சீர்திருத்திக்கொள்ள வேண்டுமென்று பிரசாரஞ் செய்தார்; சென்னைச் சர்வகலாசாலையின் வைஸ் சான்ஸலராய்



ஸ்ரீ. சுப்பிரமணிய ஐயர்

சிலகாலமிருந்தார்; ஆநிபெஸண்டம்மையாரை அரசாங்கத்தார் 1917-ம் வருஷத்திலே காவல்செய்த காலத்தில், அப்படிப்பட்ட துரைத்தனத்தார் அளித்த "ஸர்" பட்டத்



தை ஓர் அவமானக்குறியாக மதித்துத் திருப்பி விட்டதுமன்றி, இந்தியாவில் அநீதி நடக்கிறதென்று அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் அதிபதியான உட்ரோ வில்ஸனுக்கு ஒரு லிகிதமும் அனுப்பினர். பிரிட்டிஷ் துரைத்தனத்தாரின் குடிகளில் ஒருவராகிய இவர், தன்னுட்டையாளும் பிரிட்டிஷார் அநியாயஞ் செய்கின்றனரென்று அந்நியநாட்டதிபதிக்குக் கடிதமெழுதினதின் முறைமையைக் கண்டித்து, இந்திய மந்திரியான மாண்டெகுவும் இராஜப் பிரதிநிதியும் சென்னையில் இவரிடம் நேரிற் பேசிப் பயமுறுத்தியபோது, தான் சிறைச்சாலை புகச் சித்தமா யிருப்பதாயும், போலீஸாரை அழைப்பித்துத் தன்னைத் தத்க்ஷணமே கைதியாக்கலா மென்றும், இவர் கம்பீரமாய் விடை யளித்தனராம். இந்த நாளிலே தக்ஷிணத்தில் தோன்றி மறைந்த பெரியோர்களில், அன்னிய ராசாங்க சேவையில் மகோன்னதத்தை யடைந்து விளங்கினர் சிலர்; அஃதுடன், சட்ட ஞானத்தில் இணை யெதிரில்லா மேன்மையுற் றிலங்கினர் சிலர்; தேசத் தொண்டில் ஈடுபட்டுழைத்துப்பலஇன்னல்களை யநுபவித்துப் புடமிட்ட பொன்போற் பொலிந்தனர் சிலர்; வைதிக மார்க்கத்திலோ, ஆசாரச் சீர்திருத்தத் துறையிலோ, மும்முரமாய்ப் பாடுபட்டுச் சிறந்தனர் சிலர்; தம் நயமே தம் சுகமே கண்ணும் கருத்துமாய், தம்முயர் பதவி செல்வம் செல்வாக்குக்கள் அனைத்தையும் அவ்வழிச் செலுத்தி, போக சிகாமணிகளாய்த் துலங்கினர் சிலர்; மணி ஐயரைப்போல, உத்தியோக ஏணியின் உச்சிப் படியையும், சட்ட சாகரத்தின் அக்கரையையும், தேச சேவையின் சிகரத்தையும் ஒருங்கே யடைந்து, ஸநாதன தர்மத்தில் தீவிர பக்தியும் உத்தமமான ஆசாரச் சீர்திருத்தங்களில் ஆர்வமும் சிரத்தையும் ஒப்ப வாய்ந்து, வாழ்க்கையிலே மாசற்ற ரஸிகசிகாமணி யென்னும் நற்பெயரையும் பெற்று, தீர்க்காயுஷ்மான்களாய்த் திகழ்ந்த மகான்கள் பிறரைக் குறிப்பிடுதல், எளிதன்று.

(52) இந்தியன் நாஷனல் காங்கிரஸ்—சபாநாயகர் மகாத்மா காந்தியின் உபந்நியாசத்தில் சில பாகங்களை மொழிபெயர்த்து, அடுத்த காவில் பிரசுரஞ் செய்வேன். அவர் தலைமையின் கீழ் நிகழ்ந்த இவ்வாட்டைக் கூட்டம், அமைதியாய் இனிது நிறைவேறியதாயினும், லிபரல் கட்சியினர் காங்கிரஸைச் சேராமல், லக்ஷ்மணபுரியில் வேறுகூடி, காங்கிரஸை யிகழ்ந்து பேசினதுந் தவிர;

காங்கிரஸ் சபாநாயகரின் உபந்நியாஸத்தையும், நூல் நூற்றலை அவர் கட்டாயமாக்கி விட்டதையும் பார்த்தால், இனி லிபரல் கட்சியார் காங்கிரஸைச் சேர முடியாதென்று கூறி யிருக்கின்றனர். இந்த ஏற்பாடு ஒரு வருஷத்துக்கே யென்றும், இதைச் செவ்வையாய் நடத்தினால், இந்த ஒரு வருஷத்தில் சுயராஜ்யம் நெருங்கிவிடு மென்றும் கூறப் பட்டிருக்கிறது. இந்திய சுயராஜ்யம் அவ்வளவு சுலபமாய்க் கிடைத்து விடாதென்பது பலர் கொள்கை. ஆயின், சுயராஜ்யக் கட்சியாரின் மனப்பூர்வமான உதவியையுங்கொண்டு, ஒரு வருஷத்திற்குள் வெளிநாட்டுத்துணி இறக்குமதியை முற்றிலும் நிறுத்தி, முகம்மதியரையும் ஹிந்துக்களையும் ஒன்று சேர்த்து, தீண்டாமையையும் ஒழித்து விட்டால், சுயராஜ்யம் கைவசமாயிற் றென்றே கொள்ளலாம்......... குடியேற்ற வெளி நாடுகளி லுள்ள இந்தியரைப் பற்றிக் காங்கிரஸில் ஒரு பிரேரணை நிறைவேறிற்று. மகாத்மாவின் மனப்போக்கைப் பார்த்தால், மேலே கூறிய மூன்று விஷயங்கள் தவிர, மற்றெதிலும், 1925 வருஷ முழுதும், எவ்விதக் கவனமும் செலுத்தப்பட மாட்டா தென்று தோன்றுகிறது. வெளிநாட்டிந்தியர்களின் விஷயமோ, ஒரு வருஷம் காத்திருக்கக் கூடிய தன்று. அவர்களைக் காக்கச் சொல்லுதல், மரணதாக மெடுத்தவனுக்குக் 'கிணறு வெட்டப் போகிறோம்; சிறிது பொறு' என்பது போலாகும். அதனால், அகில இந்தியா காங்கிரஸ் கமிற்றியார், வெளிநாட்டிந்தியர் விஷயத்தைக் கவனித்தற் கென்றே ஒரு தனிக் கமிற்றியை ஏற்படுத்தி, அவ்விஷயத்தில் உழைக்கும்படி செய்தல் அவசியம். இப்பொழுது பாராளுமன்றத்தையாளும் கன்ஸர்வெடிவ் கட்சியாரிடமிருந்து, எவ்வித சிறு சௌகரியத்தையோ நியாயத்தையோ பெறுதல், எளிதன்று; ஆயினும், அதனால், தாய்நாட் டிந்தியர் வெளிநாடுகளி லுள்ள தம் சகோதரி சகோதரர்களுக்காக யாதுமே செய்யா திருந்துவிடின், இவர்களின் கதி இன்னும் கொடியதாகிவிடு மென்பது திண்ணம். ஆகையால், தமது மூன்று முக்கிய கடமைகளோடு நான்காவதாக இதையும் பாராட்டிக் காங்கிரஸார் காலதாமத மின்றி உழைக்கக்கடவர்.

(53) குறள் நானூறு—இந்த ஜனவரி (1925) மாதத்தில் இந்நூல் வெளிவரு மென்று நம்புகிறேன். இந்தக் காகிதத்தின் பின்புற அட்டையின் வெளிப்பக்கத்தில் [illegible] பக்கத்தைக் காண்க.

ஆசிரியர்.